CT 20562

# சிலம்பின் தகுதி

மார்க்கபந்து சர்மா

கிடைக்குமிடம் :
தொல்காப்பியர் நூலகம்
202, ஜானி ஜான் கான் தெரு,
சென்னை-14.

முதற் பதிப்பு — மார்ச் 1962.
ஆசிரியர் பொறுப்பில் வெளியிடப் பெற்றது.

விலை ரூ. 1-75

அச்சிட்டோர்:
முத்தையா அச்சகம்
202, ஜானி ஜான் கான் தெரு,
சென்னை - 14.

CT 20562

020562

# முன்னுரை

சிலப் பதிகாரத்தைப் பற்றிய மூன்று நூல்களை வெளியிட் டிருக்கின்றேன். இன்னும் மூன்று வெளி வரும். வந்தவை, நான் அறிந்து கண்டவை; வருபவை நான் அடி பணிந்து உணர்ந்தவை. எனவே, முன் வந்தன ஆராய்ச்சி நூல்கள்; வருவன அஞ்சலி நூல்கள்.

ஆராய்ச்சிகளையும் அஞ்சலிகளையும் இணைத்துக் காட்டும் தகுதி யுடையது இச் சிறு நூல். இதன் முதற் கட்டுரை ஆராய்ச்சி; அடுத்தது அஞ்சலி. இனி வரும் நூல்களுக்கு இது முன் மாதிரியாகும். அடிகளின் கதைத் தொடக்கத்தில் உள்ள ஓவியங் கள் இரண்டின் விளக்கமே இக் கட்டுரை. இவ் வோவியங்கள் வருணனை யமூலமாகக் கொண்டவை.

ஊர்வலங்கள் இரண்டினை விடுத்து, அடிகள் தம் கதையைத் தொடங்கி யிருக்கின்றார். அவற்றுள் முதலாவது அமைதியுடையது, மௌனம் என்பது இடையருப் பேச்சு என்றும், பேசினால் அதன் ஆற்றல் தடைப்படும் என்றும் தக்ஷிணா மூர்த்தி தம் சீடருக்கு மௌனத்தால் அறிவு கொளுத்தினார் என்றும் தத்துவ நூல்கள் கூறும். நமக்கு அடிகள் தக்ஷிணா மூர்த்தியே யாவார்!

இனி வரும் மூன்று நூல்களும் சிலம்பின் ஓவியம் என்ற தலைப்பின் மூன்று பகுதிகளாம். அவற்றுள் பூக்கள் என்பது, கண்ணகியை அடிகள் பூவினுக்கு ஒப்பாகக் காட்டி, காப்பியத் தலைவியின் வாழ்க்கையை விளக்கப் படைத்த இருபத்து நான்கு ஓவியங்களின் விளக்கமாகும்; உலகின் பெருங் காப்பியங்களுள்

இந்நூல் ஒளி மிக்கது என்பதனை அனைவரும் ஒப்பிப் போற்ற வைக்கும் சிறப்பியல்பினை எடுத்து விளக்கும்.

கொடிகள் என்பது இறைநிலை யெய்தியவளைக் கொடிக்கு ஒப்பாகக் காட்டி, அடிகள் அவள் எப்படி மெய்யறிவு பெற்றாள் என்பதனை விளக்கப் படைத்த பன்னிரண்டு ஓவியங்களின் விளக்கமாகும். மக்களைத் தன்னுணர்வு பெறத் தூண்டும் நூல்களுள் இது தனிச் சிறப் புடையது என்பதனை எடுத்துக் காட்டும்.

பூங்கொடி என்பது மாதவியைப் பூவுக்கு ஒப்பாகக் காட்டி யுள்ள பத்து ஓவியங்களையும், கொடிக்கு ஒப்பாகக் காட்டி யுள்ள ஐந்து ஓவியங்களையும் விளக்கும். முதலிரண்டு பகுதிகளும் இரசனையின் அளவுடையன வாகவும், மற்றது இந்நூலின் அளவினதாகவும் இருக்கும்.

பதினேழாம் நூற்றாண் டிலிருந்து. இந் நூற்றாண்டின் தொடக்கம் வரை, மேனாட்டில் வளர்ச்சி பெற்ற விமரிசனக் கலையின் சிறந்த துறைகள் இரசனையால் விளக்கிக் காட்டப் பெற்றன, இந் நூற்றாண்டில், சென்ற முப்ப தாண்டுக ளாகப் போற்றி வளர்க்கப் பெறும் புதிய துறையை ஓவிய நூல்கள் விளக்கும். கவிஞன் திறனை ஆராய்ந் தறிய முற்பட்ட ஆய்வாளர்கள், இப்பொழுது அவன் உள்ளத்தை உணர்ந்து கொள்ள முற்பட் டிருக்கின்றனர்.

ஓவியங்களை உணர்ந்து கொள்வது கவிஞனை உணர்ந்து கொள்ளுவ தாகும். அடிகளையும், அவர் படைத்து இயங்க வைத்திருக்கும் எழில் நிறைந்த மங்கைய ரிருவரையும் வரும் நூல்களால் நன்கு தெரிந்து கொள்ளுவோம். இவற்றால் மேனாட்டில் விமரிசனக் கலை இன்று பெற்றுள்ள வளர்ச்சியை நம் மொழியும் பெற் றிருப்பதாக ஆகும்.

அடிகளைச் சர ணடைந்ததனால் நான் பெற்ற பயன்கள் பல வாம். அவர் கவிஞர்; மெய் யறிவு பெற்றவர்; தம்மைப் போலவே நாமும் உய்ய வேண்டி இப் பெரு நூலை நமக் களித் திருக்கின்றார். உலகின் ஒப்புயர் வற்ற நூலை நமக் களித்த வள்ளல்!

இருபது ஆண்டுகளுக்கு மேலாக அவர் நூலோடு நெருங்கிய தொடர்பு கொண் டிருப்பது நற் பயனை நல்கி யிருக்கின்றது. இரு காரணங்களைக் காட்ட முடியாத எக் கருத்தையும் வெளி யிடா திருக் கும் பண்பு இத் தொடர்பினால் பெற்ற பயனே யாகும் இத்துணை நாள்கள் கழித் தேனும் அவரைச் சர ணடைவதே அறிவுடைமைக் கழகாகும் என்பதனை உணர்ந்து கொள்ள வைத்ததும் அவர் அருளே யாகும்! அவர் காப்பியத்தை முற்றிலும் உணர்ந்து கொண்டு விட்டேன் என்று கூற முடியாது; அவ் வாறே அவரை முற்றிலும் சரணடைந்தேன் என்றுங் கூறுவதற்கில்லை. எனவே குறைகள் காணப் படின், வியத்தற் குரியன வாகா!

*மார்க்கபந்து சர்மா.*

15—3—62.

ஆசிரியரின் பிற நூல்கள்

| | | |
|---|---|---|
| சிலம்பின் பாயிரம் | 2 | 00 |
| சிலம்பின் இரசனை | 3 | 75 |
| சிலம்பும் மேகலையும் | 1 | 50 |
| குறிஞ்சிக் கலி | 3 | 00 |
| குறிஞ்சிப் பாட்டு | 1 | 50 |
| கபிலர் ஓவியம் | 1 | 50 |

அச்சில்

சிலம்பின் ஓவியம்

1. பூக்கள்
2. கொடிகள்
3. பூங்கொடி

# உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| புதுமை : | | 9—75 |
| 1. | நிலைமை | 9 |
| 2. | கடமை | 15 |
| 3. | கனவு | 26 |
| 4. | நனவு | 45 |
| 5. | நிறைவு | 55 |
| 6. | துறவு | 65 |
| பெருமை : | | 76—124 |
| 1. | வித்து | 76 |
| 2. | முளை | 86 |
| 3. | நாற்று | 95 |
| 4. | கரு | 105 |
| 5. | விளைவு | 110 |
| 6. | துய்த்தல் | 116 |


020562

# மாற்றங்கள்

| பக்கம் | வரி | இருப்பது | இருப்பின் நல்லது |
|---|---|---|---|
| *13* | இறுதி வரி | பேரரசனை | பேரரசினை |
| 26 | 14 | பொதியி லிருந்து | பொதியிலி லிருந்து |
| 36 | *7* | செயல் | செய்தி |
| 37 | 3 | பொறுமையா லன்று | பொருமையா லன்று |
| *40* | 27 | பெய்தலை | செய்தலை |
| 46 | 12 | அதன் | அவன் |
| 72 | 4 | அவருடைய | அவளுடைய |
| 83,4 | 27,2 | முறையை, யால் | முரையை, யால் |
| 94 | *23* | எப்படி | இப்படி |
| 99 | *11* | பிணக்கும் | பிணிக்கும் |
| 104 | — | national life | national epic |
| *115* | 29 | வினையினை | விளைவினை |

# புதுமை

## 1. நிலைமை

சிலப் பதிகாரம் நம்மொழியில் முதன் முதலில் தோன்றியுள்ள பெருங்காப்பிய மாகும். கலை வளம் மலிந்த விப் பெருநூல் காலத்தினால் மட்டும் முதன்மை யுடைய தன்று; கருத்தின் ஆழத்தினாலும், நடையின் பெருமிதத் தாலும், அமைப்பின் அழகாலும், பொருளின் பெருமை யாலுங் கூட இது தமிழ் நூல்களுள் முத லிடத்தைப் பெறும் பெற்றியுடைய தாக விளங்குகின்றது. இச் சிறப் பியல்புகள் உலகத்துப் பெருங் காப்பியங்களுள் ஒன்றாய்க் கருதப் படும் பெருமையையும் இதற்கு அளிக்கின்றன; அவற்றுள் பேரொளி வீசும் பண்பினையும் இதற்குத் தந்துள்ளன.

சிலப் பதிகாரத்தின் தோற்றம் சங்க காலத்தின் முடி வினையும், காப்பிய காலத்தின் தொடக்கத்தினையும் ஒருங்கே புலப் படுத்துகின்றது. தமிழ்மொழியின் இலக்கிய சரித்திரத்தில் இஃதொரு திருப்பு மையமாய்த் திகழ்கின்றது. தனக்கு முன் தோன்றிய சங்கப் பாடல்களின் சிறப்பை யும், பெருமையையும் இது புலப் படுத்துகின்றது; பின்னர்த் தோன்றி யுள்ள பெரு நூல்களின் தகுதியைத் தெரிந்து கொள்ளத் துணை புரிகின்றது. எனவே, இதனை முற்காலச் செந் தமிழ் வழக்குகட்கும், பிற் காலப் பைந் தமிழ் வழக்கு கட்கும் நடுவண் நின்று இரு மருங்கும் பேரொளி வீசி நலம் புலப் படுத்தும் கலங்கரை விளக்கம் என்பது பொருளும், பொருத்தமும் உடைய தாகும்.

ஆங்கில அறிஞரொருவர், ஐரோப்பாக் கண்டத்தில் தோன்றிய நான்கு பெருங் கலைக் காப்பியங்களை ஒப்பிட்

டுக் காணத் தேர்ந்து கொண்டார். அவை வெவ்வேறு மொழியில் வெவ்வேறு காலத்தே தோன்றியன. அவற்றை அவை தோன்றக் காரணமா யமைந்த அவ்வந் நாட்டு நிலைகளுடன் அவர் பொருத்திக் கண்டார். அதனால் ஒரு நாடோ சமுதாயமோ, அல்லது பேரியக்கமோ தன்னுடைய மேன்மை சுருங்கி, மடிவெய்துங் காலத்துக் கலைக் காப்பியங்களைத் தோற்றுவிக்குந் தகுதி பெறுகின்றது என்ற உண்மையை அவர் கண்டார். சிலப்பதிகாரத்தின் தோற்றம் அவர் கண்ட முடிவினை வழி மொழிகின்றது.

சங்க காலத்தில் தமிழகம் எல்லாத் துறைகளிலும் சீரும், சிறப்பும் பெற்றுத் தழைத்து விளங்கிற்று. எனினும் அதன் அழிவின் விதையையும், அக்காலத்தியநிலை பெற்றேயிருந்தது. மக்களுடைய ஒழுகலாற்றின் தரம் குறைந்து வருவதனைக் கண்ட வள்ளுவர், அவர்களை நல்லாற்றிற் செலுத்தும் நோக்கத்துடன் தம் நூலை யருளினார். அவர், பொது மக்கள், அரசர் என்ற இரு திறத்தாருக்கும் ஏற்ற அறங்களை எடுத்துக் காட்டி வற்புறுத்தியுள்ளார். இதனால் இவ்விரு சாரரும் ஒப்ப உயர்ந்தாலன்றி நாடு நன்மை யடையாது என்பது புலனாகின்றது.

அவருக்கு ஒன்று அல்லது இரண்டு நூற்றாண்டுகள் பின்னர்த் தோன்றியவர் இளங்கோ வடிகள். வள்ளுவர் காட்டிய வழியில் அரசரோ, மக்களோ விருப்பங் காட்டாதிருந்ததனை அவர் கண்டார்; அனைவரும் எளிதாகப் பின்பற்றக் கூடிய நல்லறங்களை ஒரு கதையின் வாயிலாய்த் தெரிவித்துள்ளார். தாம் காட்டிய வழியில் மக்கள் செயற்பட்டால் நல்ல பயனைப் பெறுவர் என்பதனையும் அவர் தம் கதையின் வாயிலாகவே புலப்படுத்தியிருக்கின்றார். ஆனால் அவரும் வெற்றி பெற்றிருக்கவில்லை.

அடிகள் வாழ்ந்து வந்த காலத்தில் தமிழகம் ஒரு பேரிழவினை நோக்கி விரைந்து சென்ற வண்ணமிருந்தது. இதனைத் தம் நுண்ணுணர்வினால் அவர் அறிந்து கொண்டார்

ஐம்ப தாண்டுகளுக்கு மேலாகப் பற்றற்ற வாழ்க்கையினை மேற்கொண்டிருந்தவரே யெனினும், தாய் நாட்டின் போக்கை மாற்றி, அதனை மேன்மையுறச் செய்ய விழைந்தார். ஆனால் அவர் காட்டிய வழிகளை அக்கால மக்களோ அரசரோ, மதிக்கவில்லை. அதன் பயனாய்ப் பாண்டி நாடு களப்பிரர் கைக்குள் சிக்கியது. சோழ அரசு பல்லவர் ஆட்சிக்குள் ஒடுங்கி விட்டது.

சங்க இலக்கியம் தழைக்கவும் சிலப்பதிகாரம் தோன்றவும் நிலைக்களனாக விருந்த சேர நாடு, அடிகள் காலத்துக்குப் பின் தமிழகத்தை விட்டுப் பிரியத் தலைப் பட்டு விட்டது அப்பகுதியை இழந்து விட்டமைக்காக நாம் சிறிதும் வருந்த வேண்டாம். ஏனெனில் சிலப்பதிகாரம் நம்முடையதாகி விட்டதே! இல்லையேல், உலகின் மாண்பு மிக்க கலைக் காப்பியத்தைப் பெற்றிருக்கின்றோம் என்ற பெருமித உணர்ச்சியை நாம் வேறெதனைக் கொண்டு உரிமையுடன் கூறிக் கொள்ளக் கூடும்?

நாடு, மொழி, சமுதாயம் என்ற மூன்றினிடத்தும் அடிகளுக்கிருந்த பேரன்பே இக் காப்பியமாக உருப் பெற்றது என்பது மிகையாகாது. இவை மூன்றும் மேம்பட அவர் தக்க வழிகளைக் காட்டியிருக்கின்றார். அவர் வாழ்ந்த கால நிலையைக் கருதிக் காட்டப் பெற்றன வேனும், அடிகள் வகுத்துத் தந்த வழிகள் இன்றும் பின்பற்றி ஒழுகத் தக்க பண்புடையனவேயாம். அவற்றைச் செயற் படுத்துவது நமக்கு நன்மையைப் பயக்கும்; பின் வருவோரை நம்மை மதிக்க வைக்கும்.

மிகப் பழங்காலத்திலிருந்தே தமிழகம் மூன்று முடியரசுகளைக் கொண்டதாக இருந்து வந்துள்ளது. சங்க இலக்கியத்தின் வாயிலாய் நாம் அறிந்து கொள்ளும் எண்ணற்ற சிற்றரசுகளுங் கூட, சரித்திர காலத்துக்கு முன்னரிருந்தே தழைத்து வந்தவையாம். எனினும், இம் மூன்று முடியரசுகளுக்கும் மட்டுமே கொடியும், சின்னமும்

கூறப் பெறுகின்றன. இச் சிற்றரசுகளுக்குத் தனித் தனி அடையாளங்களெதுவு மில்லையாகையால், இம் மூன்று முடியரசுகளும், சிற்றரசுகளால் தோற்றுவிக்கப் பெற்றவை என்பதனைப் புலப் படுத்திக் கொள்ளலாம்.

மூவேந்தரும் கூடி முற்றுகை யிட்டும் பாரியை வெல்ல முடிய வில்லை. (புறம்: 110) அவர்களுள் எவரும் காரியின் துணையில்லாமல் தம்மை யொத்த ஏனை வேந்தரை வெல்ல முடியாது. (புறம்: 122) இப் பாரியும், காரியும் மனம் வைத் திருந்தால் தம்மைப் பேரரசராக மாற்றிக் கொண் டிருக்க முடியாதா? இம் மூவேந்தரும் ஒருவரை யொருவர் வெற்றி கொண்ட தாகச் சங்கப் பாடல்கள் பல வற்றா லறிகின்றோம். சோழ, பாண்டிய ரிருவரும் சேரனுக்குத் திறை தந்த தாகச் சிலப்பதிகாரம் கூறுகின்றது. எனினும், வென்றவர் தோற்றவர் அரசையும், நாட்டையும் கைப் பற்றிய தாகத் தெரிய வில்லை.

முடியரசுகள் மூன்றும், அவற்றின் தலைவராக விளங்கிய வருடைய அறிவு, அல்லது ஆற்றல் காரணமாகத் தழைத் திருக்க வில்லை என்பதனில் ஐய மில்லை. இவை தமிழ ரல்லாத பிறரால் அழி வெய்தும் வரை, அறுபடாமல் ஒழுகி வந்தன. எனவே, இவை சரித்திர காலத்துக்கு முன்னரே, சிற்றரசுகள் பலவற்றால் தேர்ந் தெடுத்து அமைத்துக் கொள்ளப் பெற்றவை என்பது விளங்கும். இக் காரணம் பற்றியே எவரும் இவற்றின் நிலையைக் குலைக்க முற்பட வில்லை. தலைவர், ஆண்மையில்லாதவராக விருந்த நாட்களிலும் இவை அழி வெய்த வில்லை.

சிற்றரசுகள் ஒன்றோ டொன்று போட்டியும், பொறாமையும் கொண்டு தத்தம் அழிவினைத் தேடிக் கொள்ளாமல் காக்கவே, இம் முடியரசுகள் தோற்றுவிக்கப் பெற்றன. ஆனால், இம் முடியரசரே தம்முள் ஒருவரோ டொருவர் பகையை வளர்த்துக் கொண்டவராக விருந்தனரே! ஆகவே பழங் காலத்தில் தோன்றிய இவ் விணைப்பு, பெயரளவில்

உயிருட னிருந்ததே யல்லாமல், பய னுடைய தாக விருக்க வில்லை. மேலும், இது தோன்றிய காலத்தில் தமிழகத்தைத் தம் முடைய ஆட்சிக் குள் கொண்டு வரக் கூடிய பே ரரசு கள் எதுவும் இல்லை. அடிகள் காலத்திலோ, நிலை முற் றிலும் மாறிவிட் டிருந்தது

தமிழகத்தின் வட வெல்லை தொடங்கிக் கங்கைக் கரை வரை பரவி யுள்ள பெரும் பரப் பனைத்தையும் நூற்றுவர் கன்னர் தம் ஆட்சிக்குள் அடக்கிக் கொண் டிருந்தனர். அவர்கள் விரும்பி யிருந்தால் எளி தாகக் குமரி முனை வரை தம் ஆட்சியைப் பெருக்கிக் கொண் டிருக்கலாம். ஆனால் அவர்களை அவ்வாறு செய்ய வொட்டாமல் தடுத்தவன் சேரன் ஒருவனே யாம். நூற்றுவர் கன்னர் இரண்டு தலை முறை களாகச் சேர ருடைய சிறந்த நண்பர்களாக இருந்து வந்தனர். சோழன் சேர னுடைய மாமன் மகன். எனவே, நூற்றுவர் கன்னர் எப்படித் தமிழகத்தின் எல் லைக் குள் காலை வைப்பர்?

இமய வரம்பன் நெடுஞ் சேர லாதன் இமயத்துக்குச் சென்ற நாட்களில், நூற்றுவர் கன்னர் சிற் றரசர்களே யாம். அவர்கள் தம் ஆட்சியின் எல்லையை ஆண்டு தோறும் பெருக்கிக் கொண்டே வந்தனர். சேர லாதனுக் கும் நூற்றுவர் கன்னருக்கும் தோன்றிய நட் புரிமை, செங்குட்டுவன் காலத்தும் அறு படாம லிருந்தது. அதுவே அன்று தமிழகத்தைக் காத்த தாகும். இதனைச் சோழ பாண்டியர் உணர்ந்து கொண் டிருந்த தாகத் தெரிய வில்லை. அவர்க ளிருவரையும் செங்குட்டுவன் தோற் கடித் திருக்கி ருன். இதுவே, அவர்களை அவ னிட மிருந்து பிரித்து வைத் திருந்தது.

மிகப் பழங் காலத்தில், அக் கால நிலைக்கேற்ப, சிற் ற ரசுகள் பல சேர்ந்து மூன்று முடி யரசுகளை அமைத்துக் கொண்டதனைப் போலவே, இம் மூன்று முடி யரசுகளும் இணைந்து ஒரு பேர ரசனைத் தோற்றுவித்துக் கொள்ளுவது

தம்முடைய கால நிலைக்கு ஏற்றது என்று அடிகள் கருதி யிருந்தார். தமிழகம் பிறருடைய தாக்குதல்களி னின்றும் தன்னைக் காத்துக் கொள்ளவும், தழைத்து வளரவும், மக்களை அமைதி யுடைய ஆட்சியி லிருக்கச் செய்யவும் இவ் விணைப்பு தகுதி மிக்கது என்பதனை அவர் உணர்ந் திருந்தார் ஆகவே, தன்னுடைய செல்வாக்கைப் பெருக்கிக்கொள்ளும் நோக்கத்துடன், தமிழகத்தின் தலைவனாக விருக்க விரும்பிச் செங்குட்டுவன் மேற்கொண்ட செயல்களை விவரித் திருக்கின்றார்.

நாட்டினைப் போலவே, தமிழ் மொழியும் மூன்று பிரிவுகளைக் கொண்ட தாக விளங்கி யிருந்தது. அவற்றுள் இயல் என்ற பிரிவினைச் சேர்ந்த சங்க காலத்துப் பாடல்கள் இன்றும் இருக்கின்றன. ஆனால், இசை, நாடகம் என்ற பிரிவுகளைச் சேர்ந்த இலக்கியங்கள் அனைத்தும் வெகு காலத்துக்கு முன்னரே யிறந் தொழிந்தன. அவற்றின் இலக்கணங்களும் இறந்து வருகின்றன என்று அடியார்க்கு நல்லார் தம் உரையில் குறிப் பிட் டுள்ளார். அடிகள் இந் நிலையை எதிர் பார்த்தார் போலும்! முத் தமிழும் விரவி யிருக்கும் முறையில் தம் பெரு நூலை அமைத் தளித் திருக்கின்றார்.

தம் முடைய நோக்கங்களில், தம்மால் நிறை வேற்றக் கூடியதனை அடிகள் செயற் படுத்திக் காட்டி யிருக்கின்றார். அதனால், தமிழ் மூன்று பிரிவுக ளாக விளங்கியதற்கு நமக்குச் சான்று கிடைத் துள்ளது. இதனைக் கொண்டே, அவருடைய அரசிய லிணைப்பு நிகழ்ந் திருந்தால், ஐந் தாறு நூற்றாண்டுகள் தமி ழகம் பிற ருடைய ஆட்சிக்கு அடங்கி யிருக்காமல் தப்பி யிருக்கலாம் என்று கூறலாம். முத் தமிழும் சேர்ந்து உருப் பெற்ற காரணத்தால், சிலப் பதிகாரம், அதற்குப் பின்னர்த் தோன்றி யுள்ள பெருங் காப்பியகளினும் சிறந்ததாகக் காணப் படுகின்றது. அடிகளுடைய செயல் தமிழ் மொழியை வள முறச் செய் துள்ளது.

அடிகள் காலத்துக்கு முன்னரேயே சமயங்கள் பல தோன்றத் தொடங்கி விட்டன. அவை மக்களைத் தத்த மினத்தில் சேர்த்துக் கொள்ள முயன்றன. சமய வேறு பாடுகளிற் கருத்தைச் செலுத்துவது மக்களை நல் லாற் றில் செல்ல விடாது என்று அடிகள் கருதினர். எனவே, அவர் எல்லாச் சமயங்களையும் ஒப்பப் போற்றி யிருக்கின் றார். சமயங்கள் முடிவாகக் கூறும் உண்மையை உணர்ந்து கொள்ளுவதனில் நாட்டங் கொள்ள வேண்டுமே யல்லால். அவற்றின் புற வமைப்புகளிற் கருத்தைச் செலுத்துவது அறிவுடைமை யாகாது என்பது அடிகள் கருத்தாகும். எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும், அப் பொருள் மெய்ப் பொருள் காண்ப தறிவு என்று வள்ளுவரும் கூறி யிருக்கின்றா ரன்றோ?

அடிகள் காலத்துக்குப் பின் தமி ழகமும், மொழியும், மக்களும் நல்ல நிலையி லிருக்க வில்லை. இடைக் காலத்தே சோழப் பேரரசு தோன்றும் வரை தமிழகத்தின் சரித்திரம் பெருமை படக் கூடியதாக விருக்கவில்லை. சோழப் பே ரர சின் சாதனைகளைக் கொண்டே, அடிகள் விரும்பிய இணைப்பு பயனளித் திருக்கும் என்பதனைத் தெரிந்து கொள்ளலாம். இவ்வாறே அவர் தனி மனிதன் மேம்படக் காட்டியுள்ள வழியும் ஒப் பற்ற தாகும். அது மனிதனைத் தன் முழு வளர்ச்சியையும் பெற்று இறை நிலையை எய்தத் துணை செய்யும். அதனை யறிந்து, மேற்கொண்டு, மெய் யுணர்வு பெற்று வாழ முயறலே நாம் அடிகளுக்குக் காட் டக் கூடிய நன்றி யறித லாகும்.

## 2. கடமை

செங்குட்டுவன் கண்ணகிக்குக் கோயில் கட்டியதும், பத்தினித் தெய்வத்தின் படிமத்தை யெழுத இமயஞ் சென்று கல்லெடுத்து வந்ததும், இக் காப்பியத் தலைவியின் நிலைமையை உயர்த்துகின்றன. அவளுடைய பெருமையை உணர்த்துகின்றன. அவன் இத் திருப் பணியைச் செய்ய

முன் வந்ததே. அடிகளுக்கு இக் காப்பியத்தை யியற்றித் தர வொரு தூண்டுகோலா யமைந் திருக்கின்றது. நமக்குக் கண்ணகியை நன்கு அறி முகப் படுத்தி வைத் திருப்பவன் அவனே யாம்.

அடிகள் எத்துணை முயன் றிருப்பினும், செங் குட்டு வன் செயல்களால் கண்ணகிக்குக் கூடுஞ் சிறப்பினை யளித் திருக்க முடியாது. அவனை யிப்பொழுது நா மறிந்துகொள் ளும் நிலையில், நம்மை உணர்ந்து கொள்ள வைத்திருக்க முடியாது. செங்குட்டுவன் அவள் பெருமையைப் பாரோ ரறியப் பறை சாற்றிப் பரப்பி யுள்ளான். ஆகவே, அவனை யிந் நூலில் குறிப்பிட்டுப் பாராட்டுவது, ஆசிரியரின் கடமையாகும். அடிக ளதனைக் கடமை யுணர்ச்சி யுடன் செய்திருக் கின்றாரே யல்லாமல், அவன் தமக்கு மூத்தோன் என்று கருதிச் செய் திருக்க வில்லை.

பௌத்த சமயத்தை அசோகன் பரப்பியது போலவே, செங் குட்டுவன் பத்தினி வழி பாட்டினைப் பரப்பி யுள்ளான் அசோகன் சமயப் பிரசாரகர்களைப் பல தேயங்களுக்கு மனுப் பி வைத்துப் பௌத்த சமயத்தைப் பரப்பினான், செங் குட்டுவன், பல தேய மன்னர்களை வஞ்சிக்கு வர வழைத்து அவர்களைத் தான் வகுத்த வழிபாட்டினை மேற் கொள்ளச் செய் திருக்கின்றான். அசோக னுடைய முயற்சியினைப் போலவே, சேர னுடைய முயற்சியும் அக் காலத்தில் வெற்றி பெற்றது.

மாளுவ நாட்டில் அக் காலத்தே கட்டப் பெற்ற பத்தி னிக் கோயி லொன்று இன்று மிருப்பதாகத் தெரிகின்றது. இலங்கையில் தொழப் பட்ட பத்தினி யின் படிவ மொன்று இலண்டன் பொருட் காட்சிச் சாலையி லுள்ளது. தமிழ் நாட்டிலும், அதன் சுற்றுப் புறங்களிலும் இவ் வழிபாடு உரு மாறி வழங்கி வருகின்றது. இவற் றால் செங்குட்டுவன் கண்ணகிக்குச் செய்துள்ள தொண் டின் பெருமையை யுணர்ந்து கொள்ள முடிகின்றது.

ஆகவே, அவள் சரிதையைக் கூறுங் காப்பியத்தில் சேரன் சிறப்பான இடம் பெறுதல் தகுதியும், பொருத்தமு முடையதே யாம்; அவனே யதற் குரிமை யுடையவ னென்றுங் கூறலாம்.

செங்குட்டுவனை யித் திருப் பணியைச் செய்யச் செலுத்தியவள் இளங்கோ வேண்மா ளாவாள். புகார் நகரத்துப் பெண்டி ரனைவரும் கண்ணகியைப் போற்றி யிருக்கின்றனர். பாண்டியன் தேவி அவ ளிணை யடிகளில் வீழ்ந்து வணங்கினாள். மதுரைப் பெண்டிர் அவளைக் கற்பரசியாகக் கருதித் தொழுதனர். சேர மா தேவி, அவளுக்குக் கோயி லெழுப்பி, தான் வழி பட்டதனோடு, பிறரும் வழிபடவாய்ப் பளித் திருக்கின்றாள். இவ்வாறு தம் மினத்தவ ராலேயே விரும்பிப் போற்றப் படும் பெருமையைப் பெற் றிருந்த கண்ணகியின் நிலைக்கு ஓ ரெல்லை காட்டக் கூடுமா?

கோவலனைக் 'கண் டேத்துஞ் செவ்வேள்' எனப் பெண்கள் பாராட்டியதனைக் கேட்ட பின்னரே, ஆண்களும் பாராட்டத் தொடங்கினர். ஆனால் கண்ணகியோ தம் மினத்தவ ராலேயே முதன் முதலிற் பாராட்டப் பெற்றாள். இத்தகைய பெறற் கரிய பேற்றினைப் பெற் றிருந்தவள் மண் ணக மாதர்க்கு அணி யாக விளங்குபவ ளென்பதனில் ஐய மில்லை; அவளை விண் ணக மாதர் விரும்பித் தம் விருந்தின ளாக ஏற்றுக் கொள்ள விழைந்ததுவும் வியப் பில்லை; அடிகள் அவளை இறை நிலையை எய்தியவ ளாகக் காட்டி யிருப்பது ஏற்றுக் கொள்ளத் தக்கதே!

இமய வரம்பன் நெடுஞ் சேர லாதன் குமரி யொடு வட விமயத் தொரு மொழி வைத் துல காண்டவன் என்று சிலப் பதிகாரம் தெரிவிக்கின்றது. அவன் பெருமையைச் சங்க இலக்கியமும் சிறப்பித்துக் கூறுகின்றது. இமய வரம்பன் என்ற சிறப்புப் பெயரே அவன் ஆண்மைக்குத் தக்க சான்றாகும். அவன் தன் னுடைய செல்வாக்கினைப்

பரப்பிக் கொண்டான்; அவனுடைய நண்பர்களாகிய நூற்றுவர் கன்னர் தம் ஆட்சியைப் பரப்பிக் கொண்டனர். இமய வரம்பன் சேர நாட்டின் நான்கிலொரு பகுதிக்கே யுரியவனாக விருந்தான்.

செங்குட்டுவனும், தகப்பனைப் போலவே அறிவு மாண்மையும் பெற்றவனாக விளங்கினன். அவனும் இமயம்வரை சென்று வந்தான்; நூற்றுவர் கன்னருடைய நெருங்கிய நண்பனாகவே யிருந்தான், 'அட்டானனே குட்டுவன்' என்று பரணர் கூறி யிருக்கின்றார். எனவே, அவன் ஓயாமற் போர்த் தொழிலில் ஈடு பட்டிருப்பதனைப் பெரிதும் விரும்பியவனென்று தெரிகின்றது. மாடலனும், ஆட்சியி லமர்ந்து ஐம்பதாண்டுகளாகியும் போர் செய்தலை அவன் தவிர்க்க வில்லை எனக் கூறியுள்ளான். அவன் சினம் மிக்கவன் என்பதனைப் பரணரும், அடிகளும் குறிப்பிட்டுள்ளனர்.

செங்குட்டுவன் ஆட்சிக்கு வந்த காலத்தில் சேர நாட்டின் ஆறிலொரு பகுதிக்கே யுரியவனாக விருந்தான். அவனுக்கும் இமய வரம்பனைப்போலவே தன் செல்வாக்கைப் பரப்பிக் கொள்ள விருப்ப மிருந்ததே யல்லால், ஆட்சியைப் பெருக்கிக் கொள்ளும் நோக்க மில்லை. ஆனல், அவனாட்சி தொடங்கி நாற்பதாண்டுகளுக்குள், சேர நாடு முற்றிலும் அவன் குடைக் கீழ் இணைந்து விட்டது. பங்காளிகள் இறந்து விட்டமையால், இந் நிலை யேற் பட்டது. ஆட்சி பெருகியதனைப் போலவே, பெருமையும் கூட வேண்டும் என்று அவன் விரும்பியதனில் வியப் பில்லை யன்றே ?

தமி ழகத்தின் வடக்கே நூற்றுவர் கன்னர் தம் ஆட்சியை நாள்தோறும் பெருக்கி வருவதனைக் காண்பவன், ஆண்மையும், தகுதியு மொருங்கே யுடையவன், நூற்றுவர் கன்னருடைய ஆட்சிக் கெதிராகத் தமிழகமுமிணைந்து வொரு பேரரசாய் விளங்க வேண்டு மென்ற

விருப்பங் கொண்டான். பலர் சேர்ந்து ஒற்றுமை யுடன் முயல்வது பெரும் பயனை யளிப்பதனை, நூற்றுவர் கன்னருடைய சாதனையா லறிந்தவன். அவ்வாறே தமிழ் வேந்தர் மூவரும் மன மொன்றியவ ராகத் தமிழ்ப் பே ரர சொன்றினைத் தோற்றுவித்துக் கொள்ள வேண்டு மென்பது அவன் விருப்ப மாகும்.

சோழ பாண்டிய ரிருவரும் அவனுக்குத் தோற்றுத் திறை யளிப்பவரே யாம். எனினும், அவர்கள் விருப்ப முடன் இவனைத் தம் தலைவ னாகக் கொள்ளுவது எத்துணைப் பெருமையைப் பயக்கும்? இத் தகைய விருப்பத்தை யவனை மேற் கொள்ளத் தூண்டுவது அன்றைய அரசியல் நிலையே யாம். இயல் பாக விருப்ப முடையவன் அரசியல் நிலையாலும் தூண்டப் பெற்றவனாய்த் தன் விருப்பத்தை நிறை வேற்றிக் கொள்ள முயன்றான். நூற்றுவர் கன்னர் பலர் சேர்ந்து ஒரு பே ராட்சியை வடக்கே யுரு வாக்கி விட்டதனைச் சோழ, பாண்டியர் தெரியாதவ ரல்லரே!

சோழ நாட்டுக்கு உரிமை யுடையவராக விருந்தவர் செங்குட்டுவ னுடைய மாமன் மக்களே யாவார். அவர்கள் பதின்ம ரிருந்தனர். மூத்தோனை அரசு கட்டிலி லேற்றி, அவன் சொற் கேட்டு நடப்பது இளையவர்களுக்கும் பிடித் திருக்க வில்லை. எனவே, அர சுரிமைக்குப் போட்டியும், போரும் தொடங்கி விட்டன. இந் நிலையில் செங்குட்டுவன் தலை யிட்டுச் சோழ வரசை நிலைபெறச் செய்தான்.

> நின், மைத்துன வளவன் கிள்ளியொடு பொருந்தா
> ஒத்த பண்பினர் ஒன்பது மன்னர்
> இளவரசு பொறாஅர் ஏவல் கேளார்
> வள நா டழிக்கும் மாண்பின ராதலின்
> ஒன்பது குடையும் ஒரு பகல் ஒழித்தவன்
> பொன் புனை திகிரி ஒரு வழிப் படுத்தோய்.
>
> 27.118.23

தன் னுடைய அரசியற் பணி நல்ல பயனை யளித் திருக்கின்றதா என்று செங்குட்டுவன் அறிந்து கொள்ள விரும்பினன். மாடலனை,

> இளங்கோ வேந்தர் இறந்ததன் பின்னர்
> வளங்கெழு நன் னாட்டு மன்னவன் கொற்ற மொடு
> செங் கோல் தன்மை தீ தின்றே.

27 : 159-61

எனக் கேட்டான். சோழ னுடைய செய்தி அவனுக்குத் தெரிந் திருக்காதா? தன் மாமன் மகனைப் பற்றி அவனு டைய குடி மக்கள் என்ன கருதி யிருக்கின்றனர் என்ப தனை யறியவே, அவன் மாடலனைக் கேட்டான். மாடலன். என்னசெய்வான்? கேட்டவன் அரசன். ஆகவே விடை கூற வேண்டிய நிலை ஏற்பட்டுவிட்டது. ஆனல் தன்னுடைய அரசனைப் பற்றி, அவனுடைய அத்தை மகனிடமே எப்படி உண்மையைக் கூறக் கூடும்?

> வெயில் விளங்கு மணிப் பூண் விண்ணவர் வியப்ப
> எயில் மூன் றெறிந்த இகல் வேல் கொற்றமும்
> குறு நடைப் புறவின் நெடுந் துயர் தீர
> எறி தரு பருந்தின் இடும்பை நீங்க
> அரிந் துடம் பிட்டோன் அறம் தரு கோலும்
> திரிந்து வே ருகும் காலமு முண்டோ?

27 : 164-69

அன்று ஆட்சியி லிருந்த வரசனுக்குக் கொற்றமோ, அறப் பற்றோ யில்லை என்பதனை மாடலன் கூருமற் கூறி யிருக்கின்ருன். அவற்றைச் சிறக்கப் பெற்றிருந்த சோழ முன்னோ ரிருவரைக் குறிப் பிட்டுப் பாராட்டித் தன் அரச னுடைய குறையை மறைத்து விட்டான். இவற்றைக் கேட்டு, சேரன் மனம் வருந்தா திருக்க,

> தீதோ யில்லை செல்லற் காலையும்
> காவிரி புரக்கும் நாடு கிழ வோற்கு

27 : 170-1.

என்றுங் கூறினான். சோழ நாடு வளம் மிக்கது. எனவே, தாம் நலிவுற்ற காலத்தும், குடி மக்கள் அரசனுக்குச் செலுத்த வேண்டிய வரிப் பணத்தைத் தந்து விடுவர். ஆகவே சோழ வரசருக்கு என்றுங் குறை யிருக்காது.

மாடலன் தன்னுடைய அரசனைப் பற்றிக் கூறியது, சேரனுக்கு அறி வூட்டுவ தாகவும் அமைந் திருக்கக் காண்கின்றோம். அக் காலத்தில், புலவருக்கும், அறிஞருக்கும் இருந்த செல்வாக்கினை இது புலப் படுத்துகின்றது. ' மன்னன் உயிர்த்தே மலர்தலை யுலகம்' என்பதனை மாடலன் எத்துணை எளிதாகச் சேரனுக்குத் தெரிவித்து விட்டான். பாண்டிய னுடைய குறையைக் குறிப்பிடுஞ் சாத்தனாரும் இந் நோக்கத் துடனேயே, அதனைக் கொடுஞ் சொற்களால் விவரித் துள்ளார்.

கோவலன் களவு செய்தான் என்று பொற் கொல்லன் கூறக் கேட்ட பாண்டியன், சற்றுந் தயங்காமல், கொலைத் தண்டனையை யளித்து விட்டான். விசாரணையை நடத்தாது தண்டனை விதிப்பது முறை யன்று. மேலும், குற்றம் சாட்டியவன் குற்றங்களைக் கண்டு பிடிப்பவனு மல்லன்; பொறுப் புடையவனு மாகான்.

> மன்பதை காக்குந் தென் புலங் காவல்
> என் முதற் பிழைத்தது; கெடுக வென் னாயுள்
>
> (20 : 76, 7)

தன் செயலின் கடுமையை யுணர்ந்த அரச னுடைய சொற்களிவை. இவ் வொரு பிழையைக் கருதியே, தன் ஆட்சி முற்றிலும் பிழைத்து விட்டது என்று கருதி யிருக்கின்றான். அவனை மதுரா பதித் தெய்வம் பெரிதும் பாராட்டி யிருப்பது பொருந்துவதே யாம். எனினும், அவன் பெருமை யனைத்தையும், கோவலன் கொலை யழித்து விட்டதே !

கொற்ற வேந்தன் கொடுங் கோல் தன்மை
இற் றெனக் காட்டி யிறைக் குரைப் பனள்போல்
தன் னாட் டங்கண் தனிமையிற் செல்வாள்
நின் னாட் டகவையின் அடைந்தனள் நங்கை
(25 : 87 – 90)

சாத்தனார் ஒழிவின் றுரைத்த சொற்க ளிவை. அவர் பாண்டிய நாட்டில் பிறந்தவர்; மதுரையில் நெடுங் காலம் வாணிகஞ் செய்தவர். மதுராபதி கூறி யிருக்கும் பாண்டியன் சிறப்பியல்புகள் அவருக்குத் தெரியாவா? கண்ணகி சோழ நாட்டுக்குத் திரும்பிச் செல்லாமைக்கு அவரே தக்க காரணத்தைக் காட்டி யுள்ளார். இங்கு அவர் கூறியிருப்பது அவள் சேர நாட்டிற்கு வந்ததன் காரண மாம். பாண்டியன் இயல்பைச் சேரனுக்குப் புலப் படுத்தவே அவள் வந்தா ளாம். தன் விருப்பத்தைச் சாத்தனார் கண்ணகியின் செயலின் மேல் ஏற்றிக் கூறி யுள்ளார்.

சாத்தனார் தமிழ்ச் சங்கத் திடத்துப் பெரும் பற்றுடையவ ராக விருந்தார். மதுரை யெரிந்தது அச் சங்கத்தின் அழிவாகவும் அமைந்து விட்டது போலும்! அவர் அதன் பின் மலை நாட்டில் தங்குபவ ராகவே யிருந்து விட்டார். தம் நூலில் மதுரை நகரைக் கூட அவர் குறிப்பிட வில்லை. அரச னுடைய செயலை வெறுத்தவ ராகவும் அவர் மதுரையைத் துறந்து விட் டிருக்கலாம். எனவே, சேரனுக்கு அரசர் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதனை வற் புறுத்தப் பாண்டியன் செயலைக் கொடுங் கோன்மை எனக் குறிப் பிட் டிருக்கின்றார்.

செங்குட்டுவன் காலத் திருந்த பாண்டியன் பெயர் நமக்குத் தெரிய வில்லை. மதுரா பதி கூறி யிருப்பதனைக் கொண்டு அவன் கொற்றமும், அறப் பற்றும் உடையவனாகவே இருந் திருக்க வேண்டும் எனத் தெரிகின்றது. எனினும், அவன் தன் பெருமையை முற்றிலும் போக்கிக் கொண்டு மடிந்து விட்டான். அவனுடைய செயல் அவன் மகனுக்கும் பெருமை யில்லாமற் செய்யும் பண்புடைய

தாக விருந்தது. சோழன் கொற்றமோ, அறப்பற்ரு அறவே யில்லாதவ ஞக விருந்தான் அவற்றைப் பெற் றிருந்த பாண்டியன் தன் பெயரைப் போக்கிக் கொண்டு மடிந்துவிட்டான். பட்டத்துக்கு வந்த இளைஞன் தன் செயலால் இழந்த பெருமையை மீட்கும் வரை, செங்குட்டு வனே, தமி ழரசருள் சிறந்தோ னன்ருே ?

மன்னரைப் பற்றிக் கொள்ளும் அவா அவர்களை எப்படித் தொழில் புரியத் தூண்டுகின்றது என்பதனை வஞ்சிக் காண்டம் விளக்குகின்றது. பாண்டியன் இறந்த பின், தமிழ் நாட்டில் செல்வாக்குட னிருக்கும் அரசன் சேரன் ஒருவனே யாம். இவ் வாய்ப்பைப் பயன் படுத்திக் கொள்ள அவன் விரும்பினன். அவன் விருப்பத்தை நிறை வேற்றிக் கொள்ளத் தக்க வழி யென்றும் அவனுக்குத் தோன்றிற்று. அதனை யவன் எவ்வாறு பயன் படுத்திக் கொண்டான் என்பதனை அடிகள் விவரமாகக் கூறி யிருக்கின்ருர்.

செங்குட்டுவன் தன் னுடைய செல்வாக்கினைப் பெருக்கிக் கொள்ள வேண்டும் என்ற விருப்பத்தால் தூண்டப் பட்டவ ஞகவே, தமி ழகத்தின் தலைமைப் பதவியைப் பெற முயன்ருன். அவன் அப் பதவிக்குத் தகுதி யுடையவனே யாம். மேலும், அவனே என்றும் தலைவ ஞக விருக்க முடியாதே ! தமிழ்ப் பே ரரசின் முதல் தலைவ ஞக மட்டுமே யிருக்கக் கூடு மல்லவா ? அவன் தன் னுடைய நன்மைக்காகவே பாடு பட்டா னெனினும், அவன் முயற்சி வெற்றி யடைந் திருப்பின் அடிகள் விரும்பிய தமிழ்ப் பே ரரசு உருவாகி யிருக்கும். எனவே, அவன் செயல்களை விவரிப்பது அவனைப் பெருமைப் படுத்த விவரிப்ப தாகாது.

செங்குட்டுவன் செயல்களில் பிழை கண்ட காலத்து அடிகள் அவற்றை எடுத்துக் காட்டாமற் சென்றிருக்க வில்லை. அவன் தோல்வி யுற்ருனெனினும், நன்மையையே

யடைந்தான். அவன் முற்றிலும் மாறி விட்டான். மா நில மன்னர் பலரும் போற்றும் பெருமையைப் பெற்றவனுகி விட்டான். இம் மட்டோ? அடிகள் இக் காப்பியத்தால் வற்புறுத்தியுள்ள முடிவினைப் பெற முயல்பவனுக அவன் மாறி விட்டான். அவனுடைய மாறுதலையும், அதன் பயனையும் நமக்கு உணர்த்தவே அடிகள் அவன் செயல்களை விவர மாகக் கூறி யிருக்கின்றுர்.

வஞ்சிக் காண்டத்தில் காணப்படும் சேரனைப் பற்றிய செய்திகள் ஒரு தனிக் கதை யாகக் கருதப் படும் தகுதி யுடையன. செங்குட்டுவன் தன் வாழ்க்கையால் தெரிந்து கொண்டதனைப் பயன் படுத்தி மேன்மை யுற முயன்ற தனைக் காட்டுவது இக் கதையின் நோக்க மாகும். இது காப்பியக் கதை காட்டும் முடிவுக்குச் சிறப் பளிக்கின்றது. கதைத் தலைவியையும், செங்குட்டுவனையும் போலவே நாமும் நம் வாழ்க்கையால் தெரிந்து கொள்ளுவதனை உணர்ந்து கொள்ளுவது நமக்கு நன்மையைப் பயக்கும் என்பது அடிகள் கருத் தாகும். நம்மை, நம் வாழ்க்கையை ஆராயத் தூண்டவே அடிகள் சேரனுடைய கதையையுங் கூறி யுள்ளார்

புகார்க் காண்டத்தி லிடம் பெறும் மாதவியின் கதை, முதற் கதையின் நோக்கத்துக்கு ஆக்க மளிக்கும் முறையிலேயே கூறப் பெற் றிருக்கின்றது. தேவந்தியின் கதைக்கும் அடிகள், மாதவியின் கதைக்குப் போலவே தனித் தோற்றுவா யொன்றினைத் தந்திருக்கின்றுர். அவள் வாழ்க்கை யென்றும் மாருத மகிழ்ச்சி யளிப்பதாகக் காணப் படுகின்றது. எனினும், அந் நிலையும் அவளுக்கு மன நிறை வினை யளிக்க வில்லை. அவளும் கண்ணகி யுடன் துறை மூழ்கிக் காம வேள் கோட்டத்தில் தொழ விரும்பினுள். இதனுல், கண்ணகியைப் போல் உறுதி யுடன் மன நிறை வினைப் பெற முயல்வதே இன்பம் பயக்கும் என்பதனை யறிந்து கொள்ளுகின்றேம்.

மாதவியும், தேவந்தியும் முதற் கதையில் பங்கு பெறும் பாத்திரங்க ளாவார். எனவே அவர்களுடைய கதைகளை அடிகள் முதற் கதையோடு சேர்த்து இழைத்து விட் டிருக்கின்றார். மாதவி யில்லையேல், கண்ணகி தன் வாழ்க்கையை ஆராய முற் பட் டிருக்க மாட்டாள்; மன வுறுதி பெற்றவ ளாக மாறி யிருக்க மாட்டாள். தேவந்தி வர வில்லையேல், கண்ணகி தான் கண்ட கனவின் விவ ரத்தை வெளிப் படுத்தி யிருக்க மாட்டாள். சிலப் பதிகாரம் அவல நாடகத்தின் இயல்பைப் பெற் றிருக்கும் பெருமை யைத் தேவந்தியே யளிக்கின்றாள்.

கவுந்தி, அடிகளால் கதையில் நிகழ்ச்சி யில்லாத காலத்துப் புகுத்தப் பெற்ற கற்பனைப் பாத்திர மாவாள். ஆகவே, இவள் கதைக்குத் தோற்றுவாய் இல்லை. இவள் கண்ணகி பெற்ற மன உறுதி சிதையாம லிருக்கப் பெரிதும் துணை புரிகின்றாள். எனவே அடிகள் இவள் கதையை முதற் கதையோடு பின்னிப் பிணைத் திருக்கின்றார். சேரன் கதைப் பாத்திர மாகான். எனினும், இவன் கதைக்குத் தனித் தோற்றுவாய் உண்டு. காட்சிக் காதையே இவன் கதையின் தோற்றுவா யாக அமைகின்றது.

சேர னுடைய கதை முதற் கதையின் படிப்பினையை வற்புறுத்துவ தாக இருக்கின்றது. கண்ணகியின் வாழ்க் கையைத் தெரிந்து கொண்டு, நம்மை அடிகள் என்ன செய்ய வேண்டு மென விரும்பு கின்றாரா, அதனையே செங்குட்டுவன் தன் வாழ்க்கையை ஆராய்ந் தறிந்து செய் துள்ளான். எனவே, இவன் கதையை அடிகள் தம் காப் பியக் கதையோடு ஒட்ட வைத்துள்ளார். இக் கதைசேர வில்லையேல், கண்ணகியை நா மிப் பொழுது தெரிந்து கொள்ளும் பெருமையை யுடையவ ளாக அறிந்துகொள்ள முடியாது போம்; அதனால், அவள் கதையின் படிப் பினையையும் நன் குணர்ந்து கொள்ளமுடியாது போ யிருக் கும்.

## 3. கனவு.

இளங்கோ வேண்மாள், கண்ணகி கோயில் கட்டித் தொழுதற் குரியவள் எனக் கூறியது, செங்குட்டுவனுக்குத் தன் விருப்பத்தை நிறை வேற்றிக் கொள்ள நல்லதொரு வாய்ப்பினைத் தேடித் தந்தது.

> ஒற்கா மரபிற் பொதியி லன்றியும்
> விற்றலைக் கொண்ட வியன் பேர் இமயத்துக்
> கற்கால் கொள்ளினும் கடவு ளாகும்
>
> 27 : 117-9

இவ் விரு மலைக ளுள் எதனி லிருந்து கல் லெடுத்து வரினும் கடவுளுக்கு ஏற்றதே யாகும் என்று நூ லறி புலவர் கூறினர். ஆனல், எங் கிருந்து கொண்டு வருவது சேரனுக்குப் பெருமையைப் பயக்கும் என்பதனை அவனே முடிவு செய்ய வேண்டு மன்றோ?

நூலறி புலவர் கூறிய சொற்கள் பொதியி லிருந்து கல்லெடுத்து வருவதே செங் குட்டுவனுக்குச் சிறப் பளிக்கும் என்பதனைக் குறிப் பாகப் புலப் படுத்து கின்றது. பொதியில் ஒற்கா மரபினை யுடையது. பாண்டியன் ஆட்சிக் குட் பட்ட தேனும், அகத்தியன் விரும்பித் தங்கி யிருக்கும் சிறப் புடைய தன்றோ? இமயம் பெரிது; பெருமை மிக்கது. எனினும், வில்லைத் தலையிலே கொண்டது. எனவே, அது செங் குட்டுவனுக் குரிய மலையே யாம். அதன் கண் கல் லெடுத்து வருவது, சேரன் தன்னுடைய மலையி லிருந்து கொண்டு வருவதனை யொக்கும்.

நூ லறி புலவர்க்குச் சேரன் மனத்தி லுள்ள விருப்பம் எப்படித் தெரிந் திருக்கக் கூடும்? ஆகவே, திருப்பணியை நடத்த வேண்டிய முறையையே அவர்கள் கூறினர்; பொதியிற் கல்லைக் காவிரியிலும், இமயத்தின் கல்லைக் கங்கையிலும் நீராட்டிக் கொணரலா மென்று கூறினர். செய்வது அறப்பணியே யெனினும், அதனை நிறை வேற்றுபவன் தன் னுடைய பெருமை வெளிப்

படும் வண்ணமும் செய்வது குற்ற மாகுமா? ஆகாது; வேண்டியதே யாம். இல்லையேல், அறப் பணி செய்ய எவர் முன் வருவார்? அரசன் தன் விருப்பத்தை நிறை வேற்றிக் கொள்ளக் கருதினனே யல்லால், அதனைத் தெரிவிக்க வில்லை.

> பொதியிற் குன்றத்துக் கற் கால் கொண்டு
> முது நீர்க் காவிரி முன் றுறைப் படுத்தல்
> மறத் தகை நெடு வாள் எங் குடிப் பிறந்தோர்க்குச்
> சிறப்பொடு வரூஉஞ் செய்கையோ வன்று.
> 25 : 122 25

செய்ய முற் பட் டிருப்பது திருப் பணி; அறப் பணி. ஆனால் அதனை நிறை வேற்றச் சேரன் தன் மறத்தைப் பயன் படுத்த விழைந்தான். அது அவன் பயின்ற முறை. ஆகவே, அவன் விரும்பிய வண்ணம் செய்வதனைத் தடை செய்ய யா ருளர்? பணி முடிய வேண்டு மென்ப தொன் றினையே பிறர் கருதலாம். முடிக்க வேண்டிய பொறுப்பு அவ னுடையதே யன்றோ?

செங்குட்டுவன் இமய மலையைத் தன்னை யொத்த பேரரச னாக உருவகப் படுத்தி யுள்ளான். தென் திசைக் கண் ணுள்ள இவ னுடைய வஞ்சியைப் போலவே, வட திசைக் கண் நின் றெதி ரூன்றிய சிறப்பினை யுடையது இமய மலை; அது நிலவினைப் பூவாகக் கருதித் தன் சென்னி யில் சூடிக் கொள்ளும் உயர்வினை யுடையது. அதனைத் தனக்கு விருப்ப முடன் மகட் கொடை நேர்வது போல, பத்தினித் தெய்வ மெழுதக் கல் லொன்றினைக் கொடுக்கச் செய்வானுஞ் சேரன் இவற்றைத் தன் தலைமை தோன்றக் கூறி யிருக்கின்றானே யல்லால், செங் குட்டுவன் வஞ் சின முரைத்த லாக வெளியிட் டிருக்க வில்லை.

அரச னுடைய நோக்கம் நமக்கு எப்படித் தெரியக் கூடும்? அவன் சொற்களை நாம் வழி மொழிகின்றோம். அவ னுடைய தகுதிக்கும், குடிப் பெருமைக்கும் இமயஞ்

சென்று கல் லெடுத்து வருவது ஏற்றதே யென்று நாம் கருதுகின்றோம். ஆனால், செங் குட்டுவன் இவ் வாறு முடிவு செய்ததற்கு அவன் அரசிய லவாவே காரண மாம். இதனை வில்லவன் கோதை குறிப் பிடுதலால் நா மறிகின் றோம் கோதைசேர னுடைய முத லமைச்சன். சேரர் குடியிற் பிறந்தவன். எனவே, அவனுக்கு அரச னுடைய மனத்தின் போக்கு தெரிந் திருக்க வேண்டு மன்றோ ?

அறப் பணியை மறத்தைப் பயன்படுத்திச் செய்த லில் கோதைக்கு விருப்ப மில்லை. தக்க காரண மில்லாமல் போர் செய்தல் ஆண்மை யாகுமா ? அது குறும்பே யாம். ஆற்றல் படைத்தவர் அதனை யடக்கிக் கொண் டிருத்த லாலேயே பெருமையை யடைவார். வெளிப் படுத்துவது அதனைச் செல வழித்து விடுவ தாகு மன்றோ ? அடக்கிக் கொண்டிருத்தல், தக்க சமயத்தில் முழுத் திறமையையுங் காட்ட உதவி யளிக்கும் கோதையின் நோக்கத்தை அரசன் ஏற்றுக் கொள்ள வேண்டுமே ! அவ னுடைய அவா என் னவது ?

செங் குட்டுவனுக்கு முத லமைச்ச னாக விருப்பவனுக்கு அவனை என்ன சொல்லி மாற்றலாம் எனத் தெரியாம லிருக்குமோ ? முதலில் அவ னுடைய போர் வென்றிகளைக் குறிப்பிட்டுக் கோதை பாராட்டி யிருக்கின்றான். அதன் பின்னரே தன் கருத்தை வெளியிட் டிருக்கின்றான். அப் பொழுதுங் கூட, அரசன் நோக்கம் அவன் கருதிய வழியிற் செல்வதால் நிறை வேறாது என்பதனைக் காட்டிய பின்னரே, கோதை தன் கருத்தைப் புலப் படுத்தி யுள் ளான். இத் தகைய சிறந்த அமைச்சன் சிந்தித்துக் கூறிய தனை அரசன் ஏற்றுக் கொள்ள வில்லையே! அவா மக்களை நல்ல வழியிற் செலுத்தாது போலும் !

இமிழ் கடல் வேலியைத் தமிழ் நா டாக்கிய
இது நீ கருதினை யாயின், ஏற்பவர்
முது நீ ருலகின் முழுவது மில்லை.

25 : 165–7

இது என்பது அரசன் இமயஞ் சென்று கல்லெடுத்து வருவதே தன் தகுதிக்கு ஏற்றது என்று கூறியதனைக் குறிப்பிடும். இதனைத் தகுதி நோக்கி மட்டும் அரசன் தெரிவித்திருக்க வில்லை, 'இமிழ் கடல் வேலியைத் தமிழ் நா டாக்கிய' சூழ்ந்தே முடிவு செய் திருக்கின்றான். சேர, சோழ, பாண்டிய நாடுகள் என்று பிரித் துணராமல், தமி ழகம் என்ற பொதுப் பெயருடன் இம் மூன்றும் இணைவதற்கு அடி கோலும் எனக் கருதியே செங்குட்டுவன் இமயஞ் செல்ல முற் பட் டுள்ளான்.

சேரன் இமயஞ் சென்று வருவதனால், சோழ பாண்டியர் அவனைத் தம் தலைவனாக ஏற்றுக் கொண்டு விடுவாரா? மேலும் அறப் பணி யொன்றினைச் செய்யும் பொழுது போர் நிகழ வொட்டாமல், அனைவரும் அதற்கு விரும்பி யுதவி யளிக்கும் முறையில் செய்து முடிப்பதே தகுதி யுடைய தன்றோ? காரணங் கூறாமல், இமயஞ் செல்ல முற்பட்டால், அம் மலை யிருக்கும் நாட்டிற் குரியவர் வாளா விருப்பரோ? ஆகவே, செங் குட்டுவன் செயலை இம் முது நீ ருலகில் ஒருவரும் ஏற்கா ரென்பது ஒருதலை ஆயின், அவன் அவா நிறை வேறுவ தெங்ஙனம்? இவ் வறப் பணி யைச் செய்யுங் காலத்து அதனை நிறை வேற்றிக் கொள்ள முயலக் கூடாது என்பது கோதையின் கருத்தாக விருக் குமா?

கண்ணகி சோழ நாட்டில் பிறந்தவள்; பாண்டி நாட்டில் செயற் கரிய செயல்களைச் செய்தவள்; சேர நாட்டைச் சேர்ந்து விண் ணுல கடைந்தவள். எனவே, அவளைப் பாராட்டுவதற்கு அனைவருக்கும் உரிமை யுண்டு. அதனால் செய்யும் திருப் பணியைத் தமிழ் நாட்டின் மற்ற வேந்தர் சார்பாகவும் சேரன் செய்ய வேண்டும் என்பது கோதையின் அவா. இத் திருப்பணியைச் செய்வதனால் தன் செல்வாக் கைப பெருக்கிக் கொள்ள வேண்டும் என்பது செங்குட்டுவன் எண்ணம். ஆனால், அவன் அமைச்சனோ, அதனைச்

செய்வதனால் வரும் பெருமையைப் பிறர்க்கும் பகிர்ந்தளிப்பதனை விரும்புகின்றான். இவை எப்படிப் பொருந்தும் ?

இமய மால் வரைக் கெங் கோன் செல்வது
கடவுள் எழுதவோர் கற்கே யாதலின்
வட திசை மருங்கின் மன்னற் கெல்லாம்
தென் தமிழ் நன் னாட்டுச் செழு விற் கயற் புலி
மலர் தலை யேற்ற வரைக ஈங்கென.

27 : 168-72

தமிழ் நாடு இணைந் திருக்கின்றது. அதனுடைய தலைவன் செங்குட்டுவன் என்பவற்றை வட புல வேந்தர் தெரிந்து கொள்ள வேண்டும். அதற்கு இத் திருப் பணி நன்கு பயன் படுமே! சேரன் இதனைப் பிறர் சார் பாகவும் செய்ய முற் பட்டு, மூ வேந்த ருடைய சின்னங்களையும் பொறித்த கடிதங்களை வட புல வேந்தருக்கு அனுப்பி வைத்தால், அவர்கள் சேரனைத் தமி ழகத்தின் தலைவனாகக் கருதுவார்க ளன்றோ? எத்துணை எளி தாக அரசனுடைய அவா நிறை வேறி விடுகின்றது!

வட புல வேந்தருக்குத் தன்னைத் தமி ழகத்தின் தலைவ னாக அறி முகப் படுத்திக் கொள்ளும் வாய்ப்பினையித் திருப் பணி சேரனுக் களிக்கின்றது. ஆனால் பிற வேந்தர் சின்னங்களையும் பொறிக்க அவர்கள் ஒப்ப வேண்டாமா? அவர்க ளுடைய ஒப்புதலைப் பெற வேண்டும் என்ற தேவையில்லை. அவர்கள் இக் கடிதத்துக்கு மறுப்புங் கூற மாட்டார்கள். தாம் எதனையும் செய்யாமலிருக்க, இத் திருப் பணியை முன் னின்று நிகழ்த்திய பெருமை கூடுவதனை அவர்கள் ஏற்றுக் கொள்ள மறுப்பார்களா? கோதை முத லமைச்ச னாக விருக்க முற்றிலுந் தகுதி யுடையவனே! அவன் காட்டி யுள்ள வழி அரச தந்திரத்தின் மிக நுண்ணிய வெளிப்பா டாகும்.

கோதை கூறிய வண்ணம் கடிதங்கள் சென்றால், வட புல மன்னர் இமயத்துக்கு வரும் செங்குட்டுவனை எதி

ரேற்றுக் கொள்வர். கடவுட் பணியைச் செய்ய முன் வருபவனுக்கு அக் காலத்தே எதிர்ப்பு மிருக்குமோ? செங்குட்டுவன் இவ் வழியை மேற் கொண் டிருப்பான் ஆனல், இது சோழ பாண்டியர்கள் விரும்பித் தன்னைத் தலைவனுக ஏற்றுக் கொண்ட தாகாதே! அவர்கள் வாயை யடைத்து விட்டுத் தானே தமிழகத்துத் தலைவன் என்று தெரிவித்துக் கொள்ளுவ தாக வன்றோ முடியும்? இது போதுமா?

கோதை கூறி முடித்தவுடன் அழும்பில் வேள் எழுந் தான். வட புல வேந்தர் ஒற்று எப் பொழுதும் வஞ்சியை நீங்காம லிருக்குமே? கடிதம் எழுதிச் செய்தி தெரிவிக்க வேண்டிய தேவை யில்லையே! அரசன் இமயஞ் செல்லுவ தனை வஞ்சியில் பறை யறைவித்தால், தத்தம் ஒற்றர் வாயி லாக எல்லா வேந்தரும் அதனை அறிந்து கொள்ளக் கூடுமே! அழும்பில் வேள் சொற்களை அரசன் ஏற்றுக் கொண்டான். அவை அவன் தற் பெருமையைத் தூண்டி விட்டன. நம் செய்தியை பிறர் தாமே அறிந்து கொள் ளச் செய்வது நம் முடைய சிறப்பினை புணர்த்து மன்றோ? வஞ்சியில் பறை யோசை எழுந்தது.

விற் றலைக் கொண்ட வியன் பேர் இமயத் தோர்
கற் கொண்டு பெயரு மெங் காவல னாதலின்
வட திசை மருங்கின் மன்ன ரெல்லாம்
இடு திறை கொடுவந் தெதிரீ ராயின்,
கடற் கடம் பெறிந்த கடும் போர் வார்த்தையும்,
விடற் சிலை பொறித்த வியன் பெரு வார்த்தையும்
கேட்டு வாழுமின்; கேளீ ராயின்,
தோள் துணை துறக்கும் துற வொடு வாழுமின்.
25 : 183-90.

இஃது செய்தி அறிவிப் பாகுமா? பறை யறைந்து; பிற வரச ரனைவரையும் போருக் கல்லவா அழைத் திருக் கின்றனர்? முத லிரண் டடிகள் செய்தி கூறுகின்றன; இது அறப் பணி என்பதனையுந் தெரிவிக்கின்றன: அடுத்து, 'எனவே, வட புல வேந்தர் எம் மரசனுக்கு

வேண்டிய உதவி புரிமின்' என் றறிவித் திருப்பின் அது முறை யுடைய தாக விருக்கும். வில்லவன் கோதையின் கடிதத்தைப் போல் அத் துணைச் சிறப் புடைய தாகா தெனினும், அது செய்தி யறிவிப் பாக வேனும் இருந் திருக்கும்; பிறரை அவ மதித்த தாக விருக்காது.

பறை யறைந்த பின்னர், போ ரிடாமல் இமயஞ் சென்று வர வியலாது என்ற நிலை ஏற் பட்டு விட்டது. இச் செய்திகேட்ட பின்னரும் செங் குட்டுவனுக் கு உதவி செய்ய எவர் முன் வருவர்? இவனை எதிர்க்காமலும் இருக் கலாமா? அவன் மேற் கொண் டிருப்பது அறப் பணி யென வாளா விருப்பினும், அதனால் அவர்கள் கோழைக ளாவர் என் றல்லவோ பறை யறைந்த வார்த்தைகள் குறிப் பிடும்? பறை யறைந்ததனால் பெற்ற பயன் இவ் வளவே யன்று; இன்னு முண்டு.

கோதை காட்டிய பாதையிற் சென் றிருந்தால், செங் குட்டுவன் தமி ழகத்தின் தலைமைப் பதவியைத் தன் உள் ளங் கையில் வைத் திருப்பவ னாக விருப்பான். அதனை அவனே வீசி யெறிந்து விட்டானே! இனியும் அவன் அவா நிறை வேற வழி யுண்டோ? தற் பெருமை பாராட் டிக் கொள்வது மக்களைத் தாம் விரும்புவத னோடு, பெற் றிருப்பதனையும் இழக்க வைக்கும் பண் புடையது. செங் குட்டுவ னுடைய நிலை இரங்கத் தக்க தாகி விட்டது. எனினும், அவன் அவா அவனை விட்டு விட வில்லை; அவ னைச் செயற் படுத்துவதனை அது நிறுத்த வில்லை.

எப் பொழுதோ நிகழ்ந்து மறந்து விட்ட செய்தி யொன்று செங்குட்டுவன் நினைவிற்கு வந்தது. அதனைக் கேட்ட காலத்தில் அவன் நகைத்தான். ஆனால், இன்று அத னுடைய நினைவு அவனுக்கு வழி காட்டுவ தாகி விட் டது. அது அவன் மனத்தை நிறைத்தது; அவனைச் சினங் கொள்ளும் படிச் செய்து விட்டது.

இமயத் தாபதர் எமக்கீங் குணர்த்திய
அமையா வாழ்க்கை யரைசர் வாய்மொழி
நம்பால் ஒழிகுவ தாயின் ஆங்கஃது
எம் போல் வேந்தர்க்கு இகழ்ச்சியுந் தரூஉம்.

26 : 9:12

இமயஞ் செல்ல எண்ணித் தெரிவித்த காலத்தும், பறை யறைவித்த காலத்தும் அரசனுக்கு இந் நினைவு இல்லை.

செங்குட்டுவன் இமயஞ் செல்லுவது வட புல அரசரை ஒறுக்கவே யாம்; அறப் பணி செய்யும் நோக்கம் மறந்து விட்டது போல் தோன்று கின்ற தல்லவா? பறை யறைந்த பின், அதன் விளைவினைச் சிந்தித்துப் பார்த்த மன்னவனுக்கு இவ்வாறு தன் நோக்கத்தை மாற்றி யமைத்துக் கொள்ளும் எண்ணம் எழுந்தது. இமயத் தாபதர் இவனிடம் கூறியவற்றைச் சோழ பாண்டியர் அறியார். அவர்களை எதிர் பார்த் திராமல், அவர்களுடைய பழியைப் போக்கப் போருக்குச் சென்றவனை அவ் விருவரும் வாழ்த்துவார்கள் என்று எதிர் பார்ப்ப தியல்போ யன்றோ? சோழ பாண்டியரைத் தன்னை வியக்க வைப்பதற்குச் சேரன் மேற் கொண்ட உத்தியே இச் சார்பு நோக்க மாகும்.

'வட வாரிய மன்ன ராங்கோர் மட வரலைமாலை சூட்டி யுட னுறைந்த விருக்கை தன்னி லொன்று மொழி நகையினராய்த் தென் தமிழ் நா டாளும் வேந்தர் செரு வேட்டுப் புகன் றெழுந்து, மின் தவழு மிமய நெற்றியில் விளங்கு வில், புலி, கயல் பொறித்த நாள், எம் போலும் முடி மன்னரீங் கில்லை போலும்' என்று கூறிய தாக, ஆங்கு வாழும் மாதவர் வந்து செங் குட்டுவனுக்குச் செய்தி தெரிவித்தன ரென்று வாழ்த்துக் காதை விவரங்களைக் கூறி யிருக்கின்றது.

திரு மண நிகழ்ச்சிக் காலத்தில், பெண்கள் சூழ விருந்த கூட்டத்தில், ஆரிய அரசர் தம் தற் பெருமையை வெளிப் படுத்திக் காட்டிக் கொள்ள விரும்பித் தமிழ் நாட்

டினை யாளும் அரசரினும் தாம் ஆற்றல் மிக்கவர் எனக் கூறிக் கொண்டனர். இவ்வாறு தம் ஆற்றலையும், பெருமையையும் பெண்க ளிடத்து வெளிப் படுத்திக் கொண்டவர் பால குமரன் என்ற அரச னுடைய மக்க ளென்றும், அவர்கள் காவா நாவிற் கனக விசயர் என்றும் பின்னர்ச் செங்குட்டுவன் கூறத் தெரிந்து கொள்ளுகின்றோம். அவர்களை இங்குச் சேரனே 'அமையா வாழ்க்கை யரசர்' எனக் குறிப் பிட் டுள்ளான்.

அமையா வாழ்க்கை யென்பது 'நிரம் பாத உயிர் வாழ்க்கை' எனப் பொருள் படும் என்று அரும் பத வுரைகாரர் கூறுகின்றார். இதனால் அவர்கள் இளைஞர்கள் என்பது தெரிகின்றது. அவர்களை, தகப்பன் பெயரைக் கூறிச் சுட்டி யிருப்பதும், அவர்க ளுடைய இளமையைக் குறிப்பிடும். எனவே, பொறுப் புணர்ச்சி யில்லாத இளைஞர், பெண்கள் கூட்டத்திற் பேசிய பெரு மொழிகளைத் தாபதர் செங் குட்டுவனுக்குத் தெரிவித் திருக்கின்றனர் என்பது புலப் படுகின்றது. இவற்றை நாற்ப தாண்டுகளுக்கு மேல் அர சாண்டு மூத்தவன் பொரு ளுடையன வாகக் கொள்ளலாமா? தான் அவ்வாறு கொள்ள வில்லை என்பதனைச் சேரனே கூறி யிருக்கின்றான்.

'நம் பால் ஒழிகுவ தாயின்' என்றது, அவனைப் பொறுத்த வரை அவற்றை ஒழிய விடவே விரும்புவான் என்பதனைக் குறிப் பிடும். எனினும், சோழ பாண்டியர் அவற்றைப் பழி மொழிக ளாகக் கொள்ளுவரே என்றே செங்குட்டுவன் கவலைப் பட்டான். அவர்களை 'எம் போல் வேந்தர்' என்று அவனே குறிப் பிட்டு விட்டு, அவர்களுக்குத் தன்னைப் போல் இம் மொழிகளைப் பொருட் படுத்தாத பெருந் தன்மை யிராது எனக் கருதியது எப்படி ஏற்றுக் கொள்ளத் தக்க தாகும்? இவ் வெண்ணமுங் கூடத் துணிவினை ஆதார மாகக் கொண் டிருக்க வில்லை. 'இகழ்ச்சியுந் தரூஉம்' என்று கூறி யிருப்பதால், அவர்

களும் தன்னைப் போல் அவற்றைப் புறக் கணிப்பினும் புறக் கணிப்பர் என்பதனைக் குறிப் பிடுகின்ற தன்றோ?

தம் பெருமையையும், ஆற்றலையும் பெண்களிடத்து வெளியிட்டுக் கொண்டவர், தமிழ் நாட்டு மூ வேந்தரையும் சேர்த்தே கூறி யிருக்கின்றனர். ஆகவே, அவை பழி யாகுமெனின், மூ வருக்கும் பழி யாம்; நகை மொழி யெனின், மூவரும் புறக் கணித்தலே சிறப் புடைய தாம். இதனைக் கருதிப் பாராமல், செங்குட்டுவன் அவர்கள் சொற்களைத் தான் பழி யாகக் கருத வில்லை என்றும், ஏனை யரச ரிருவரும் பொருட் படுத்துவ ரென்றுங் கொண்டதற்குத் தக்க காரண மில்லை. தமி ழரசர்களை இரு வகையின ராகப் பிரிப்பவன் செங் குட்டுவனே யாம் என்பது இதனால் பெறப் படுகின்றது.

அரச னுடைய அவா அவனை ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்க முடியாமற் செய் திருக்கின்றது. பிற வரச ரிருவரும் தன்னைத் தலைவ னாக ஏற்றுக் கொள்ள வேண்டுமென்று விரும்புபவன், அவர்களினும் தான் பெருந் தன்மை மிக்கவன் என்பதனைக் காட்டிக் கொள்ள இவ்வாறு கூறி யிருக்கின்றான்! அவரால் சிறப் படைய விரும்புபவனே, அவர்களைச் சிறப்பிலிகளாகக் காட்டுவது அழ கன்று. மேலும், அவர்கள் சிறப் புடையவராக விருந்து இவனைத் தம் தலைவ னாக ஏற்றுக் கொண்டா லன்றோ இவனுக்குப் பெருமை கூடும்?

ஒரு முடிவினைப் பெற வேண்டுமென்ற முனைப் புடையவர் நம்மைப் போல், தாம் அதனைப் பெறக் கை யாளும் வழிகளை ஆராய்ந்து கொண் டிருக்க மாட்டார்கள். மேலும், அவாவினால் தூண்டப் பெற்றவர் முடிவை மட்டுமே கருதி யிருப்பார்கள். இங்கு அவாக் கொண்டவன் அரச னாகையாலும், அவன் விரும்பியது அரசியற் பெருமை யாகையாலும், அவன் அதனை நிறை வேற்றிக் கொள்ளக் கை யாளும் வழிகளை நாம் ஆராய்ந்து காண்

பது அழ கன்று. எனினும், நற் பயனைப் பெற, நல்ல வழி களைக் கையாள வேண்டும் என்பதனை நாம் மறக்காமல் இருக்க வேண்டும். ஏனெனில், செங்குட்டுவன் தன் முயற்சி யில் வெற்றி யடைய வில்லை.

தாபதர் எனக் கூறத் தக்கவர் கூறுவன மக்களுக்கு நன்மையைப் பயப்பன வாக விருக்க வேண்டும். செங் குட்டுவன் தனக்குச் செயல் சொன்னவரைத் தாபதர் என்றே குறிப் பிடுகின்றான். ஆகவே அவர் சொற்களால் சினங் கொண்டது அவ னுடைய தவறே யாம். இல்லை யேல், அவர்களைத் தாபதர் எனக் கூறுவதற் கில்லை. ஆனால், அரசனே யல்லாமல், அடிகளும் அவர்களை மாதவர் என்று குறிப் பிட் டிருக்கின்றாரே! ஆகவே அவர்கள் தாபதரே என்பதனில் ஐய மில்லை. பிழை அரச னுடை யதே! இதனை அடிகளும் ஆசான் வாயி லாகக் குறிப் பிட் டிருக்கின்றார்.

செங்குட்டுவன் இயல் பாகவே சினம் மிக்கவன். இப் பொழுது தனக்குப் பெருமையைத் தேடிக் கொள்ளுவ தாக எண்ணிச் சின முடையவ னாகக் காட்டிக் கொள்ளு கின்றான். வட புல வேந்தரை ஒறுக்கத் தான் இமயஞ் செல்லுவ தாகக் கூறியது, சோழ பாண்டியரைத் தமக்கு நேரும் பழியை நீக்கவே அவன் போருக்குச் செல்கின்றான் என்று கருதத் தூண்டும். இப்பயனைப் பெறுவதற் காகவே அரசன், அவரைத் தனியே பிரித்துப் பேசி யிருக்கின்றான். மூவருக்கும் நேர்ந்த பழியைப் போக்கச் செல்லுவதாக அவன் கூறி யிருந்தால், அவனைக் குற்றங் கூறுவதற் கிட மில்லாது போம். ஆனால், சோழ, பாண்டியர் அதனைப் பொருட் படுத்தாமல் இருந்து விடுவரே! அவர்கள் சார் பாக வன்றோ சேரன் வட வேந்தர் கூறியவற்றைப் பழி யாகக் கொண்டான்?

சோழ பாண்டிய ருடைய பெருமையைக் காக்கத் தான் போரிடப் போவ தாக அறிவிக்கும் சேரன், அதனை வஞ்சினம் கூறி வற்புறுத்தி யிருக்கின்றான். அவன் கூறிய

துண்மை யெனின் அதற்கு வஞ் சினம் கூறி யிருக்க வேண்டாமே! எனவே அரசன் வஞ் சினம் கூறியது பழி பொறுமையா லன்று, அரசியற் காரணங்களுக் காகவே யாம் என்பது விளங்கு கின்றது. வஞ் சின முரைத்த பின், செங்குட்டுவன், சோழ பாண்டியர்க்குத் தன் னிலையை விளக்கி விட்ட தாகக் கருதினன். இனி வட புல வேந்தருக்கு அதனைத் தெரிவிக்க வேண்டுவ தொன்றே எஞ்சி யிருப்ப தாகும்.

சிலப் பதிகாரத்தால் சிறப் புடையவனுகப் பாராட் டப் பெறுபவன் இத் திருப் பணியைத் தன்னுடைய அரசியல் அவாவினைத் தணிப்பித்துக் கொள்ளப் பயன் படுத்திக் கொண்டிருப்பது கண்டிக்கத் தக்க தன்று. ஏனெனில், தற் பெருமை பாராட்டிக் கொள்ளாத மக்கள் இரார். வே ெறாருவ ரிதனை மேற் கொண் டிருந்தாலும், இவ்வாறே தமக்கு நன்மையைத் தேடிக் கொண் டிருப்பர்; அவர்கள் தமக்கு நன்மையைப் பயக்குமா என்று கருதிப் பார்த்த பின்னரே, இதனை மேற் கொண் டிருப்பர்; ஆனல் சேரன் அப்படிச் செய்ய வில்லை. இத் திருப் பணியைச் செய்ய முடிவு செய்த காலத்தில், அவன் இது தனக்கு நன்மை யளிக்கும் என்று எதிர் நோக்கி அம் முடிவினைச் செய்ய வில்லை.

செங் குட்டுவன் முயற்சி வெற்றி பெற்ருல் தமிழகம் இணைந்து விடும் என்ற காரணத்தால், அடிகளுக்கு அவன் நோக்கம் ஒப்புத லாக விருந்தது. ஆனல், அதனை நிறை வேற்றிக் கொள்ள அவன் கையாண்ட வழியை அவர் ஏற்பவ ராக மாட்டார். ஏனெனில் அவர் அவன் பிழையை எடுத்துக் காட்டி யுள்ளார்; அவன் அதனை யுணர்ந்து தன்னைத் திருத்திக் கொண்டதனையும் குறிப் பிட் டுள்ளார். வில்லவன் கோதை காட்டிய நல்ல வழியைப் பின்பற்றத் தவற விட்டமையாலேயே, அரசன் சார்பு நோக்கம் ஒன் றினைக் கூற நேர்ந்தது எனத் தெரியும் முறையில் அவர் அவன் செயல்களை விவரித் துள்ளார்.

தன்னுடைய வடபுலப் பயணத்துக்குச் செங்குட்டுவன் சார்பு நோக்கம் ஒன்றினைக் கூறியிருப்பது, அவனுடைய பெருமையைப் பறை சாற்றிக் கொள்ளவே யாம். எனினும், மேற்கொண்ட பணியை அவன் மறக்கவில்லை. ஏனையரசரைப் பழித்த வேந்தரைத் தான் இமயத்திலிருந்து எடுத்து வருங் கல்லைச் சுமக்க வைப்பதாக வஞ்சினம் கூறியுள்ளான். அறப்பணியைத் தன் விருப்பத்துக்கு இணைந்து வர வளைத்துக் கொண்டவன், தன் விருப்பத்தை அதற்குத் துணை செய்யும் முறையில் நிறைவேற்றிக் கொள்ளுவதாகக் கூறியுள்ளான். இவ் வாணிக முறை அடிகளுக்குப் பிடித்திருக்கவில்லை.

> ஆர் புனை தெரியலும் அலர் தார் வேம்பும்
> சீர் கெழு மணிமுடிக் கணிந்தோ ரல்லால்
> அஞ்சினர்க் களிக்கும் அடு போர் அண்ணல்! நின்
> வஞ்சினத் தெதிரு மன்னரு முளரோ?
> இமைய வரம்ப! நின் இகழ்ந்தோ ரல்லர்
> அமைக நின் சினம் என ஆசான் கூற
>
> 26 : 19–24

வஞ்சின முரைக்கும் எல்லைக்குச் செங்குட்டுவனைச் சின மூட்டக் கூடியவர் சோழ பாண்டிய ரிருவரே யாம். எனினும், அவர்களுக் காக அவன் போருக் கெழுந்தது பாராட்டத் தக்கதே யன்றோ ? 'நின் இகழ்ந்தோ ரல்லர்' என்ற ஆசான் சொற்கள், அரும்பத வுரைகாரர் கூறுவதனைப் போல், 'சோழ பாண்டியரையே யல்லால், நின்னை இகழவில்லை' என்று பொருள் படாது. ஏனெனில் அவ்வாறு கூறக் கூடியவனைச் செங்குட்டுவன் தன் ஆசானாகக் கொண்டிருக்க மாட்டான். ஆசான் நின் என முன்னிலை யொருமையைப் பயன்படுத்தியிருப்பினும், குறிப்பிட்டது மூவரையுமே யாம். வடபுல வேந்தர் மூவரையும் சேர்த்தே குறிப்பிட்டன ரன்றோ? பழி யாதுமெனின் அதனைத் தாபதர் தெரிவித்திருக்க மாட்டார் என்பது ஆசான் துணிபு.

செங்குட்டுவன் பறை யறைவித்துத் தெரிவித்த செய்தி, தோள் தினவு கொண்டவன் விடுக்கும் போ ரழைப்பு என்பதனை எவரும் அறிவர். எனவே, அவன் போர் செய்யாம லிமயஞ் சென்று வர முடியா தென்பதில் ஐய மில்லை. அப்படி யிருக்க, அவனைப் போர் செய்ய வேண்டா மென்று ஆசான் தடுத் திருப்பானா? செங்குட்டு வன் விரும்பா விடினும், கனக விசயர் போ ரிடாம லிரார். இதனை ஆசானு மறிவான். ஆகவே, தன் னரசனை யாசான் போர் செய்யாம லிருக்கச் சொல்ல வில்லை. அதற் காக, வஞ் சினம் உரைத் திருக்க வேண்டா மென்பதே அவர் கருத் தாம். 'அமைக நின் சினம்' என்றே கூறி யிருக்கின்றா னன்றோ?

வஞ்சியிற் பறை யறைந்து தெரிவிக்கப் பட்ட செய்தி யைக் கேட்டு, நூற்றுவர் கன்னர் தம் தூதுவன் சஞ்சய னைச் சேரனைக் காண அனுப்பி வைத்தனர். அவன், வடக்கு நோக்கிப் புறப் பட்ட அரசன் நீல கிரிக் கருகே தங்கி யிருக்கையில் வந்து சேர்ந்தான். சேரனை, அவன் நாட்டின் எல்லையிலேயே சஞ்சயன் கண்டான். அவன் எத் துணை விரை வாக வந் திருக்க வேண்டும்!

> வட திசை மருங்கின் வானவன் பெயர்வது
> கடவுள் எழுத வோர் கற்கே யாயின்
> ஓங்கிய இமயத்துக் கற்கால் கொண்டு
> வீங்கு நீர்க் கங்கை நீர்ப்படை செய்தாங்கு
> யாம்தரும் ஆற்றலம் என்றனர்.
>
> 26: 150–54

எம் மரசர் எனத் தெரிவித்தான். இதனால் கடவுட் பணி புரிதலில், நூற்றுவர் கன்னருக் கிருந்த விருப்பம் புலப் படுகின்றது.

செங்குட்டுவனுக்கு அவர்கள் விருப்பத்துக் கிணங்க மன மில்லை. இவனுக்குச் சார்பு நோக்கமும் ஒன் றுண்டு என்பது அவர்களுக்கு எப்படித் தெரியும்? இவனை வஞ் சியிலேயே கண்டு தெரிவித்து விட்டால், இமயஞ் சென்று

வருதலைத் தவிர்வான் என்பது அவர்கள் நோக்க மாகும். வஞ்சியில் எழும் கண்ணகியின் கோயிலுக்கு நூற்றுவர் கன்னர் இமயத்தி லிருந்து கல் கொண்டு வந்து தந்தனர் என்ற செய்தி, தமிழ் நாடெங்கும் பரவும். இப் பணி புரிவதனால், அவர்கள் தமிழ் மக்களுடைய நல்லெண்ணத்தைப் பெறுவர். தமக்கு நன்மையைப் பயக்காதெனின், வருந்திச் செயல் புரிவாரும் உண்டோ?

நூற்றுவர் கன்னரை அவர்கள் விரும்பிய வண்ணம் செய்யச் சொல்லின், அப் பொழுது கோயில் கட்டுவதனால் வரும் பெருமையிற் பெரும் பகுதி அவர்களையே சென்று சேரு மன்றோ? சேரன் இதனை ஒப்பக் கூடுமா? அவனை ஒப்பத் தூண்டவே, அவர்கள் தம் தூதுவனை விரையச் செய் திருக்கின்றனர். ஆனால், சேரனை வஞ்சித்து அவர்கள் தாம் பெருமை யடைய வேண்டும் என்று விரும்பி யிருக்க வில்லை. 'கற் கொண்டு பெயருமெங் காவலன்' என்ற செய்தியையே அவர்கள் கேட்டனர். எனினும், அவர்கள் தூதுவன், 'வட திசைப் பெயர்வது கற்கே யாயின், யாம் தரும் ஆற்றலம் என்றனர்' என்றே கூறி யுள்ளான்.

இமயத்தி லிருந்து கல்லெடுத்து வரச் செய்த முடிவு சேர னுடையதே யன்றோ? அங்ஙன மிருக்க அவனை அதனைச் செய்ய வொட்டாமல் தடுப்பது அழகாகாது. அவனுக்கு நெருங்கிய நண்பர்க ளாக விருந்த நூற்றுவர் கன்னர் அச் செயலைச் செய்ய எப்படி முன்வருவார்கள்? ஆகவே, அவன் ஒப்புதலைப் பெற்ற பின்னரே, தாம் செயல் புரிய விரும்பி யிருக்கின்றனர். இதனால் தான் விரும்பிய வண்ணம் சேரன் தானே பெய்தலை அவர்கள் வர வேற் றிருக்கின்றனர். கோதை கூறியதனைப் போல 'கற்கே யாதலின், யாம் தரும் ஆற்றலம்' என்று அவர்கள் தூதுவன் சொல்லவில்லை. அப்படிக் கூறுவது, செங்குட்டுவனை 'நீ வாரற்க' என்று கூறுவ தாக முடியு மன்றோ?

தன் னிடம் இத் துணை யன் புடைய நூற்றுவர் கன்னருக்குச் சேரன் என்ன மறு மொழி யளிக்கக் கூடும்? எனவே, அவன் தன் சார்பு நோக்கத்தை வற்புறுத்திக் கூற வேண்டி நேர்ந் திருக்கின்றது. இதனால், அரசன், தன் வட புலப் பயணத்துக்கு வே ெறாரு நோக்கமுடையவனுகக் காட்டிக் கொண்டது குற்ற மாகாது என்பதனை யடிகள் உணர்த்தி யிருக்கின்றார்.

பால குமரன் மக்கள் மற்றவர்
காவா நாவிற் கனகனும் விசயனும்
விருந்தின் மன்னர் தம் மொடுங் கூடி
அருந்தமிழ் ஆற்றல் அறிந்திலர் ஆங் கெனச்
சீற்றங் கொண்டிச் சேனை செல்வது

என்று செங்குட்டுவன் கூறுகின்றான்.

செங்குட்டுவன் தன் னுடைய சினத்தைச் சேனையின் மேலேற்றிக் கூறி யிருக்கின்றான். இச் செயல் ஆசான் சொற்களை அவன் ஏற்றுக் கொண்டதனைக் காட்டுகின்றது. கனக விசயர் தமிழாற்றலைப் பழித்த தாகவே கூறி யுள்ளான். சோழ பாண்டியரைப் பிரித்துக் கூறி யிருக்க வில்லை. இதனால் தன் னுடைய பிழையைத் தானே யுணர்ந்து அவன் திருத்திக் கொண்டான் என்பது விளங்குகின்றது. சஞ்சயன் 'கற்கே யாயின், யாம் தரும் ஆற்றலம்' என்றதற்கு மறு மொழி யளித்தா னுகையால், தான் மேற் கொண்ட அறப் பணிக்குஞ் சிறப் பளித் திருக்கின்றான். சற்று சிந்தித்துச் செயல் புரிவது, மக்களை எத் துணை மேன்மை யுடையவ ராக மாற்றி விடுகின்றது!

## 4. நிறைவு

காட்சிக் காதையில் கண்ட செங்குட்டுவன், கால் கோள் காதையின் தொடக்கத்தில் தன் அரசியல் அவாக் காரண மாக மாறித் தோன்றினான், அவ னுடைய நிலை அக் காதையின் நடுவிலேயே மாறுவதனைக் காண்கின்றோம். அவனை அவா வற்றவ னுகக் காணுங் காலத்தில் மிக மாட்சி

யுடையவ னாகத் தோற்றுவான். அம் மாறுபாடு இயல் பாக நிகழ்வதுவே எனக் காட்டவே, அடிகள் அவன் தன் பிழையை யுணர்ந்து திருந்துவதனைக் குறிப்பிட்டுக் காட்டி யுள்ளார். பிழை செய்வது மனித வியற்கை யாம். அதனை யுணர்ந்து மாற்றிக் கொள்வதே மேம்பாடு பெறும் வழி யாகும். அதனைப் பொருட் படுத்தாமல் புறக் கணிப்பவர் மக்க ளாகவே யிருப்பர்.

செங்குட்டுவன் சஞ்சய னிடம் சொல்லி யனுப்பிய வண்ணம், நூற்றுவர் கன்னர் அவனும், அவன் சேனையும் கங்கை நதியைக் கடக்க உதவி செய்தனர். அந் நதியின் வட கரையில் அவனை வர வேற்றனர். இதனால் அவர்க ளாட்சியின் பரப்பை நாம் தெரிந்து கொள்ள முடிகின்றது. கனக விசயர் தம் முறவினர் என்பதனையும் பொருட் படுத்தாமல், அவர்கள் சேரன் பக்கத்தி லிருந்தே போர் செய்தனர். அரசன் இமயஞ் சென்று கல் லெடுத்துக் கொண்டு, மீண்டும் கங்கைக்கு வரும் வரை அவ னுடன் இருந்தனர். இனி, செங்குட்டுவன் தன் நாட்டி லிருப்பது போல் கருதிக் கொள்ளலாம்.

செங்குட்டுவன் வஞ் சின முரைத்த வண்ணமே கனக விசயரைத் தான் கொண்டு வந்த கல்லினைச் சுமக்க வைத்தான். அதனைக் கங்கையில் நீ ராட்டச் சேர்த்த பின் தன் வீரருக்குப் பரிசுகளை வழங்கினான். நூற்றுவர் கன்ன ரைத் தம் தொழிலைக் கவனிக்க விடுதலை செய்து விட்டான் அதன் பின், சிறைப் பிடித்த கனக விசயரைச் சோழ பாண்டிய ரிருவருக்குங் காட்டி வருமாறு நீலன் என்ற தூதுவர் தலைவனை யனுப்பி வைத்தான்.

> இருபெரு வேந்தர்க்குக் காட்டிட ஏவித்
> திருந்து துயில் கொள்ளா அளவை.

27: 191-2.

நினைத்தது முடித்தல் அரசர்க்குக் கொற்ற மெனக் கூறப் படும். சேரன் பண்ணிய எண்ணி யாங்குச்

செய்து முடித்து விட்டான், எனினும், அவன் தூங்க வில்லை என்று அடிகள் குறிப் பிட் டிருக்கின்றார். அரசர் என்றும் அமைதி யாகத் தூங்க மாட்டார் போலும்! முல்லைப் பாட்டில் வரும் அரசனும் தூங்க வில்லை. நெடுநல் வாடையிலும் அரசன் தூங்க வில்லை. அரசர்க்கு என்றும் தொழில் முடியாது போலும்!

முல்லைப் பாட்டில் அரசன் வினை முடிய வில்லை. அடுத்த நாள் போர் நிகழ விருந்தது. எனவே, அவன் கவலை யுடன் தூக்கம் பெறாது விழித் திருக்கின்றான். நெடு நல் வாடையில் அரசன் வினை முடிந்து விட்டது. அவன் நள் ளிரவில் தூறலையும் பொருட் படுத்தாது விழுப் புண் பட்ட மறவரைப் பார்த்து வருகின்றான். தனக்கு வெற்றியைத் தர உடல் வாடியவ ரனைவரையும் கண்ட பின்னரே அவன் அமைதி யுடன் தூங்கக் கூடும். செங்குட்டுவனுக்கு அத் தகைய கவலையோ, கடமையோ இல்லை. வினை முடிந்தது; வீரருக்குப் பரி சளித் தாயிற்று; இனி, அமைதி யுடன் தூங்கலா மல்லவா?

கனக, விசயரை நீல னுடன் அனுப்பி வைத்த பின்னும் வேந்தன் தூங்க வில்லை என்பதனை யறிகின்றோம். வினை முடிந்ததே யொழிய, சேரன் அவா நிறை வேற வில்லை. தம்மைப் பழித்த வேந்தர் சிறைப் பட்டு நிற்ப தனைக் காணும் சோழ பாண்டியர் மனங் களிப்பார்க ளன்றோ? அவர்கள் நன்றி யறித லுடையவ ராகத் தம்மைக் காட்டிக் கொள்ளச் சேரனைத் தலைவ னாக ஏற்றுக் கொள்ளவேண்டுமே! அவ்வாறு அவர்கள் செய்த பின்னரே, செங்குட்டுவன் அமைதியுடன் தூங்கக் கூடும். அதுவரை அவன் அவா அவனைத் தூங்க விடாது.

அவாவின் இயல்பையும், போக்கையும், பயனையும் நாம் நன்கு தெரிந்து கொள்ள வேண்டு மென்றே அடிகள் செங்குட்டுவன் செயல்களை மிக விரி வாகக்கூறி யுள்ளார். ஒரு நல்ல அரசனைப் பற்றிக்கொண்ட அவா, அவனை

என்ன பாடு படுத்தி வைக்கின்றது! அவ னியல்புக்கு மாறாக வஞ்சின முரைக்க வைத்தது; தன்னைப் போன்ற அரசர்களைப் பொதி மாடுகளைப் போல் நடத்தத் தூண் டிற்று; அவர்களைக் காட்சிப் பொருள்களைப் போல் பிற வரசருக்குக் காட்ட ஏவி யிருக்கின்றது. இவ் வளவுக்கும் அது என்ன பயனை யளிக்கப் போகின்றது? செங்குட்டு வன் ஏக்க முடையவனாகித் தூங்காம லிருந்தது அதன் வினையே! அதுவே அவன் பெற்ற பய னாகும்!

நீளமர் அழுவத்து நெடும்பே ராண்மை யொடு
வாளுங் குடையு மறக்களத் தொழித்துக்
கொல்லாக் கோலமொடு உயிர் உய்ந் தோரை
வெல் போர்க் கோடல் வெற்றம் அன்றென
த[illegible]த்தார்த் தானைத் தலைவற் குரைத்தனன்.
28 : 90–4

சோழ வரசனை அரி யணையின் மீது அமர்த்தி யிருப் பவன் செங்குட்டுவனே யாம். இம் மாமன் சேய், பின்னர்ப் பாண்டிய னுடன் சேர்ந்து சேர னுக்குத் தோற்றவன். அவன் என்றும் போரில் வென்றவ னாகத் தெரிய வில்லை. போரில் ஈடு பட்டவ னென்றுங் கருதுவதற் கில்லை. கொற்றம் நிறைந்த பாண்டிய னுடன் சேர்ந்திருந் ததுவொன்றே அவன் போர்த் தொழிலாம். அத் தகைய வன், செங்குட்டுவன் செயலைக் கண்டு பெரிதும் வெட்கி யிருக்கின்றான். சேர னுடைய தூதுவ னிடம் பேசக் கூட அவன் விரும்பி யிருக்க வில்லை. செங்குட்டுவன் செயல் வெற்ற மன் றெனத் தன் சேனைத் தலைவனை நோக்கிக் கூறி யிருக்கின்றான்.

அமர்க்கள மரசன தாகத் துறந்து
தவப்பெருங் கோலம் கொண்டோர் தம்மேல்
கொதியழற் சீற்றம் கொண்டோன் கொற்றம்
புதுவது என்றனன் போர்வேற் செழியன்

பாண்டியன் இளைஞனே யெனினும் தகுதி யுடைய வன். அவனைப் போர் வேற் செழிய னென்று குறிப் பிட்

டிருப்பதற் கொப்ப அவன் பொறுப் புணர்ந்து பேசி யிருக்கின்றான். சோழனைப் போல் அவன் சேரன் செயலைக் கண்டு வெட்கி யிருக்க வில்லை; ஆனால் அது தகுதி யுடைய தன்றே என அஞ்சினான். அவன் அச்சம் அற வுணர்ச்சி காரணமாக எழுந்ததாம். பெரும் பெயருடன் ஐம்ப தாண்டுகளுக்கு மேல் அரசாண்ட பெரியோன் இத் தகைய செயலைச் செய்ததனை அவனால் நம்பக் கூட வில்லை. சினம் போரில் வெற்றி பெறுவதனோடு மடிந்து விட வேண்டும் என்பது அவன் கருத்து. அதன் பின்னரும், அதற்கு இடமளித்து இவ்வாறு செய்தல், செங்குட்டு வனைப்போல் மூத்தவனுக்குப் புதியது என்று அவன் கூறினான்.

பாண்டியன் இளைஞனே யெனினும், சேரனைப் பற்றி அறியாதவனாக விருக்க முடியாது. அவன் சொற்களால் செங்குட்டுவன் தனக்கு இயல் பல்லாத தொன்றினைச் செய் திருக்கின்றான் என்பது விளங்கு கின்றது. ஐம்ப தாண்டுகளாகத் தன் வழக்கத்தி லில்லாத ஒரு செயலை அரசனைச் செய்ய வைத் திருப்பது அவாவே யன்றோ? அதனால் அரசன் பெற்ற நன்மைகள் தூக்க மின்மை, சோழன் பழிப் புரை, பாண்டியன் பரி வுரை என்பனவே யாம். இவற்றை ஈட்டவா அரசன் கங்கைக் கரையில் போ ரிட்டான்? மன்ன ரிருவரைச் சிறைப் பிடித்துக் கொணர்ந்தான்?

தன்னால் அரசு கட்டிலில் அமர்த்தப் பட்டவன் பழிக்கவும், ஐந்தாண்டுகளுக்கு முன் அரசு கட்டிலில்ஏறிய இளைஞன் பரிவு காட்டவும் செய்து கொண்டவன் செங் குட்டுவனே யன்றோ? தமிழகத்தின் தலைமைப் பதவிக் குரி யவனாக விருந்த சேரன், அதனைப் பெறச்செய்த முயற்சியா லேயே அதற் குரிய னல்ல னாயினான்; இழந்தும் விட்டான். ஒரு பேரரசனை இந் நிலைக்குக் கொணர்ந்து விட்டது அவாவே யாம். ஏனெனில், ஆசான் எடுத்துக் காட்டிய

பின் அவன் தன் சினத்தை வெற்றி கொண்டு விட்டான் என்றே சொல்ல வேண்டும். அவன் அதனை வெற்றி கொண்டதனை அவனுடைய செயல்களாலேயே அறிகின்றோம்.

> ஏனை வேந்த ரிருவருங் கூறிய
> நீண்மொழி யெல்லாம் நீலன் கூறத்
> தாமரைச் செங்கண் தழல் நிறங் கொள்ளக்
> கோமகன் நகுதலும்......................
>
> 28 : 108.11

செங்குட்டுவன் இயல் பாகச் சின மிக்கவன் என்பதனைக் குறிப்பிட அடிகள் அவனைத் தாமரைச் செங்கண்களை யுடைவனாகக் காட்டி யிருக்கின்றார். ஏனை யரசர் கூறியவை அவனைச் சின மூட்டிய துண்மையே! அதன் கண்கள் தழல் நிறங் கொண்டனவே! ஆனால், அச் சினத்தை மிக வொட்டாமல் அவன் அடக்கிக் கொண்டு விட்டான். அதனை நகையாக மாற்றியும் விட்டான். இல்லையேல், சினம் அவனுடைய இயல் பாகச் சிவந்த கண்களை மேலுஞ் சிவக்க வைத்துக் கருஞ் சிவப் புடையன வாக மாற்றி யிருக்கும். அவ்வாறு நிகழ வில்லை; தழல் நிறங் கொண்டு ஒளி விட்ட அளவோடு நின்று விட்டன.

ஆசான் சொற்கள் அரசனை மாற்றி யிருக்கின்றன. அவன் ஆராய்ச்சி யுடையவனாகி விட்டான். சோழன் கூறியவை பழிச் சொற்களே யாம். எனினும், அவன் சேரனுடைய அத்தை மகனையிற்றே! செங்குட்டுவனால் அரச பதவியில் அமர்த்தப் பெற்றவனாயிற்றே! அவனைச் சினந்து என்ன செய்வது? பாண்டியன் இளைஞனே யெனினும், பழிக்க வில்லை; பரிவே காட்டினான். அவனுக்குள்ள அற வுணர்ச்சி சேரனுக் கில்லாது போயிற்றே! அவனிடம் அற வுரை கேட்கும் அளவுக்குச் சேரன் தாழ நேர்ந்து விட்டதே!

இந் நிலையைப் பெற வைத்தது அவாவே என்பதனைச் செங்குட்டுவன் உணர்ந்து கொண்டான். அது தன்னை அறிவிலி யாக்கி விட்டதனை அறிந்து கொண்டான். ஆகவே அவனுடைய சினம், தன் அறியாமையைக் கண்டு இறந்தது. பிறர் மேல் சினந்த சேரனை, அவனுடைய அறிவு தன்னையே சினந்து கொள்பவனாக மாற்றி விட்டது. அதனால், அவனை ஒளி பெற்ற கண்களையுடைய வனாக்கி விட்டது. அவன் தன் அறியாமையையும், அவாவையும் வெற்றி கொண்டான். அவன் கண்களின் ஒளியும், சிரிப்புமே அவற்றைப் புலப் படுத்துகின்றன.

அடிகளுக்கு ஒரு நல்ல வாய்ப்புக் கிடைத்தது. அதனை மாடலன் வாயி லாக அவர் நிறை வேற்றிக் கொண்டுள்ளார். செங்குட்டுவன் தனக்குச் சிறப் பளிக்கும் என்று கருதிய அவன் போர் நிகழ்ச்சிகளை விவரிக்கச் செல விட்ட அடிகளினும் அதிக எண்ணிக்கை யுடைய அடிகளால் மாடலன் அறவுரையை அடிகள் அமைத்துள்ளார். இவற்றைக் கொண்டே அவர் எதனைச் சிறப்புடைய தெனக் கருதி யிருக்கின்றார் என்பதனைத் தெரிந்து கொள்ளலாம். செங்குட்டுவன் இவ் வற வுரையைக் கேட்ட பின்னர் முற்றிலும் மாறி விட்டான். அவன் தன்னை மாற்றிக் கொள்ளும் பண்புடையவனே என்பதனை யடிகள் முன்னரே புலப் படுத்தி யுள்ளார். எனவே, அவன் மாற்றம் திகைப்பினைப் பயப்ப தாக வில்லை.

ஆரிய அரசரை அருஞ் சிறை நீக்கிப்
பேரிசை வஞ்சி மூதூர்ப் புறத்துத்
தாழ் நீர் வேலித் தண் மலர்ப் பூம் பொழில்
வேளா விக்கோ மாளிகை காட்டி
நன் பெரு வேள்வி முடிந்ததற் பின்னாள்
தம் பெரு நெடு நகர் சார்வதுஞ் சொல்லி யம்
மன்னவற் கேற்பன செய்க நீ யென
வில்லவன் கோதையை விருப்புட னேவி

28: 195–203.

கனக விசயரை அரசன் விடுதலை செய்தான். தானே யுடன் சென்று, அவர்களை வஞ்சிக்குப் புறத்தே, பூம் பொழிலி னடுவே யமைந்த மாளிகை யொன்றினிற் சேர்ப் பித்தான். வினை முடிந்தபின் தனக்குப் பேருதவி செய்த வரும், தன்னினும் பன் மடங்கு பெரிய நிலப் பரப்பை ஆள்பவருமாகிய நூற்றுவர் கன்னரை, தன் பெரு நெடு நகர்க்குச் செல்கென ஏவினவன் செங்குட்டுவன். அவனே, இப்பொழுது, தன்னிடம் தோற்றுச் சிறைப் பட்டவராகிய கனக விசயரை, தான் செய்யும் வேள்வி முடியும் வரை இருக்க வேண்டிக் கொண்டு, அதன் பின் அவர் தம் பெரு நெடு நகர்க்குச் செல்லலா மெனச் சொல்கிறான்.

அவ் விரு அரசர்க்கும் ஏற்பன செய்ய வில்லவன் கோதையைச் செங்குட்டுவன் விருப் புடன் ஏவினன். கோதை, சேர னுடைய முத லமைச்சன்; சேரர் குடியில் வந்தவன்; செங்குட்டுவ னோடு கங்கைக் கரையில் போர் செய்து, கனக விசயரைச் சிறைப் பிடித்தவன். ஆகவே, அவன் அவர்களுக்குப் பணி புரிவது செங்குட்டுவனே யிருந்து பணி செய்வதற் கொப் பாகும். அவர்களைத் தன் னுடன் வஞ்சியி லிருக்கச் செய்வது, தன் பெருமையை அவர்களுக்கு எடுத்துக் காட்டுவ தாக முடியு மென்றே சேரன் அவர்களைத் தனி மாளிகையில், ஊருக்கு வெளியே யிருக்கச் செய்தான். சேரன் மக்களுள் மாண்பு மிக்கவ னாகி விட்டான்.

'சினத்தொடுங் கொற்ற முற்றிச் செருக்கி யிருந்த செங்குட்டுவன் என்ன வாயினன்? தன்னைப் பழித்தவ ரெனக் கருதி, பகை கொண்டு, போ ரிட்டு, சிறைப் பிடித்து, கல்லைச் சுமக்க வைத்து அவ மதித்தவர்களைத் தன்னை யொத்தவ ராகவும், தன்னால் போற்றத் தக்கவ ராகவும் மதிக்கும் மாற்றம் எளிதில் நிகழக் கூடியதன்று. மேலும் கனக விசயர் சேரனை நோக்க வயதாற் சிறு பிள்ளைகளாவார். எனினும், அவர்களைத் தா னிருந்து

பணி புரியும் மாண்புடையவராகச் சேரன் மதிக்கின்றான். அவன் செயற்கரிய செய்தவனாகி விட்டான்.

கண்ணகி தன்னை மக்களுள் மேம் பட்டவளாக உயர்த்திக் கொண்டவள். அவள் பெருமையைப் பரப்ப, அவளுக்குக் கோயில் கட்ட முற்பட்ட சேரன் தன்னை மாநில மன்னரினும் உயர்ந்தவனாக மாற்றிக் கொண்டு விட்டான். அவன் விரும்பியது தமிழரசர் இருவர் தன்னைத் தலைவனாக ஏற்று மதிக்க வேண்டுமென்பதே யாம். அவ் விருப்பம் கை கூட அவன் செய்த முயற்சி தோல்வி யுற்றது. ஆனால், அத் தோல்வி அவனை முற்றிலும் புதியவனாக மாற்றி விட்டது. சினத்தையும், பகையையும் தன் மனத்தி னின்றும் அறவே அகற்றியவனாகச் சேரன் விளங்கினான்.

தத்துவ நூல்கள் தெரிவிக்கும் அகந்தையின் அழிவை ஆணவத்தின் நீக்கத்தைச் செங்குட்டுவன் செயலிற் காட்டி விட் டிருக்கின்றான். இதனால் அவன் பெற்ற பயன்களை அளவிட்டுக் கூற முடியாது. சோழ பாண்டியரே யல்லால் மாளுவம், கொங்கு, கங்கையின் வட புலம், இலங்கை என்ற பல தேயத் தரசரும் அவனைத் தம் முட் சிறந்தோனாக, அறிவு மிக்கவனாக, மதிப் புடையவனாகக் கருதினரன்றோ? அவன் செய்த வண்ணமே, அவ ரனைவரும் தத்தம் நாடுகளில் செய்ய விரும்பின ரன்றோ? அவாக் கொள்ளுதலை விட, அதனைத் துறத்தல் பெரும் பய னுடையது என்பதனைச் சேரன் கதையைக் கூறி அடிகள் நம்மை யுணர்ந்து கொள்ளச் செய் திருக்கின்றார்.

மலர் தலை யுலகத்து உயிர் போகு பொது நெறியில் செங்குட்டுவன் செல்லுவதனை மாடலன் விரும்பி யிருக்க வில்லை; அவனுக்கு வானவர் போற்றும் வழியை யளிக்க முற் பட்டான். அவன் கூறிய வாய் மொழியைச் செங் குட்டுவன் ஏற்றுக் கொண்டான். அதனாற் செய் தவப் பயன்களும், சிறந்தோர் படிவமும் கை யகத்தன போற்

காணும் பேறு பெற்றான். இம்மையிற் பெருமையைப் பெற்றான். மக்கள் நிலையைக் கடந்து உயர் கதியைப் பெறும் பாத்திர மாகத் தன்னை மாற்றிக் கொண்டான். கண்ணகியால் நற் பேறு பெற்றவன் செங்குட்டுவன் என்பது மிகை யாகாது. அவனைப் போலவே பிறரும் பய னடையக் கூடும் என்று, அடிகள் அவன் செய்தியை யும் இக் காப்பியத்துள் விரிவாக உரைத் திருக்கின்றார்.

புகார்க் காண்ட நிகழ்ச்சிகள் நிகழ்ந்து முடிய எட் டாண்டுகள் பிடித்தன. இவ் வுண்மைக் காலத்தை, அக் காண்ட நிகழ்ச்சிகள் நிகழ்ந்த பருவ வொற்றுமையைக் கொண்டு அடிகள் ஒரு பருவத்துக்குள் நிகழ்ந்து முடிந்தன போலக் காட்ட முடிந் திருக்கின்றது. மதுரைக் காண்ட நிகழ்ச்சிகளின் உண்மைக் கால எல்லை முது வேனிற் பருவ மொன்றே யாம். கதை நிகழ்ச்சிகள் இரு பருவங்களில் நிகழ்ந்தன என்பதனையும் குறைத்துக் காட்ட அடிகள் விரும்பி யுள்ளார். மதுரைக் காண்டத்தில் பல விடங் களில் தென்றல் குறிப் பிடப் பெறுகின்றது.

கதையின் உண்மைக் காலத்தைக் குறைத்துக் காட்ட முயன்றதனைப் போலவே, அடிகள் செங்குட்டுவன் செயல்க ளனைத்தும் தமி ழகத்தின் சார் பாகவும், அதனு டைய நன்மைக்கும் நிகழ்ந்தன போலத் தோன்றும் முறை யில் அவற்றை விவரித் துள்ளார். இத் தோற்றத்தை நம்மை ஏற்றுக் கொள்ள வைக்க அடிகள் ஒ ருத்தியைக் கை யாண் டுள்ளார். இச் செயல் செங்குட்டுவனைச் சிறப் பிப்ப தாகும்; எனினும் இது அடிகள் தம் முன்னோனுக் குக் காட்டும் சலுகை யாகாது. ஏ னெனில் செங்குட்டுவன் அவ்வாறு சிறப்புப் பெறுந் தகுதி மிக்கவ னவான்.

விருந்தின் மன்னர் தம் மொடுங் கூடி
அருந்தமி ழாற்றல் அறிந்தில ராங்கெனச்
சீற்றங் கொண்டிச் சேனை செல்வது.

கனக விசயர் மூ வேந்தர் ஆற்றலையும் சேர்த்தே குறிப் பிட் டிருக்கின் றனர். எனினும், அதனைச் செங் குட்டுவன் சோழ பாண்டியருக்கு மட்டுமே பழி யாகும் எனக் கருதி யிருக்கின்றான். அதனைத் தன் செல்வாக்கை மிகுத்துக் கொள்ளப் பயன் படுத்தி யுள்ளான். ஆகவே இங்கு அவன் அருந்தமிழ் ஆற்றல் என்பது மூ வேந்தரை யும் குறிப்பிடு மேனும், கனக விசயரோடு போ ரிட்டது செங்குட்டுவன் ஆற்றலே யாம்.

அழும் பில் வேள் கூறிய வண்ணம் பறை யறைந்தத னால், செங்குட்டுவன் போரைத் தானே தேடிக் கொண் டான். ஆனால், அதனைப் பிறர் சார் பாக நிகழ்த்துவ தாகக் காட்ட அவன் அருந் தமிழ் ஆற்றல் என்ற பொதுச் சொற்களைப் பயன் படுத்தி யிருக்கின்றான். தன் செயலை நாம் எவ்வாறு கருத வேண்டும் என்று அவன் விரும்பி யிருக்கின்றான் என்பதனையே இச் சொற்கள் தெரிவிக்கின் றன. கனக விசயர்க்கு உணர்த்திக் காட்டியது சேரன் ஆற்றலே யாம், அருந் தமி ழாற்ற லன்று.

> செறிகழல் வேந்தன் தென்தமிழ் ஆற்றல்
> அறியாது மலைந்த ஆரிய மன்னரை
> 27: 5, 6.

இப் பகுதி குறிப் பிடுவது செங்குட்டுவன் ஆற்றலையே யாம். அதனை அடிகள் தென் தமிழ் ஆற்றல் என்று குறிப்பிட் டுள்ளா ரெனினும், செறி கழல் வேந்தன் என்று அடை யளித்து, சேர னுடையதே என்பதனைப் புலப் படுத்தி யுள்ளார். இருப்பினும் இது மயங்கக் கூறுவ தாகவே அமைந் திருக்கின் றது.

> அரியிற் போந்தை யருந்தமி ழாற்றல்
> தெரியாது மலைந்த கனக விசயரை.

இப் பகுதி குறிப் பிடும் அருந்தமிழ் ஆற்றலும், அரியிற் போந்தை என்ற அடை மொழிகளால் சேர னுடைய ஆற் றலை மட்டுமே குறிப் பிடும். முன்னதனை விட இப் பகுதி

தெளிவு மிக்கது : எனினும், இதுவும் மயக்க மூட்டும் முறையில் அமைந்ததுவே யாம். ஏ னெனில், மேலும் இரண் டிடங்களில் அடிகள் இச் சொற்களைத் தமிழ் மக் கள், வேந்தர் என்பா ரனைவரையும் குறிப் பிடப் பயன் படுத்தி யுள்ளார்.

1. வாய் வா ளாண்மையின் வண் தமிழ் இகழ்ந்த
காய்வேல் தடக்கை கனகனும் விசயனும.

2 செல்வம் நில்லா தென்பதை வெல் போர்த்
தண் தமிழ் இகழ்ந்த ஆரிய மன்னரிற்
கண்டனை யல்லையோ ?

இப் பகுதிகளில் வண் தமிழ், தண் தமிழ் என்பன தமிழ் வேந்தர் அனைவரையும் குறிப் பிடுவனவாம்.

வடவா ரியரொடு வண் தமிழ் மயக்கத்துன்
கடமலை வேட்டம் என் கட்புலம பிரியாது.

25: 158, 9

இப் பகுதி சேரன் ஆற்றலை மட்டுமே குறிப் பிடுவது. இது அவன் தன் தாயைக் கங்கை யாட்டச் சென்ற காலத்து நிகழ்ந்த போரினைக் குறிப் பிடுவது. எனவே, கனக விச யர் பழித்ததற்கு முன் நிகழ்ந்த நிகழ்ச்சி யாகும். ஆறு இடங்களில் பயன்படும் தமிழ் என்ற சொல் மூன் றிடங்க ளில் சேரனையும், மூன் றிடங்களில் தமிழ் வேந்த ரனைவரை யும் குறிப் பிடுவதாய் அமைந் திருக்கின் றது.

மூ வேந்தரையும், தமிழ் மக்களையும், மொழியையும் குறிப் பிடும் ஆற்ற லுடைய பொதுச்சொல்லைச் சேரனும், கோதையும் தம்மையே குறிப் பிட்டுக் கொள்ளப் பயன் படுத்திக் கொண் டுள்ளனர். அடிகள் அதனை ஒ ரிடத்தில் பொதுப் பொருளிலும், இரண் டிடங்களில் அடை மொழி தந்து சேரனை மட்டும் குறிப் பிடவும் வழங்கி யுள்ளார். மாடலன் அதனைப் பொதுப் பொருளில் வழங்கி யிருக்கின் றான். சேரனும், கோதையும் பொதுச் சொல்லைத் தம் மையே குறிப் பிட வழங்கிக் கொள்ள உரிமை யளித் திருப்பதே அடிகள் கை யாண் டுள்ள உத்தி யாம்.

கண்ணகி கடவுள் நிலையை எய்தினள் என்பதனை நமக் குணர்த்த, அவள் கடவுளரை ஏவல் கொண்டதாக வும், வானுலகு சென்றதாகவும், செங்குட்டுவனுக்குக் கடவுள் நல்லணி காட்டியதாகவும், மாநில மன்னர்க்கு வர மளித்ததாகவும், தம் நிலையை யறிந்து கூறியதாகவும் அடிகள் காட்டி யிருக்கின்றார். இவற்றை நோக்கச் செங் குட்டுவன் சிறப்பினை வெளிப் படுத்திக் காட்ட அவர் செய் துள்ளவை எம்மட்டு? சேரன் தமக்கு முன்னோனாக விருந்தது தம் முடைய நடுவு நிலையைக் குறைத்துக் காட்டு மென்பதனை அவ ரறிவார். ஆனால், அதற் கஞ்சி, அவர் தம் கடமையைச் செய்யத் தவற வில்லை.

கண்ணகி கண்ட கனவு பலித்தது; அதனை யறிந்து அவள் ஆறுத் துய ருற்றாள்; கண்ணீர் பெருக்கினாள். அடி கள் கண்ட கனவு பலிக்க வில்லை. தமிழகம் இணைய வில்லை. ஆனால் அதற் காக அவர் மகிழ்ச்சியே யடைந்தார். ஏனெனில், அது சேரனை ஆராய்ச்சி யுடையவனாக மாற் றியது. அவனை நல் லாற்றிற் செல்லத் தூண்டியது. கண்ணகியின் வாழ்க்கையைக் காட்டினும் நம் மனத்தை நன்கு கவரக் கூடியது அவன் வாழ்க்கையே யன்றோ? மேலும், அது அவாவின் தோற்றம், இயல்பு, போக்கு பயன் என்பவற்றை நன்கு விளக்கிக் காட்டவும் பயன் படுகின்றது.

செங்குட்டுவன் அவாவைத் தன் மனத்தே புக விட்ட மையால், தாக்கம் பொறாத வனாய்த் துன்ப மடைந்தான். அடிகளும் தமிழ் நாடு இணைய வேண்டு மென்று விரும்பி, அவன் செயல்களை விவரித் துள்ளாரே! இஃது மோ ரவாவே யன்றோ? இவ் வவாவும் தோல்வி யுற்றது பொருந்துவதே! ஆனால் அவாக் கொண்டவ ராகிய அடி களுக்கு இதனால் என்ன பயன் விளைந்தது. அடிகள் விருப்பம் கொண்டதும், சேரன் அவா வுற்றதும் ஒன் றாக மாட்டா. அவன் தனக்கு நன்மையை நாடியவன்; அவர்

உலக நன்மையை விரும்பினுர். இருப்பினும், அவரும் விருப்பங் கொண்டதன் பயனைப் பெற்றுள்ளார்!

சமயங்கள் பல விருப்பதனைப் போலவே, மெய் யுணர்வு பெறவும் பல வழிகள் காட்டப் பெறுவ துண்டு. அவற்றை அறிவு, அன்பு, தொழில், யோகம் என்ற பாதைக ளாகத் தத்துவ நூல்கள் வகுத்துக் காட்டும். இவை யனைத்தும் ஒரு முடிவினைப் பெறக் கை யாளப் பெறுவ னவே யாம். எனினும், மக்கள் மன நிலைக் கேற்ப இவை பல வாகக் காட்டப் பெற் றுள்ளன. பயற்சிக் காலத்தே எவ் வழியை மேற் கொண்டாலும், இறுதி யாக உணர்வு பெறுதல் அறிவா னடைவதே யாம்.

சுற்று வழிகளில் அலைந்து திரிந்து நாட்களைக் கழிக் காமல், இறுதி யாகப் பயன் படும் அறிவின் துணையை முதலிலேயே நாடுவது சிறந்தது எனப் பலரும் கூறுவர். அடிகள் கை யாண்டு வெற்றி பெற்றது அறிவுப் பாதையே யாம். கண்ணகி கடவுள் நிலையை யடைந்ததனை அவர் பல படிகளைக் கடந்த வளர்ச்சி யாகக் காட்டி யுள்ளார். அறிவுப் பாதைக்குக் கூறப் பெறும் படிகளையே அவர் விளக்கி யுள்ளார். இந் நூலுக்கு அவர் அளித்துள்ள வாழ்த்துப் பகுதி அறிவுப் பாதையைச் சிறப்பித்துக் காட் டுவ தாகவே அமைந் திருக்கின்றது. ஆகவே, அடிகள் அப் பாதையைக் காட்டுபவர் என்பதனை யறியலாம்.

மெய் யுணர்வு பெற்றார், அதனைப் பெற எவ் வழியை யுங் கை யாளலா மெனக் கூறுவ ரேனும், தாம் கை யாண்டு வெற்றி பெற்றதனையே எளிய தாகக் குறிப் பிடு வர். அதனை மேற் கொள்ளத் தூண்டுவர். மாடலன் செங்குட்டுவனை மேற் கொள்ளத் தூண்டியது தொழிற் பாதை யாம். எனினும், அடிகள் இதனை இறப்பச் சிறப் பிக்க நேர்ந் திருக்கின்றது. அவர் விருப்பங் கொண்ட தற்கு இதுவே பய னும். தாம் கை யாண்டு வெற்றி பெற் றதற் கயலான வழியை அவர் பெரிதும் சிறப்பிக்க நேர்ந்த தன்றே?

மறையோன் மறை நா உழுது வான்பொருள்
இறையோன் செவிசெறு வாக வித்தலின்,
வித்தியது பெரும்பதம் விளைந்து பதம் மிகுத்தலின்
துய்த்தல் வேட்கை.

28: 187, 90.

யுடையவனுய்ச் சேரன் வேள்விக் காவன செய்ய முற்பட்டான். மாடலன் சேரனை உய்யக் கொள்ளக் கையாண்ட முறையையும், அதன் பயனையும் அடிகள் விளக்கியிருக்கும் முறையிலேயே, அவர் தம்முடைய காப்பியத்தின் பண்பினையும் புலப்படுத்தியுள்ளார். இதனைப் பெருமை என்ற பெருந் தலைப்பினையுடைய கட்டுரையாற் காணலாம்.

## 5. நனவு

இளமை, அழகு, குணம், குடிப் பிறப்பு என்பவை ஒத்திருக்கின்ற ஆடவனும், நங்கையும் தாமே எதிர்ப்பட்டுக் கண்டு காதல் கொண்டனர் என்பதனைத் தெரிவிக்கு முன், சங்கப் புலவர் மனத்தை மயக்கும் மலைக் காட்சிகளை விவரிப்பது வழக்கம். மலையின் தோற்றம், அழகு, நிலை என்பன மக்களை மகிழ் ஊட்டும். மகிழ்ச்சியுடையவர் தம்மைப் போல் பிறரும் அதனைத் துய்க்க வேண்டும் என்று விரும்புவது இயல்பாம். இதனால், மலை இளைஞர் மனத்தே காத லுணர்ச்சியைத் தூண்டு மியல்புடையது எனக் கண்டு, புலவர், அவர்களுடைய முதற் கூட்டம் மலையில் நிகழ்வது போலக் கூறும் புலனெறி வழக்கத்தை மேற் கொண்டனர்.

பிரிவு வருத்தத்தை விளைவிக்கும்; இதனைக் கூறுமுன் புலவர் பாலை நிலத்தைத வருணிப்பது வழக்கம். கடுங் கோடையில், காடும் மலையும் தீய்ந்து புற்கென்றிருக்கும். அக் காலத்தே குடி நீரும் கிடைப்ப தரிதாகி விடும். அவ்விடங்களில் வாழும் விலங்குகளும், வேற்றிடங்களுக்குச் சென்று விடும். 'புள்ளும் வழங்காப் புலம்பு கொள் ஆரிடையை' நடந்து கடக்க நேர்பவர் எத்தகைய தீவினை

யைச் செய்தவ ராக விருக்க வேண்டும். இவர்கள் தாமுறுந் துன்பத்தைப் பிறர் துய்க்காது தப் பட்டும் என்று விரும்புது இயல்பே யாம். எனவே, பாலை நிலம், பிரிவினைப் புலப் படுத்த, தக்க பின் திரையாய் அமைந்திருக்கின்றது.

மக்கள் தொகை மிகக் குறைவாக விருந்த பழங் காலத்தில் காடுகள் மலிந் திருந்தன ; எளி தாகக் கடக்க முடியாத அளவின தாகவு மிருந்தன. இப் பெரிய காடுகளைப் பிரிந்து வாழுங் காதலரைப் பிரித்து வைப்பன வாகப் புலவர் கருதினர். மழை பெய்த பின்னர், காடுகள் கவின் பெறும். தம்மைக் கடந்து செல்வார்க்கு நீரும், நிழலும் தரும். எனவே, பிரிந் துறையுங் காதலர், கார் காலத்தில் கூடுவ தாகக் கூறும் புல னெறி வழக்கம் தோன்றிற்று. காதலரைப் பிரிந்து தனித் திருக்கும் காரிகையர் களையிழந்த முகத்தராய் இருப்பர் ; காதலர் வருகையால், பொலிவு பெற்றுப் புன் முறுவல் மாறுத முகங்களை யுடையவராவர். காட்டின் கார் காலத்துத் தோற்றமும், காதலன் வரவு தோற்று விக்கும் பெண்ணின் பொலிவும் கவர்ச்சி யுடையன வாக விருக்கும்.

நீர் வளமும், நில வளமும் மிக்க இடங்களில் பயிர்த் தொழில் நடக்கும். அங்கு மக்கள் சேர்ந்து வாழும் குடியிருப்புக்கள் தோன்றும். உழுது விதைத்து விட்ட பின்னர்ப் பொழுது போக்கப் பலர் கூடி வம்பு பேசுவது இயல்பே யன்றோ? இப் பேச்சு வளர்ந்து கை கலப்பில் முடியும் ; வெட்டிப் பேச்சால் வே றென்ன விளையும்? இவ்வாறு மக்களை மாறு கொள்ளச் செய்யும் இயல்பினைக் கொண்ட மருத நிலத்தைக் காதலர் ஊடிப் பிரிந்து சச்சரவு செய்வதற்குத் தக்க பின் திரை யாகப் புலவர் அமைத்துக் கொண்டனர்.

கடலில் காட்சி மாறு பாடுகளைக் காண முடியுமா? கண்ணுக்கு எட்டிய தூரம் வரை ஒரே தன்மைய தாகவே தோன்றும் இயல் புடையது கடல். அவ்வாறே பெண்

களின் ஏக்கத்துக்கும் எல்லை காண வியலாது; துன்பத்தையே தரும் பண்புடையது ஏக்கம். அதனுடைய முடிவு எப்படியிருக்கும் என்று யாராற் கூறக் கூடும்? கடலில் மீன் வேட்டைக்குச் சென்றவன் திரும்பி வருவன் என்று யார் உறுதி கூறக் கூடும்? திரும்பிக் கரை சேர்ந்தவன் மறுபிறப் பினைப் பெற்றவனே யாவான். ஏக்கந் தொலைந்த நிலையும் அத் தகையதே யாம். நெய்தல் நிலம் இரங்கற் பொருளைப் பயக்கவே தோன்றிற்றுப் போலும்!

சங்கப் புலவர் போற்றிய மரபுகளனைத்தும் இயற்கையால் உருவாக்கித் தரப்பட்டவைகளே யாம். இயற்கையை நிலைக்களனாகக் கொண்டு, அது மக்கள் மனத்தே தோற்றுவிக்கும் உணர்ச்சிகளைக் கற்பனை செய்து, அவற்றுக் கேற்ற நிகழ்ச்சிகளைச் சித்திரிப்பது அகப் பாடல்களின் பண்பாகும். எனவே, இவை வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்டு தோன்றியவை யாகா; இயற்கையும், சூழ் நிலையும் விளைவிக்கும் பயன்களைக் கூறுவனவே யாகும். சங்கப் பாடல்களிற் சித்திரிக்கப் பெறும் மக்கள் செயல்கள் அவர்கள் குண வேறுபாடுகளின் விளைவுகளல்ல.

அகப் பாடல்களனைத்தும் முதற் கருப் பொருள்களை விவரிக்குமளவுக்கு உரிப் பொருளை விவரிப்பதில்லை. உரிப் பொருளை உணர்த்துவதே பாடலின் நோக்கமாம்; எனினும், அது முதற் கருப் பொருள்களின் விளைவாகும் என்றே காட்டப் பெறுகின்றன. எனவே, இப் பாடல்களனைத்தும் மக்களை வாயிலாகக் கொண்டு இயற்கையின் இயக்கத்தைப் புலப்படுத்துகின்றன என்பது புலனாகின்றது. இப் பாடல்களில் வரும் மக்களுடைய தனிப் பண்புகளுக்கு இவை யிடமளிப்பதில்லை. இதனால் அகப் பாடல்களின் பாத்திரம் இயற்கை யொன்றே யாம் என்பது தெளிவாகின்றது.

அகப் பாடல்களில் வரும் தலைவன், தோழி, தலைவி என்பவரை, எப் பாடலுக்கும் பெயர்த் தமைத்துக் கொள்

ளலாம். ஏ னெனில் அவர்கள் தா மிருக்கு மிடத்துக்குத் தக்க செயல்களைச் செய்பவரே யல்லால், தம் மனம் காட்டும் வழியிற் செல்பவ ரல்லர். இதனாலேயே

மக்கள் நுதலிய அக னைந் திணையும்
சுட்டி யொருவர் பெயர்கொளப் பெறாஅர்.

என்ற மரபும், விதியும் தோன்றி யிருக்கின்றன. அகப் பாடல்க ளனைத்தும் இயற்கை யின் நாடகங்களே யாம். இந் நாடகங்களுக்குச் சுவை யூட்ட மக்கள் பயன் படுகின்றனர், இவர்களை நடிகர்க ளாகக் கருதுவதற் கில்லை.

திணை மயக் குறுதலுங் கடிநிலை யிலவே
நிலனொருங்கு மயங்குத லின்றென மொழிப.

ஒரு நிலத்தில் அதற் குரித் தல்லாத ஒழுக்கத்தைக் கூறினாலும் கூறலாம். இதுவே, இப் பாடல்களிற் பங்கு பெறும் மக்களுக்கு அளிக்கப் பெறும் சலுகை யாம். இதனால், மனிதனுக்கு மன முண்டு, அது இயற்கையின் தூண்டுதலை மீறியும் செயல் புரியும் பண் புடையது என்பவற்றைச் சங்கப் புலவர் ஒப்பினர் என்பது தெரிகின்றது. ஆனால், அவர்கள் இவற்றைப் பொரு ளாகக் கொண்டு தம் பாடல்களை அமைக்க முன் வர வில்லை.

ஒரு பாடலில் இரு நிலங்கள் மயங்கிவரக் கூடாது என்பது விதி. இதனால், பாடலில் பங்குபெறும் மக்களுக்குப் பொறுப் பில்லை என்பது புல னாகின்றது. ஒரே பாடலில் இரு நிலங்க ளிடம் பெறின், தலைவனும் தலைவியும் எந் நிலத்துக் கேற்பச் செயல் புரிவர்? அவர்கள் விரும்பும் வண்ணம் செய்வதனைக் கூற இப் பாடல்கள் எழ வில்லையே! இயற்கையால் தூண்டப் பெறாமல் நிகழும் நிகழ்ச்சியையோ, அதனைக் காட்டி விளக்க முடியாத செயல்களையோ அகப் பாடல்கள் விவரிப்ப தில்லை.

அகப் பாடல்கள் கலையின் சிறந்த தோற்றங்கள்; ஆனால் அவற்றில் பங்கு பெறும் மக்கள் தமக் கென

வாழும் தகுதி யுடையவ ரல்லரே! இத் தகைய கவலை சங்கப் புலவருக்கு இருக்க வில்லை. ஏ னெனில் அவர்கள் கலை வேறு, வாழ்க்கை வேறு என்பதனை அடிப் படையாகக் கொண் டிருந்தனர். இயற்கை காட்டும் பாதையில் மனிதன் செல்லுகின்றானா, அல்லது மனிதன் செயல்களுக்கேற்ப இயற்கை நடந்துகொள்ளுகின்றதா என்ற வழக்கு என்றும் முடிவு காண முடியாத தாகவே யிருக்கும். இவற்றில் இயற்கையின் வழி மக்கள் இயங்குகின்றனர் என்று சங்கப் புலவர் கொண்டனர். அக் கால வாழ்க்கை இயற்கையை எதிர் பார்த்தே நிகழ்ந்தது அவரை இவ்வாறு கொள்ளச் செய்திருக்கும்.

இயற்கையால் இயங்கும் வாழ்க்கை எவ்வகையிற் செல்லும் என்று அகப் பாடல்கள் கற்பித்துக் கூறுகின்றன. ஆனால் உண்மை வாழ்க்கை அவைகள் கூறுவன போல் நிகழா தன்றோ? எனவே, வாழ்க்கை முறையை வகுத்துக் காட்டத் திரு வள்ளுவர் விரும்பினார். பிறவிப் பயனைப் பெறும் நோக்கத்துடன் வாழ்க்கை நடை பெற வேண்டு மென்பது அவர் கருத் தாகும். அதனை யடையத் தக்க வாழ்க்கை முறையையே அவர் மேற் கொள்ளத் தூண்டி யுள்ளார். காமத்துப் பாலையும் அவர் பாடி யிருப்பது, அவ் வாழ்க்கை மெய் யுணர்வு பெறுதலுக்குப் புறம் பான தன்று என்பதனைப் புலப் படுத்துகின்றது.

கலைக்குச் சிறப் பளிக்கக் காமத்துப் பாலையும், வாழ்க்கைக்குச் சிறப் பளிக்கும் அறத்துப் பால், பொருட் பால் களையும் பாடிய வள்ளுவர், கலையும் வாழ்க்கையும் தம் முள் முரண் பட்டன வல்ல என்று காட்டி யுள்ளார். மகிழ்ச்சியைப் பயக்கும் மனை வாழ்க்கை அற நெறிச் செல்லுவ தாக நடப்பதே சிறந்த பயனை யளிக்கும் என்பது அவர் கருத் தாகும். சங்கப் புலவர் வெவ்வே றெனக் கருதிய கலையையும், வாழ்க்கையையும் வள்ளுவர் இணைத்துக் காட்டி யுள்ளார். சிலப் பதிகாரம் தோன்றுவதற்கு வாய்ந்த சூழ் நிலை இதுவாம்.

இலக்கியத்தை வாழ்க்கைக்கு வழி காட்டி யாக விருக்கும் படி முதன் முதலில் அமைக்க முயன்றவர் திருவள்ளுவரே யாவர், அவர் பெற விரும்பிய பயனையே அடிகளு மடைய விரும்பி யுள்ளார். ஆனல், அவரினும் வேறு பட்ட வோரிலக்கிய வாயிலைத் தேர்ந்து கொண்டார். வாழ்க்கையே கலை என்பதனை யடிப்படை யாகக் கொண்டு தோன்றியது சிலப் பதிகாரம். இவ் வகையில் இது சங்க இலக்கியத்துக்கு மாறு பட்டது. இதனைச் சங்க இலக்கியத்தோ டிணைக்கும் பாலம் வள்ளுவர் திருக்குறளாம்.

சங்கப் பாடல்கள் புலவர்களுடைய பொழுது போக்குக் காக, கற்றவர் மனத்தை மகிழ்விக்கத் தோன்றிய கலைத் தோற்றங்களாம். மக்களை மகிழ்ச்சி யூட்டுவதே அப் பாடல்களின் சிறந்த நோக்க மாகும். இந் நோக்கத்தை வள்ளுவர் மாற்றிக் கொண்டார். மக்களுக்கு வழி காட்டுவதே இலக்கியத்தின் நோக்கமாக விருக்க வேண்டு மென்பது அவர் கருத்து. அவ ருடைய புது நெறியைப் பிறர் ஏற்றுக் கொள்ள வேண்டுமே! காமத்துப் பால் அப் பணியைச் செய்கின்றது. ஒழுக்கம் முதலியனும், அதனைச் சிதை வுறச் செய்யாத அளவுக்கு மகிழ்ச்சி பெறல் அதனை யடுத்தும் இடம் பெற்று விளங்கும் வண்ணம் வள்ளுவர் தம் நூலை அமைத் துள்ளார்.

சங்க இலக்கியத்தைப் போலவே, வள்ளுவர் குறளும் கற்றாரையே விரும்பச் செய்யும் பண் புடைய தாக அமைந் திருக்கின்றது.

> கற்றதனு லாய பயனென்கொல் வாலறிவன்
> நற்றாள் தொழாஅ ரெனின்.

இதனை உணர்த்தும் நோக்கத் துடனேயே வள்ளுவர் தம் நூலை இயற்றி யுள்ளார். எத்துணைப் பேர் அவர் வேண்டு கோளுக்குச் செவி சாய்ப்பர். நல்லன செய்வதால் நற்பயன் விளையும் என்பதனை நம்பி, நல்லவர்களாக விருக்க

வேண்டு மென்ற நோக்கத் துடன், நல்லனவற்றை நாடிச் செய்யும் வாழ்க்கையை மேற்கொள்ளக் கூடியவர் எத் துணைப் பேர் இருக்கக் கூடும்? வள்ளுவர் காட்டிய வழி மக்களைக் கவராது என்று அடிகள் கருதி, தம் நூலை வேறு வகையி லமைத் திருக்கின்றார்.

மகிழ்ச்சி யடைய விரும்பாத மக்க ளிருப்பரோ? ஆனால் அம் மகிழ்ச்சி நிலை யாக விருப்ப தில்லையே என்ப தனை எவரும் கருதிப் பார்ப்ப தில்லை. அதனைப் பெற மெய் வருந்திப் பாடு படுகின்றனர். பெற்ற பின்னரும் மன நிறைவு பெறாது மயங்குகின்றனர். எனவே, அடி கள் என்றும் மாறாத இன்பத்தை நாம் பெறக் கூடும், அது நம்முடைய பிறப் புரிமை எனக் கூறக் கேட்டு வியப் படைகின்றோம். நம் கடமையை வற் புறுத்தாமல், உரி மையைக் காட்டுபவரை நாம் எப்படிப் பாராட்டாம லிருக்கக் கூடும்? இவ ரல்லரோ நாம் பின் பற்றிச் செல லத் தக்கவர்? நமக்கு வழி காட்டி யாக விருக்கக் கூடியவர்?

நம் முரிமையை வற் புறுத்தி, அதனை நாம் பெறுவ தற்கு வழி காட்ட வந்தவர் இளங்கோ வடிக ளாவார். இப் பொழுதே, இப் பிறவியிலேயே, நம் முரிமையைப் பெறக் கூடும் என்று அவர் உறுதி யளிக்கின்றார். ஆனால் நற் பயனை முயலாமற் பெறக் கூடுமா? நம் உரிமையைக் காட்டி, அதனைப் பெறும் அவாவினை யூட்டிப் பின்னர்க் கடமையை யுணர்த்தி யுள்ளா ரடிகள். கண்ணகி முயன் றாள்; தன் உரிமையைப் பெற்றாள்; அதனால் பலராலும் போற்றப் பட்டாள். இவ் வாறு விளங்கிக் கொண்ட பின் னரும், தம் முரிமையைப் பெற வேண்டும் என்ற எண்ணம் எழாதவரும் இருக்கக் கூடுமோ?

சாத்தனார் மதுரையைச் சேர்ந்த புலவர்; தண் டமி ழாசான் என்று அடிகளால் குறிப் பிடப் பெறும் பெருமை யுடையவர், சங்க நூற் பரிசோதக ராக விருந்

தவர்; சங்க இலக்கியத்தி லிடம் பெற் றுள்ள பாடல் களைப் பாடியவர்; சங்க கால மரபுகளைக் காப்பதனைத் தம் கடமை யாகக் கொண் டிருந்தவர்; அவற்றைப் பிற புலவர் வழுவாமற் போற்று மாறு பாதுகாப்பவர்; சங்கம் அழி வெய்தியதனைக் காணப் பொறுது, தம் வாழ் நாளிற் பெரும் பகுதியைக் கழித்த மதுரை நகரைத் துறந்து, மலை நாட்டிற்குச் சென்றவர்.

சாத்தனர், அடிக ளியற்றிய சிலப் பதிகாரத்தைப் படிக்கக் கேட்டதும் முற்றிலும் மாறி விட்டார். மதுரா பதியின் சொற்களைக் கேட்டு கண்ணகி மேன்மை யுற்றாள்; மாடலன் சொற்களைக் கேட்டுச் சேரன் சிறப் பெய்தினன்; சிலப் பதிகாரத்தைக் கேட்டுச் சாத்தனர் பெருமை யுற்றார். இல்லையேல், அவர் மணி மேகலையைப் பாடி யிருப்பாரா? சாத்தனர் அடிகள் வகுத் துள்ள புது வாயிலைக் கண்டு வியந்தார்; பாராட்டினர்; அதனைப் பின்பற்றிச் செல்லுவது தமக்குப் பெருமை யளிக்கும் என் றெண்ணினர். மணி மேகலையை யியற்றிய மாண் புடையவ ராஞர்.

சாத்தனருக்குப் பின்னர் வந்த பெரும் புலவரும், கதையை யுள் ளிட்ட நூல்களையே யியற்றி யிருக்கின்ற னர். அகப் புறப் பாடல்களை யியற்றும் வழக்கம், அடி களுக்குப் பின் அடியோடு மறைந்து விட்டது. ஒரு பெரு நூலை யியற்றித் தந்தா லன்றிக் கவிஞர் என்ற பெயர் கிடைக்காது என்ற நிலையை அடிகள் தோற்றுவித்து விட் டார். எப் புலவன் தன் பெயர் தழைத் திருக்க வேண்டா மென்று விரும்புவான்? எனவே, எல்லாரும் காப்பியங் களையே யியற்றத் தொடங்கினர். சங்கப் புலவரை ஐந் தாறு நூற் றாண்டுகளாக அடக்கி யாட் கொண் டிருந்த மரபுகள் அடங்கி யொடுங்கி மறைந்து விட்டன!

சிலப் பதிகாரம் புதிய தொரு வாயிலை வகுத் தளித் தது. எனினும், சங்கப் பாடல்களின் சிறப் பியல்புகள் என்றும் போற்றத் தக்க பண் புடையன வன்றோ? ஆனல்

அவற்றைப் போன்ற பாடல்களை யியற்றுவதாற் பெருமை கிடைக்காதே! ஆகவே, அகப் பாடல்களால் பெரிதும் பற்றப் பட்ட கவிஞர் கோவையை யியற்றத் தொடங்கினர். அகத் திணைத் துறைகளைத் தழுவிய தனிப் பாடல்களைக் கொண்டது கோவை. எனினும் அது தலைவன் பெயரைத் தெரிவிப்பது; ஒரு வாழ்க்கையின் பெரும் பகுதியைக் கதையைக் கூறுவது போல் விவரிப்பது. இவ் விரு மாறுதல்களும் சிலப் பதிகாரத்தின் தோற்றத்தால் ஏற் பட்டவை யாம்.

புறத் திணைப் பாடல்களில் பற்று கொண்ட புலவர் பரணியை உரு வாக்கிக் கொண்டனர். பரணி யென்பது காளிக்குக் கூளி கூறும் கதை யாம். அது போரில் வென்ற அரசனைச் சிறப்பித்துப் பாடப் பெறு வது.

உலாவும் சிலப் பதிகாரத்தால் உருப் பெற்ற பிரபந்தம் என்று கூறத் தகும். செங்குட்டுவன் வஞ்சிக்கு வெற்றி யுடன் வந்த காலத்து, அவனை நா னில மக்களும் வர வேற்கப் பாடிய பாடல்கள் உலாவினை உரு வாக்கிய புலவர்க்கு வழி காட்டி யாக விருக்கின்றன. ஆழ்வார், நாயன்மார் பாடல்களும், சிலப் பதிகாரத்தின் வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை என் பவற்றில் காணப் பெறும் பாடல்களைப் போன்றவையே யாம்.

ஒரு பாடலில் ஒரு நிலத்தையே விவரிக்க வேண்டும் என்ற கட்டுப் பாடு காரண மாகச் சங்கப் பாடல்கள் ஒரு நிகழ்ச்சியை மட்டுமே சித்திரிப்பனவாய் விளங்குகின்றன. இதனால் அவை அளவில் சின்னஞ் சிறியனவா யிருக்கின்றன. புறப் பாடல்கள் கூடச் சிறியவையே யாம். சங்க இலக்கியத்தின் மிகப் பெரிய பாடல் மதுரைக் காஞ்சி யாகும். சிலப் பதிகாரம் அதனைப் போல் ஆறு மடங்கு நீண் டிருக்கின்றது.

ஒரு நிகழ்ச்சியையே கொண்டவை யாகையால், அகப் பாடல்களிற் பங்கு பெறும் பாத்திரங்களின் எண்ணிக்கை

யும் குறை வாக விருக்கின்றது. இரண்டு, அல்லது மூன்று பாத்திரங்களே அவற்றி லிடம் பெறுகின்றன. மேலும் அவை இலட்சியப் பாத்திரங்க ளாம். (Ideal characters) தம் முடைய தெனக் காட்டிக் கொள்ளும் குண வேறு பாடுகளை அவை கொண் டிருக்க வில்லை. இயற்கையின் தூண்டுதலா லியங்கும் பண் புடையன வாகையால் அவை தனித் தன்மை (Individuality) யுடையன வல்ல.

சிலப் பதிகாரம் பல பாத்திரங்களைப் புகுத்தி யிருக்கின்றது. ஒவ் வொன்றும் தனக் கெனக் குண வேறு பாடுகளை யுடையது. தத்தம் குணத்துக் கேற்பவே, இப் பாத்திரங்கள் செயல் புரிகின்றன. இவற்றின் செயல் களைச் சிறப்பிக்க, இயற்கை பயன் படுத்தப் பட் டிருக்கிறது. அகப் பாடல்கள் இயற்கையைச் செயல் புரிவ தாகவும், மக்களை அதன் வழி ஒழுகுபவ ராகவும் காட்டு கின்றன. சிலப் பதிகாரம் மக்களைச் செயல் படுபவ ராக வும், இயற்கை அவர்களுக்குத் துணை புரிவ தாகவும் காட்டி யிருக்கின்றது.

அகப் பாடல்கள் காதலைப் பொரு ளாகக் கொண் டிருக்கின்றன. அதனை அவை போற்றுகின்றன வள்ளு வரும் இளங்கோவும் அதனை விலக்கி யிருக்க வில்லை; தூற்றவு மில்லை; ஆனல் புறக் கணித் திருக்கின்றனர் எனக் கூறலாம். மக்கள் அதனைப் பெறவே வாழ வேண் டும் என்ற போக்கினை இருவரும் எதிர்த் திருக்கின்றனர். காமம் மகிழ்ச்சி யளிப்பது போல் தோன்றித் துன்பத் தையே பயக்கு மியல் புடையது என்பதனை அடிகள் சிறப்பான மூன்று பாத்திரங்களின் வாழ்க்கையாலுங் காட்டி யிருக்கின்றார்.

சிலப் பதிகாரம் சங்க இலக்கியத் தோடு அமைப்பு, அளவு, பாத்திரம், பொருள் என்ற பல துறைகளிலும் மாறு பட்டுத் தோன்றுகின்றது; எனினும், இது அவ்

இலக்கியத்தி னியல்பான வளர்ச்சியின் இலட்சிய முடிவே யாம். இத் தகைய சிறந்த நூலைப் பயக்கும் பெற்றி யுடையன வாக விருந்தமையால், அவை யின்றும் நிலைத்து நிற்பன வாகவும், கற்றோரை மகிழ்விப்பன வாக வும் இருக்கின்றன. அரசியலில் அடிகள் விரும்பிய மாற்றம் கன வாகி விட்டது. ஆனால் இலக்கியத்தில் அவர் விரும்பிய மாற்றங்கள் நன வாக முடிந் திருக் கின்றன. பின்னர் வந்த புலவரால் பின் பற்றப் படும் பெருமையை யுடையன வாக நிலைத் திருக்கின்றன.

## 6. துறவு

நாடு மேன்மை யடைந்து, வல்லமையுடன் விளங்-கவும். மொழி வளம் பெற்றுத் தழைக்கவும் அடிகள் காட்டி யுள்ள வழியும், செய் துள்ள மாற்றங்களும் புதுமை யுடையன. அவ்வாறே சமுதாயம் சிறப் புற்றுப் பெருகி விளங்க அவர் காட்டும் வழியும் புதுமை யுடைய தாம். புதுமைகள் பல பெற்றுப் பொலிகின்றது சிலப் பதிகாரம், எனினும் பழமையைப் போற்றுவதிலும் அது தன் னிக ரற்றது. அது கூறுவன வெல்லாம் எக் காலத்துக்கும் ஏற்ற உண்மைகளாம். இப் பண்பு காரண மாகவே அது தமிழ் நூல்க ளுள் தலை சிறந்த தாக வும், ஒளி மிக்க தாகவும் விளங்குகின்றது.

சங்க காலத்தின் தொடக்கத்தில் பெண் ணினம் உரி மையும், பெருமையு முடைய தாக விருந்தது. பெண்ணை இல்லாள் என்று குறிப் பிட் டிருப்பதே, அவளுக்கு அக் காலத் திருந்த செல்வாக்கினைப் புலப் படுத்தும். வீட் டளவி லேனும் அவளே தலைமை யுடையவ ளாக விளங்கி னாள். நா ளடைவில் இந் நிலை மாறிக் கொண்டே வந்து, அடிகள் காலத்தில், பெண் உரிமை இல்லாதவ ளாகி விட்டாள் பெண் ணினம் சமுதாயத்தில் செம் பாதி யாகும். மற்றைப் பாதியை ஏற்றுப் பேணி வளர்ப்பதும் அதுவே யாம். எனவே, எங்கும், எக்

காலத்தும் பெண்ணுக் குள்ள பெருமையைக் கொண்டே சமுதாயத்தின் மேன்மையை அள விடக் கூடும்.

இவ் வுண்மையை வற் புறுத்த, அடிகள் தாம் இயற்ற விரும்பிய நூலுக்குப் பெண் தலைமைப் பாத்திர மாக வுள்ள கதையினைத் தேர்ந் தெடுத்துக் கொண்டார். இச் செயல் நம் இலக்கியத்துக்கும், நாட்டுக்கும் மட்டும் புதுமை யுடைய தன்று; உலகின் எம் மொழியிலும், எப் பெரு நூலும் பெண்ணைத் தலைமைப் பாத்திர மாகக் கொண்ட தாக விருக்க வில்லை. பெண்களுக்குச் சிறப் பளிக்கும் நூல்கள் பல வுண்டு. எனினும், அவளைத் தலை மைப் பாத்திர மாகக் கொண்டது அவற் றுள் எதுவு மில்லை.

ஷேக்ஸ்பியர் தாம் எழுதி யுள்ள முப்பதுக்கு மேற் பட்ட நாடகங்க ளுள் இரண் டினுக்குப் பெண்கள் பெயர்களையும் தலைப் பாகக் கொண் டிருக்கின்றார். எனி னும் அவைகளினும் கூட ஆண்கள் பெயர்களை யடுத்தே பெண்கள் பெயர்கள் இடம் பெறுகின் றன. எனவே, அடி களைப் போல் அத்துணைத் துணிவும், பரந்த மனப் பான்மை யும் வே றெக் கவிஞருக்கு மிருக்க வில்லை என்பது தெரி கின்றது. அடிகளுக்குப் பெண்களுக்குச் சிறப் பிட மளிக்க வேண்டும் என்ற விருப்ப மிருந்தது என்பதற்கு அவர் நூல் சான் றாக அமைகின் றது.

அடிகள் காப்பியத்தில் காணப் படும் பெண்களனை வரும் நல் லொழுக்க முடையவர்க ளாகவும், உயர்ந்த குறிக்கோள்களை மேற் கொண் டொழுகுபவர்க ளாகவு மிருக்கக் காண்கின்றோம். ஆனால், ஆண்க ளுள் ஓ ரிரு வரே குண முடையவ ராகக் காணப் படுகின் றனர். அவர்க ளுள் தலைமைப் பதவிக் குரியவ னாக விளங்கும் சேரன், இளங்கோ வேண்மாள் விரும்பிய வண்ணம் செய்தமையா லேயே சிறப் புடையவ னாகின்றான். வம்பப் பரத்தை யொருத்தி இக் காப்பியத்தி லிடம் பெற் றிருப்பது, பிற

பெண்களின் பாத்திரங்கள் கற்பனை உயர் வுடையன வல்ல எனக் காட்டுவ தாக விருக்கின்றது.

அடிகள் புகுத்திய விப் புதுமை பிற புலவர்களையும் பற்றிக் கொண்டுள்ளது. சாத்தனார் மணி மேகலையைத் தலைமைப் பாத்திர மாகக் கொண்ட காப்பியத்தை இயற்றி னார். நீல கேசி, குண்டல கேசி, வளையா பதி என்ற நூல்களை யியற்றிய புலவர்களும் அடிகளைப் பின் பற்றி யுள்ளனர். ஆனால் இவ் வனைவரும் பெண்களைப் பெருமைப் படுத்த வேண்டு மென்ற நோக்கத் துடன் அவர்களைத் தம் நூல்களின் தலைமைப் பாத்திரங்க ளாகக் கொண் டிருக்க வில்லை. தம் முடைய நூல்கள் சிலப் பதிகாரத்தை ஒத் திருக்கின்றன எனக் காட்டவே அவர்கள் அடிகளைப் பின் பற்றி யிருக்கின்றனர்.

இக் காலத்தே நாம் விரும்பா விடினும் அரசியல் நம்மை வந்து பற்றிக் கொள்ளுகின்ற தன்றோ? நமக்கு வசதிகள் மலிந்த வாழ்க்கையை யளித்தலையே அரசியல் கட்சிக ளனைத்தும் தம் நோக்க மாகக் கொண் டுள்ளன. ஆனால் ஒன் றோ டொன்று ஆட்சியைக் கைப் பற்றச் செய்யும் முயற்சியும், போட்டியும் நம்மை அமைதி யுடன் வாழ விடுவ தில்லை. தாம் சொல்லிய வண்ணம் நிறை வேற்ற முடியா விடின், ஆட்சியி லிருப்போர் வருங்காலத் தவர் நல் வாழ்வு பெற நம்மைத் துன்பத்தைப் பொறுத்துக் கொள்ளச் சொல்லுகின்றனர்.

சமயங்களும் இவ் வரசியற் கட்சிகளைப் போலவே மக்களைப் பற்றிக் கொள்ளுகின்றன. இவை யனைத்தும் நம்மைக் கட வுளைப பற்றிக் கருதச் செய்யவே தோன்றின. ஆனால் இவை ஒன் றோ டொன்று போட்டியிடுங் காலத் தும், பிற வற்றினைக் காட்டிலும் தாம் உயர்ந்தவை என்று காட்டிக் கொள்ளுங் காலத்தும் தம் நோக்கத்தை நழுவ விட்டு விடுகின்றன? இவைகளின் உயர்வு, தாழ்வுகளைக் கருதுபவர்க்குக் கடவுளைப் பற்றிக் கருத நேர மில்லாது

போகும்; அவர்கள் மனத்தில் அவ் வெண்ணம் எழாமலும் இருந்து விடும்.

அடிகள் காலத்தே சமயங்கள் தம் செல்வாக்கை மிகுத்துக் கொள்ளப் போட்டி யிடத் தொடங்கின. இப் போக்கு மக்களை அவற்றின் நோக்கத்தை நினைத்துப் பார்க்கச் செய்யா தென்று கருதியே, அடிகள் அவை யனைத்தையும் ஒப்பப் போற்றி யுள்ளார். ஒவ்வொரு மனிதனும் ஏதோ வொரு சமயத்தைச் சேர்ந்தவனாக விருக்க நேர்கின்றது. அவன் விரும்பா விடினும், பிறர் அவனை எச் சமயத்தை யாவது பற்றி யிருப்பவனாகக் கருதுகின்றனர். எதனைச் சேர்ந் திருப்பினும் அதனுடைய நோக்கத்தில் மனிதன் கருத்தைச் செலுத்த வேண்டு மென்பது அடிகள் கருத்து. சமய சமரசத்தை வற் புறுத்தி யிருப்பவருள் அடிகள் முதல்வ ராவார்.

சமயங்களைக் கடந்த நிலையிலும் கூடப் பிரிவினைகள் காணப் படுகின்றன. மெய் யுணர்தல் எல்லாச் சமயங்களும் ஒப்பும் முடி வாம். ஆனால் அதனைப் பெறும் வாயில்கள் பல வகுக்கப் பெற் றிருக்கின்றன. அடிகள் கை யாண்டு வெற்றி பெற்றது. அறிவுப் பாதை யாகும். மாடலன் பரப்பியது தொழிற் பாதை யாம். எல்லாரும் எளிதில் கைக் கொள்ளக் கூடியது எனச் சிறப்பிக்கப் பெறுவது அன்புப் பாதை யாகும். சமயங்க ளனைத்தும் காட்டுவது இதனையே யாம். இவையே யல்லால், சமயங்களைப் போற்றுதவர் மேற் கொள்ளும் வழியு மொன்றுண்டு. அது யோகம் எனப் பெறும்.

இந் நான்கு வாயில்களுக்கும் முடிவு ஒன்றே. இவை யனைத்தும் மக்கள் மெய் யுணர்வு பெற உதவுவனவே. இவை வெவ் வேறாகத் தோன்றினும் மனத்தைக் கட்டுப் படுத்துவ தொன்றினையே இவை மேற் கொள்ளச் செய்கின்றன. ஒரு முகப் பட்டு வல்லமை பெற்ற பின் மனம் நிகழ்த்தும் ஆராய்ச்சிக்கு விசாரம் என்று பெயர். எப்

பாதை வழி யாகச் செல்பவரும் இறுதியில் இவ் விசாரத்தை (ஆராய்ச்சியை) நிகழ்த்திய பின்னரே மெய் யுணர்வு பெறு கின்றனர். எனவே, அடிகள் இவற்றையும் தம் நூலின் கண் ஒப்பப் போற்றி யுள்ளார்.

வேற்றுமைகளைக் காண்பது அறி யாமை யாகும் என் றுணர்வதே—அறிவ தன்று—விடுதலை பெறுதல் அல்லது மெய் யுணர்வு பெறுத லெனக் கூறப் படுகின்றது. வேற் றுமைகள் என்றும் இருந்த வண்ணமே யிருக்கும். ஏ னெனில் அவை இயற்கையின் விளைவுகள். நாம் அவற் றைப் பாராட்டுவது அறி யாமை யாகும். ஆகவே, அடி கள் வேற்றுமைகளை நம்மைப் புறக் கணிக்கத் தூண்ட அவற்றைப் போற்றும் பல வேறு சமயங்களையும் ஒப்பச் சிறப்பித் திருக்கின்றார். 'பிற வோர் அவைக் களத்தை யும்,' 'வெள்ளைக் கோட்டியையும்' விலகி யிருக்கப் பணித் துள்ளார்.

சமுதாயம் சிறந்து விளங்க, அதன் அங்கமாக விருக் கும் தனி மனிதன் உயர்ந்த குறிக்கோள்களை யுடையவ னாகவும், அவற்றை மேற் கொண்டு வாழ்பவனாகவும் இருத் தல் இன்றி யமையாதது. மனிதன் மேற் கொள்ள வேண் டியவற்றுள் மிகச் சிறந்தது அறிவு பெறலே யாம் என்ப தனை எல்லாரு மொப்புவர். பிறவிப் பயன் அதுவே யாம் என்பது அடிகள் துணி பாகும். இதனைப் பெற அடிகள் காட்டி யுள்ள வழி பழமை யானதே! எனினும், அவர் அதனை வெளிப் படுத்தி யிருக்கும் முறை புதுமை யுடையது.

ஸ்வேதஸ்வதாரர் என்ற முனிவர், 'நான் அப் பெரியோனை யடைந்தேன்; அவனை யடைதலே இறத்த லைக் கடக்கும் வழி யாகும். பிறப் பிறப்புகளைக் கடக்க வேறெதுவும் உதவாது' (3.8) எனக் கூறி யுள்ளார். இவர் அடிகளைப் போலவே சமரச நோக்க முடையவர். உப நிடதங்களை அருளிய முனிவருள், இவ ரொருவரே,

தாம் அடைந்த நிலையைக் குறிப் பிட்டு, தம்மைப் போல் நாமு மதனை யடைய வேண்டு மெனத் தூண்டி யிருப்பவ ராவார். பிற ரனைவரும் நா மடையக் கூடிய நிலையின் இயல்பைப் புலப் படுத்தி யுள்ளனர்.

ஸ்வேதஸ்வதாரரைப் போலவே, அடிகளும் தாம் முயன்று பெற்றதனையே, நன்மையை யளிப்ப தெனக் கண்டா ராதலால், நம்மையும் பெற முயலுமாறு தூண்டி யிருக்கின்றார். ஆனால், அடிகள் அம் முனிவரைப் போல் தாம் பெற்ற நிலையைத் தம் கூற்றில் தாமே கூறாமல், கண்ணகியைத் தேவந்திகை வாயி லாகக் குறிப் பிட வைத் துள்ளார். இதனால், அடிகள் பெற்ற நிலை நமக்குத் தெரி கின்றது; அதனை யறிந்து கூறிய கண்ணகியும் அந் நிலையை யடைந் திருந்தவ ளாக விருத்தல் வேண்டும் என் பது உறுதி யாகின்றது. இவ் விரண்டாவது பயனோடு, கண்ணகி அதனைக் கூறி யிருத்தல் மேலும் இரு பயன்களை யுடைய தாக உள்ளது.

ஸ்வேதஸ்வதாரரைப் போலவே அடிகளும் ஒரு தத்துவ நூலை யருளி, அதன் கண் தாம் பெற்ற நிலையைக் காட்டி, நம்மையும் அதனைப் பெற முயலுமாறு தூண்டி யிருந்தா ரெனில், அந் நூலால் அனைவரும் பயன் பெற் றிருக்க முடியாது. ஏ னெனில் மிகப் பலர் அவர் கூறி யிருப்பதனை நம்பாம லிருக்கலாம். ஐயங் கொள்ளாமல் நம்புபவர்க ளுள்ளும் மிகப் பலர், அடிகள் துறந்ததனால் பெற்ற நிலையை நாம் எப்படிப் பெறக் கூடு மென் றெண்ணி, முயலா திருப்பர். ஆகவே, அவர் நோக்கம் அவ் வழிச் செல்வதால் நிறை வேறாது.

கண்ணகி நம்மைப் போல் வாழ்க்கையில் ஈடு பட்டி ருந்தவள்; உலக வாழ்க்கையின் துன்பத்தை நம்மினும் அதிக மாகத் துய்த்தவள். அவள் அடிகள் பெற் றிருந்த நிலையைப் பெறக் கூடு மெனின், அது நமக்குக் கூடாத தாக விருக்குமோ? அடிகளைப் போல் அவள் துறக்க

வில்லை. எனவே, துறவுக்கும் மெய் யுணர்வு பெறுதலுக் கும் எத் தகைய தொடர்பு மில்லை என்பது தெரிகின்றது. இதனை நன்கு விளக்கி யிருப்பதே சிலப் பதிகாரத்தின் மிகச் சிறந்த பய னுகும். அடிகள் நம்மையும் தம் நிலையை யடையத் தகுதி யுடையவர் என்று கொண் டிருப்பது தெரிகின்றது. இனியும், அவர் வழிச் செல்லா விடின், அதன் பொறுப்பு நம்மையே சேரும்.

அடிகள் தம் வாழ்க்கையால் தாம் கண்ட பே ருண் மையைக் கண்ணகி தன் வாழ்க்கையை ஆராய்ந்து பார்த்த தனுல் உணர்ந்து கொண்டா ளென்பதனைப் புலப் படுத்தி யிருக்கின்ருர். அவளைப் போலவே செங்குட்டுவனும் தன் வாழ்க்கையை யாராய்ந்து கண்டே சினத்தையும், பகையை யும், அவாவினையும் கை விட்டான். அவற்றைக் கை விட்ட பின்னர்ப் பெருமையைப் பெற்ருன். அவன் எதிர் பார்த் திராத சிறப்பினை யடைந்தான். இவற்ருல் சிலப் பதிகாரம் நமக்குக் காட்டும் வழி நன்கு புலப் படுகின்றது. நாம் அடிகளையோ, சேரனையோ, கண்ணகியையோ பின் பற்றத் தேவை யில்லை; நம் முடைய வாழ்க்கையை யாராய்ந்து காணவே, நம்மை உயர்த்தும் பண் புடைய தாகும்.

தாம் கண்ட உண்மையை நமக்குத் தெரிவிக்க அடி கள் உண்மைக் கதை யொன்றினைக் கூறி யுள்ளார். ஆனுல் அதனைச் சரிதை யாகக் கூருமல், காப்பிய மாகப் புனைந்து கூறி யுள்ளார். அவர் இதனைச் செய் திருப்பதும் நம் முடைய நன்மையைக் கருதியே யாம். கண்ணகியின் உண்மைச் சரிதையைக் கூறி யிருப்பின், அவள் நிலையை நாம் எப்படித் தெரிந்து கொள்ளக் கூடும்? அடிகள் சொற்களை நம்புவதனுல் மட்டுமே ஏற்றுக் கொள்ள வேண்டிய நிலை யேற்படும். அப் பொழுது அவரு மோர் உப நிடதத்தை யருளி யிருக்கலாமே!

காப்பியக் கதை யாகப் புனைந்து கூறி யிருப்பதனுல் கண்ணகி கடவுளரை ஏவல் கொண்டதனையும், மதுரையை

எரித்ததனையும், மதுராபதியைக் கண்டதனையும், வானுலகு சென்றதனையும், கடவுள் நல் லணி காட்டியதனையும், வர மளித்ததனையும் புகுத்த முடிந் திருக்கின்றது. இவை அவ ருடைய நிலையை ஏற்றுக் கொள்ள வைக்க உதவுவன. புத்தர் பெருமான் இத் தகைய அருஞ் செயல்களை நிகழ்த்தித் தாம் கூறுவன வற்றை மக்களை ஏற்றுக் கொள்ள வைத்தா ரென அவர் சரிதையா லறிகின்றோம். எனவே, இவை யுண்மை யல்லவே யெனினும், உண்மை போல நிகழ்த்திக் காட்டக் கூடியனவே யா மென்பது விளங்குகின்றது.

அடிகள் கண்ணகி இறை நிலையை யடைந்தவ ளென்பதனை நம்மை யுணர்ந்து கொள்ள வைக்கவே, அவளைத் தம் நிலையைக் கூற வைத் திருக்கின்ற ரெனின், அவளைத் தம் துறவினைக் குறிப் பிட்டுப் பாராட்டச் சொல்லி யிருக்குங் காரண மென்ன? தம் முடைய தற் பெருமையையும் நம்மை யறிந்து கொள்ள வைக்க வேண்டு மென்பது அவர் நோக்க மாக விருக்குமோ? இறை நிலையை யுணர்ந்தா லன்றித் தற் பெருமையை மனிதன் முற்றிலும் தொலைக்க முடியா தெனக் கீதை கூறுகின்றது. மனித நிலைக்கும், இறை நிலைக்கு முள்ள வேற்றுமை இஃ தொன்றே யாம்.

மக்களைத் தற் பெருமை யுடையவ ராக மதிக்கச் செய்வ தெது எனத் தெரிந்து கொள்வதே இறை நிலை எய்த லாகும். தற் பெருமை யுணர்ச்சியைப் பெற்றிருத்தல் மனித நிலை எனப் படும். கண்ணகி, மாதவி, செங்குட்டுவன் என்ற மூவரும் இவ் வுணர்ச்சியைப் பெற்றிருந்தவரே. இவர்கள் இது பய னளிக்க வில்லை என உணர்ந்து கொண்டவர்க ளாவர். கண்ணகி இதனை அறவே தொலைத்தமையால் மற்ற இருவர்களாலும் போற்றப் பட்டாள். மாதவியும் செங்குட்டுவனும் உண்மையை உணர்ந்து கொண்டு, அதனைச் செயற் படுத்த முனைபவ ராக விளங்குகின்றனர்.

மாதவி மக்கள் பாராட்டுதல்களைப் பெறுவதனும் பய னில்லை யென்று கண்டு, ஆடுவதனைத் துறந்த பின்னரே பிறரால் போற்றப் பட்டாள். அவள் ஆடலைக் கண்டு பாராட்டியவர், அவள் அதனைத் துறந்த பின் அவளைப் போற்றத் தலைப் பட்டனர். அவளைப் பரத்தை யாகக் கருதுவதனைத் துறந்தனர். அவ்வாறே செங்குட்டுவன் ஏனை யரச ரிருவரையும் தன்னைத் தலைவ னாக ஏற்றுக் கொள்ளச் செய்ய முயன்றதனில் தோல்வி யுற்றான். தோல்விக்கு மன மழிந்து துன் புறாமல், தன் அவாவினைத் துறந்தான். அவ் விருவரோடு பிற வரசரும் சேர்ந்து போற்றும் பெருமையைப் பெற்றான்.

இவ்வாறு பிறர் தத்தம் தற் பெருமையைத் துறக்க முற் பட்டதனைப் பாராட்டிக் கூறும் அடிகள், தம் தற் பெருமையை விரும்பித் தம் சுய சரிதையைக் கண்ணகி வாயி லாக வெளிப் படுத்தி யிருக்கின்றார் என்று கொள் வது எப்படிப் பொருந்தும்? அர சுரிமையையும், அரண் மனை வாழ்க்கையையும் துறந்து ஐம்ப தாண்டுகளைக் கழித்த பின், அவரை விருப்ப முடையவ ராகக் கொள்ளுவ தழ கன்று. மேலும், இந் நூல் என்றும் நிலைத்து நிற்கும் என்பதனை யறிந்தவர், இது தமக் களிக்கக் கூடியதனைக் காட்டிலும் அதிக மான அளவிற் பெருமையைப் பெற எப்படி விரும்பி யிருக்கக் கூடும்? ஆகவே அவர் தம் துறவினைக் குறிப் பிட் டிருப்பதும் நமக் காகவே யாம்.

மெய் யுணர்வு பெறுவதற்கு அடிகள் துறந்ததனைப் போல் வாழ்க்கையைத் துறக்க வேண்டா மென்பது உண் மையே யெனினும், துறவு வேண்டுவது இன்றி யமை யாத தாகும். தற் பெருமையைத் துறந் திருத்தலே அதனை யடையக் கூடும் வழி யாம். ஆகவே, துறவு இன்றி யமையாத தென்பதனை வற்புறுத்தவே, அடிகள் கண்ணகி யைத்தாம் துறந்ததனை வியந் துரைக்க வைத் திருக்கின்றார். உலகத்தில் அரச பதவியைத் துறந்தவர், மெய் யுணர்வு

பெற்றருள் அரசராக மாறினர் என்பதனைக் கண்ணகி வாயிலாக அறிகின்றோம்.

மெய்யுணர்வு பெறத் துறக்கவேண்டிய தின்றி யமையாத தேனும், அத் துறவு நாம் நினைத்திராத பயனை யளிக்கக் கூடிய தகுதி யுடையது. 'துறந்த பின் ஈண்டியற் பால பல' என்று வள்ளுவர் கூறியிருப்பதற்கு நமக்குச் சிறந்த எடுத்துக் காட்டுகளாக மாதவியும், செங்குட்டுவனும் விளங்குகின்றனர். இவர்களிருவரும் ஓரளவு துறந்தவரே யாவர்; அதனல் மக்களாலும், மன்னராலும் பெரிதும் பாராட்டப் பெற்றனர். இவர்கள் துறவு நிறைவேற்றமடையின் இவர்களும் இறைநிலையை யடையும் தகுதி யுடையவராவர். அதன் பின் இவ்வுல கிற் பெருமை யுறுதலை இவர்கள் ஏன் பொருட் படுத்தப் போகின்றனர்?

மெய்யுணர்வு பெறுவதா லுறும் இன்பத்தை, ஒவ்வொருவரும் தாமே துய்த்துணரக் கூடுமே யல்லால், அதனியல்பு இத் தகையதென எடுத்துக் கூறல் இயலாது. மக்கள் கூட்டத்தால் பெறும் மகிழ்ச்சியையே இன்னதென எடுத்துக் கூற முடியாதென்று அதனை அகம் எனக் கொள்கின்றோமே! கூட்டமின்மையால்—ஆன்மாவும், உடலும் சேர்ந்திருப்பதனைப் பிரித்துணர்வதால்—பெறு மின்பத்தை எப்படிக் கூறக் கூடும்? இதனை யடைய முயல்வது மக்கள் மேற்கொள்ள வேண்டிய பெரு முயற்சி யாகுமென உபநிடதங்களும், ஆழ்வார், நாயன்மார் பாடல்களும் வற்புறுத்துகின்றன.

ஸ்வேதஸ்வதாரர் இம் முயற்சியால் தா முற்ற பெரும் பயனை எடுத்துக் காட்டி, அதனை நாமு மடையத் தூண்டி யுள்ளார். ஆனல் அவர் தூண்டுதலை அறிஞர் மட்டுமே ஏற்றுக் கொள்ளக் கூடும். அடிகள் அவ் வழியையே, புதிய முறையில் கையாண்டுள்ளார். இவருடைய தூண்டுதல் எல்லா மக்களையும் சிந்திக்கத் தூண்டும்;

முயற்சியை மேற் கொள்ள வைக்கும். எனவே, சிலப்பதிகாரம் பொது மக்களுக் குரிய காப்பிய மென்பது விளங்குகின்றது. அடிகள் திரு வடி வாழ்க! அடிகளே சரணம்!! சரணம்!!!

——

# பெருமை

## 1. வித்து

சிலப் பதிகாரக் கதை அழகிய ஊர் வலங்க ளிரண்டினை விவரித்த வண்ணம் தொடங்கி யிருக்கின்றது. இவைக ளுள் இரண்டாவது ஊர் வலத்தில் புகார் நகர மக்க ளனைவரும் கலந்து கொள்ளுகின்றனர். இதனால், இதன் சிறப்பும், பெருமையும் மிகுகின்றன. இக் கதையி னிறுதி நிகழ்ச்சியில் பங்கு பெறுபவர் மிகப் பலர். வஞ்சி நகரின் மக்கள், புகார், மதுரை என்ற பெரு நகரங்களி லிருந்து சென்றவர் ஆகிய அனைவரும் கண்ணகி கோயிலின் திறப்பு விழாவிற் கலந்து கொள்ளுகின்றனர். இவர்க ளோடு பல நாடுகளி னின்றும் வந்த அரசரும் அவ் விழாவின் சிறப்பிற்கும், பெருமைக்கும் உதவி யிருக்கின்றனர்.

இக் கதையின் முதல் னிகழ்ச்சி திரு மண மாகும். இறுதி நிகழ்ச்சி கோயிலின் திறப்பு விழா வாம். எனவே, இதன் முதலும், முடிவும் மக்க ளனைவரையும் பற்றி யீர்க்கும் பெரு நிகழ்ச்சிக ளாக விருக்கின்றன. அவற்றில் மிகப் பலர் கலந்து கொள்ளுவதனைக் காண்கின்றோம். ஆகவே, இக் கதைக்கும் பொது மக்களுக்கும் நெருங்கிய தொடர் புண்டு எனக் கூறலாம். இத னுடைய போக்கும் மக்கள் மன வெழுச்சியைக் காட்டுவ தாகவே யிருக்கும் என்று எதிர் பார்க்கலாம்.

கதைத் தொடக்கத்தில் விவரிக்கப் பெறும் ஊர் வலங்க ளிரண்டும் வெவ் வேறு நாட்களில் நிகழ்ந்தவைக ளாக இருத்தல் வேண்டும். இவற் றுள் முதலாவது திரு மண வழைப்பு ஊர் வல மாம். இரண்டாவதனில் திரு மாங்கலியம் ஊரைச் சுற்றி எடுத்து வரப்பட்டது.

பின்னது திரு மண நாளன்று காலையில் நடந் திருக்க வேண்டும். முன்னது ஒரு நாளேனும் முன்னர் நிகழ்ந்து முடிந் திருக்க வேண்டும். எனினும். அடிகள் இவை யிரண்டினையும் ஒன்றன் பின் மற்றது நிகழ்ந்தது போல இணைத்துக் காட்டி யிருக்கின்றார்.

இவ் வூர் வலங்கள் புகார் நகர மக்க ளனைவரும் கதையின் முத னிகழ்ச்சியில் பங்கு பெற்றதனைக் காட்டு-கின்றன. முதல் ஊர்வலம் அதனை யடுத்து நிகழப் போவதனை மக்களை எதிர் பார்த் திருக்க வைப்பது. எனவே, முன்னது பின்னதன் முன் னறிவிப் பாக விளங்குகின்றது; அது அமைதி யுடைய தெனக் காட்டு மியல்புங் கொண்டது. இவை காரண காரியங்க ளாகத் தோன்றுவதால், அடிகள் இவற்றை யிணைத்துக் காட்டி யுள்ளார். இவற்றின் நோக்கங்களும் ஒன்ற யிருக்கக் காண்கின்றோம்.

அழகிய பெண்கள் சிலரை ஆடை யணிகளை யணி வித்து, சிங்காரிக்கப் பெற்ற யானைகளின் மீது ஏற்றி அடிகள் நகரை வலம் வரச் செய் துள்ளார். இது ஓர் மௌன ஊர் வல மாகும். காண்பவர் கண்களைக் கவர்ந்து, அவர் தம் உள்ளங்களையும் கொள்ளை கொள் ளும் பண்பு மிக்கது இவ் வூர்வலம். இதனைக் கண்டு, வியப்பும், விருப்பும் கொண்ட புகார் மக்கள் இரண்டா வது ஊர் வலத்தில் கலந்து கொண்டு, அதனைச் சிறப்பித் தனர். எனவே, இவற்றை யிணைத்துக் காட்டியதனால், அடிகள் மக்க ளுடைய மன விருப்பத்தையும், அதன் விளை வினையும் பிரிந்து தோன்றாமல் பொருத்திக் காட்டி யுள் ளார் என்பது புல னாகின்றது.

இரண்டாவது ஊர் வலம் மிகப் பெரிது; பெருஞ் சத்த மிழைப்பது; எனினும், விரும்பக் கூடியதே! இதுவே பொரு ளுடையது; கதையின் முத னிகழ்ச்சியில் பங்கு பெறுவது. இதனைத் தயக்கங் காட்டாமல் நம்மை

ஏற்றுக் கொள்ள வைக்கவே, அடிகள் சிறிய தோர் றொளன ஊர் வலத்தை முதலில் விடுத்துள்ளார். இது தோற்றுவிக்கும் வியப் புணர்ச்சி மறையு முன் இரண்டா வதனையும் நிகழ்த்தி விடுவது, நம்மை யதனை ஏற்றுக் கொள்ள வைப்பதற்குத் துணை புரியு மன்றோ? அடிகள் இவற்றை இணைத் திருப்பது எத்துணைப் பொருத்த மானது!

மக்கள் மன நிலைகளை நுணித் துணர்ந்தே அடிகள் இவ் வூர் வலங்களைக் கற்பித் துள்ளார். இருந்தும், அடி யார்க்கு நல்லார் இரண்டாவது ஊர் வலத்தை ஏற்றுக் கொண் டிருக்க வில்லை. அவருங் கூட, முதலாவதனை மரபு வழாதது என்று காட்டி யுள்ளார். இதனால், அடிக ளுடைய கற்பனை அடியார்க்கு நல்லாரைப் போன்ற பழைமைப் பற்று மிக்க உரை யாசிரியர்களையும் மயங்க வைக்கும் மாண் புடையது என்பது விளங்குகின்றது. இக் கவர்ச்சி மிக்க தொடக்கத்தினைக் கொண்டே, இக் கதையின் வளர்ச்சியும், நிறைவும் நம்மை மகிழ்விக்கும் என எதிர் பார்க்கலாம். சிலப்பின் பயிற்சி கரும்பை நுனியி லிருந்து தின்று செல்வதனை யொக்கும்.

அவரை, இருபெருங் குரவரும் ஒரு பெரு நாளான்
மணவணி காண மகிழ்ந்தனர்; மகிழ்ந்துழி
யானை எருத்தத்(து) அணி யிழையார் மேலிரீஇ
மா நகர்க்(கு) ஈந்தார் மணம்.

இஃது முதல் ஊர் வல மாம். சிறியது; எனினும் எழில் நிறைந்தது. சத்தஞ் செய்யாதது; எனினும், எல்லாருடைய கருத்தையும் கவ்வும் தன்மை சிறந்தது. கோவலனுக்கும், கண்ணகிக்கும் நிகழ விருக்கும் திரு மணத்தை அறிவிக்கவரும் ஊர் வல மிது.

இத் திரு மண நிகழ்ச்சியில் புகார் நகர மக்க ளனை வரும் பங்கு பெற வுரிமை யுடையவர் என்பதனை இவ் வூர் வலம் அறிவிக்க வந்தது. திரு மண வழைப்பினை இவ்

வண்ணம் நிகழ்த்துவது புதுமை யுடைய தன்றோ? அடியார்க்கு நல்லாருக்கும் இவ் வெண்ணம் தோன்றி யிருக்கின்றது. எனினும், இது அடிகளுடைய தொடக்கக் கற்பனை யாக விருப்பதனாலும், கவர்ச்சி யுடைய தாக விருப்பதனாலும் இதனை யவர் ஏற்றுக் கொண்டுள்ளார்; மரபின் பாற் பட்டது என்று விளக்கமுங் கூறி யுள்ளார்.

இளங்கோ வடிகள் தமிழ் மொழியில் முதன் முதலாக வொரு பெருங் காப்பியத்தை யியற்றி யுள்ளார். தம்முடைய புதிய நூலை, அவர் புதுமைகள் செறிந்து தோன்றும் முறையி லியற்றக் கருதியது இயல்பே யன்றோ? இவ் வூர் வலம் நாம் கண்டோ, கேட்டோ அறியாத புதுமையுடையது. எனினும், ஏற்றுக் கொள்ளத் தக்க தாகவே யிருக்கின்றது. இத னுடைய தோற்றமோ, நிகழ்ச்சியோ நமக்குக் கலக்கத்தைப் பயக்க வில்லை; ஆனால் மயக்கத்தை யூட்டி யிருப்பதனை யொப்பவே வேண்டும். இம் மயக்கம் நீங்குவதற் குள் அடிகள் இரண்டாவது ஊர் வலத்தை யனுப்பி யுள்ளார். நாம் அதன் கண் பங்கு பற்றிக் கொள்ளுகின்றோம்.

அடிகள் செய்து முடித் திருப்பது துணிவு மிக்க செயலாகும். அவர் தம் விருப்பத்தை நிறை வேற்றிக் கொண் டுள்ளார் என்பதனைப் பிறர் கூறி நாம் தெரிந்து கொள்ள வேண்டுமோ? நம் முடைய மயக்கமும், நாம் அதனிற் பங்கு பற்றியதும் அவ ருடைய வெற்றியைப் பிறருக்குப் பறை சாற்றி யறிவிப்ப தாகாதா? அடிகள் நம்மை வெற்றி கொண் டுள்ளார்; எனினும், தோல்வி யுற்றவர்க்கு இயல் பாகத் தோன்றக் கூடிய மன வுளைச் சல் நமக் கெழ வில்லை. ஏனெனில் அடிகளுக்கு நாமே வெற்றி யளித் திருக்கின்றோம். அதனிற் பங்கு பெற நமக்கு முரிமை யுண்டு.

அடி யார்க்கு நல்லாரும், நம்மைப் போலவே, முதல் ஊர் வலத்தைக் கண்டு, தம் மனத்தை நெகிழ விட் டிருக்

கின்றார். 'சில மகளிரை யணிந்து யானை யேற்றி அறிவித்தல் மரபு' என அவர் கூறியிருப்பது அவருடைய கற்பனையே யாம்; மரபோ, உண்மையோ அன்று. அவர், தம்முடைய நிறை மனத்தோடு, இவ் விளக்கத்தைத் தந்திருக்க வில்லை. அடிக ளிடத்து அவர் கொண்டிருந்த மதிப்பே இவ் விளக்க மாக வுருப் பெற்றுள்ளது. கதைத் தொடக்கத்திலேயே கவிஞருடைய கற்பனை ஒவ்வாதது எனக் கூறுவ தழகுடைய தாகுமோ?

> அவ்வழி, முரசியம்பின, முருடதிர்ந்தன,
> முறை யெழுந்தன பணிலம்; வெண்குடை
> அர செழுந்ததொர் படி யெழுந்தன; அகலுள்
> மங்கல வணி யெழுந்தது.

இஃது இரண்டாவது ஊர்வல மாகும். முன்னதனை விடப் பன் மடங்கு பெரியது; பெருஞ் சத்தம் செய்வது. முரசு, மத்தளம், சங்கு முதலிய வற்றின் முழக்கம் நம்மைச் செவி டாக்கி விடும் எனத் தோன்றுகின்றது. எனினும், இதனிற் பங்கு பெற நம் மனம் நம்மைத் தூண்டி, இழுத்துச் செல்கின்றது.

இவ் வூர்வலத்தில் வெண் குடைகளும் பங்கு கொள்ளுகின்றன. அவற்றைக் காண்பவர் 'அரசன் நகர் வலம் வருகின்றான் போலும்' என்று எண்ணிக் கொள்ளுகின்றனர். இவையே இவ் வூர்வலத்திற்குச் சிறப் பளிக்கின்றன. இவற்றின் பின் புகார் நகர மக்கள் பன்னிறப் புத்தாடைகளை யணிந்தவராய்ச் செல்லுகின்றனர். இந் நீண்ட ஊர்வலத்தி னிறுதியில் பெண்கள் திரு மாங்கலியத்தை எடுத்து வருவதனைக் காண்கின்றோம். இன்று கண்ணகிக்கும் கோவலனுக்கும் திரு மணம் நிகழும் நா ளன்றோ? வாழ்க மண மக்கள்!

திரு மாங்கலியத்தைக் கண்டதும், அடியார்க்கு நல்லார் தீயை மிதித்து விட்டவர் போல் துள்ளினார். இது மரபுக்கு முற்றிலும் புறம் பான செய லன்றோ? விரும்பத் தக்க தாகவும் இருக்க வில்லையே! துறவு பூண் டிருக்கும்

அடிகள் திரு மணச் சடங்கில் சீர் திருத்தஞ் செய்ய முன் வரலாமா? இது மண வினையை நகைக் கூத் தாகச் செய்யு மன்றோ? பலருங் கூடி யிருவரைக் கணவனும் மனைவியு மாகச் சேர்த்து வைப்பது, அவர்கள் பிற ருடைய பாராட்டுதல்களைப் பெறும் வண்ணம் வாழ்க்கையை நடத்த வேண்டும் என் றன்றோ? அவரைப் பிணைக்கும் மண வினையைப் பிறர் நகைக்கும் வண்ணம், திருமாங்கலி யத்தைத் தெருத் தெருவாய் எடுத்துச் செல்வது அழ குடைய தாகுமோ?

அடி யார்க்கு நல்லாருக்கு இவ் ஊர் வலம் சிறிதும் பிடித் திருக்க வில்லை. அடிகள் அதனை வாழ்த்தி யனுப்பி யுள்ளார்; அரும் பத வுரைகாரர் உடன் சென்று நிகழ்த்தி வைக் கின்றார். இருப்பினும், அது வேண்டிய தாகி விடுமா? தமக்குப் பிடிக்க வில்லை என்று, அவர் இதனைக் கற்பித் துள்ள அடிகளையோ, வழி மொழிந் துள்ள அரும் பத வுரைகாரரையோ குறை கூறி யிருக்க வில்லை. அவர் அவ் வழிச் செல்பவ ரல்லர். தம் வல்லமையால் இவ் ஊர் வலம் நிகழ வில்லை எனக் காட்டி யிருக்கின்றார். அவ ருடைய பெருந் தன்மையைப் போற்ற வேண்டும்; வியக்க வேண்டும்; பின் பற்றவும் வேண்டும்.

'அகலுள் மங்கல வணி யெழுந்தது' என்ற பகுதிக்கு 'மங்கல வணி ஊ ரெங்கும் எழுந்த தென்க' என்று அடி யார்க்கு நல்லார் உரை கூறி யிருக்கின்றார். இவ் வுரையில் அவர் எதனையும் புதி தாகப் புகுத்தி யிருக்க வில்லை. அகலுள் என்பதற்கு ஊ ரெங்கும் என்று பொருள் கூறி யுள்ளார். இருந்தும், அவர் அப் பெரிய ஊர் வலம் நிகழ வில்லை என்பதனைக் காட்டி யிருக்கின்றார். அவ ருடைய செயல் மாய வித்தை போல் தோன்றுகின்ற தல்லவா? இதனை அவர் எப்படிச் செய்து முடித்தார்?

'அகலுள் மங்கல வணி யெழுந்தது' என்பது மூல பாடம்; அடிகள் அமைத்துள்ள சொல் வைப்பு. அதனை

அடி யார்க்கு நல்லார் 'மங்கல வணி யக லுள் எழுந்தது' என்று மாற்றி யமைத்துக்கொண்டார். இச் சிறு மாற்றம் அப் பெரிய ஊர்வலத்தை முற்றிலும் மறைத்து விடுகின்றது. அது நிகழ்ந்ததா என்று கேட்கும் நிலையில் இவ்வுரை நம்மை வைத் திருக்கின்றது. சொற்களின் முறையை மாற்றுவது இத் துணை யாற்றல்பெறக் கூடுமா? வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம் என்னும் வழக்கு உண்மையை அடிப் படை யாகக் கொண் டெழுந்ததே போலும் !

அடி யார்க்கு நல்லார் செய் துள்ள மாற்றம் அழிக்கும் ஆற்றலை மட்டும் உடைய தன்று; ஆக்குந் திறனு மதற் குண்டு; அது ஊர் வலத்தை அழித்தது; ஆனால் அதற்கு ஈ டாக அந் நகரத்தை மிகப் பொலி வுடைய தாக மாற்றி விட்டது. அழித்ததனைக் காட்டிலும் அது இழைத் திருப்பது அளவாற் பெரிது; பன் மடங்கு பெரிது. மங்கல வணி என்ற சொற்களை அவர் கலியாணக் கவின் என்ற பொருளில் வழங்கி யுள்ளார். இதனால், அந் நகர முழுவதும் திரு மணப் பொலிவு பெற்றதாக மாறி விடுகின்றது. அடி யார்க்கு நல்லார் நல் லெண்ணம் மிக வுடையவர் என்பதற்கு இவ் வுரையே சான் றாகும்.

அடி யார்க்கு நல்லா ருடைய கற்பனை, அடிக ளுடையதனை விஞ்சி யிருக்கின்றது. மாசாத்துவான் சோழ அரசனுக்கு அடுத்த பணக்காரன் என்பதும், அவனையும் மாநாய்கனையும் புகார் நகரத்தவ ரனைவரும் விரும்பிப் போற்றினர் என்பதும் உரை யாசிரியருடைய கற்பனையை ஏற்றுக் கொள்ள வைக்கும். எனினும், அப் பெரிய நகரம் திரு மணப் பொலி வுடன் நிறைந்து காணப் பட்ட தென்பது, எளிதி லேற்றுக் கொள்ளக் கூடிய மிகையா யில்லை. இதனை, அவரே உணர்ந்து கொண்டு, 'அக லுள் —தெருவு மாம்' என்ற விளக்கத்தைத தந் திருக்கின்றார்.

இவ் விளக்கத்தால் அத் திரு மணம் நிகழ்ந்த தெரு கலியாணக் கவி னுடைய தாக விளங்கிற் று என்பது புல

ஞகின்றது. இது எளி தாக ஏற்றுக் கொள்ளக் கூடி யதே! உண்மை யாக நிகழ்ந்து மிருக்கும்! அடி யார்க்கு நல்லார் இவ் விளக்கத்தைக் காட்டித் தம் கற்பனையை உண்மையோடு பொருந்தி நடக்கு மியல் புடைய தாகச் செய்து விட்டார். எனினும், அடிகள் அனுப்பி வைத் திருக்கும் ஊர் வலத்தை, நாம் காணும விருக்க முடியாது போல் தோன்றுகின்றதே!

அகலுள் என்பது சங்க இலக்கியத்தில் ஓர் ஊரினைக் குறிப் பிடும். அது குறிப் பிடும் ஊர் சிறி தாகவோ பெரி தாகவோ யிருக்கலாம். ஆனால் ஊ ரென்ற முழுப் பிண்ட மாக விருக்க வேண்டும். அதனை ஒரு தெருவினைக் குறிப் பிடு மென அடி யார்க்கு நல்லார் கூறி யிருப்பது புதிய பொருளே யாம். புகார் நகரத்தின் ஒரு தெரு, அகலுள் என்பது குறிப்பிடும் ஊர்கள் பலவற்றினும் பெரியதாக விருக்கலாம். எனினும், தெரு என்பது ஒரு பிண்டத் தில் பகுதி யாகுமே யல்லால், எத்துணைப் பெரிய தேனும் பிண்ட மாகாது. ஆகவே, அடி யார்க்கு நல்லார் கூறும் உரை புதியதே யாம்.

அடிகள் கற்பித் துள்ள புதுமை யினை நிகழ வில்லை யெனக் காட்ட, அடி யார்க்கு நல்லார் தா மொரு புதுமை யினைப் புகுத்த வேண்டி நேர்ந் திருக்கின்றது. முள்ளை முள்ளா லெடுப்பது வழக்க மல்லவா? சொற்களுக்குப் புதிய வுரைகளைக் காணும் ஆற்றலு முரிமை யும் உரை யாசிரியர்க் குண்டு. ஆகவே, அடி யார்க்கு நல்லார் காட்டு முறையை நாம் ஏற்றுக் கொள்ளலாம். எனினும், அடிகள் அனுப்பி யுள்ள ஊர் வலத்தில் கலந்து கொள்ளாமல் நாம் தப்ப முடியாது போல் தோன்றுகின்றதே!

வெண் குடைகள் திரு மண நிகழ்ச்சியில் பங்கு பெறு வன வல்ல. அவை ஊர் வலங்களுக்கே அங்க மாகப் பயன் படும். அரசனோ, தெய்வமோ வலம் வரும் பொழுதே அது பயன் படுகின்றது. அக் குடைகளை யடிகள் தம் ஊர் வலத்துக்குப் பயன் படுத்தி யிருக்கின்றார். இவற்றை அடி யார்க்கு நல்லா ரால் மறைக்கக் கூட வில்லை. இக்

குடைகள் அவ் வூர் வலத்துக்குச் சிறப் பளிப்பதனோடு, அதனை அடி யார்க்கு நல்லார் தம் முறையால் அழிக்க வொட்டாமலும் பாது காக்கின்றன.

வெண் குடைகள் தம் மியல்புக் குரியவற்றையே செய் துள்ளன. தம்மை நாடியவரை அவை அளி செய்து காக்கும் பண் புடையன வல்லவா? அடி யார்க்கு நல்லா ருக்கு அஞ்சி அவை தம் முரிமையை விட்டு விடுமோ? இயல்பினை மாற்றிக் கொள்ளுமோ? அடிகள் அவற்றை நாடிச் சென்றார். அவை அவருக்கு அருளி யிருக் கின்றன. அவ ரமைத் திருக்கும் ஊர் வலத்தின் முன் சென்று அதற்குச் சிறப்பினை யளித் திருக்கின்றன, உடன், நிகழ்த்தியும் தந் துள்ளன.

"வெண் குடை அர செழுந்ததொர் படி யெழுந்தன" என்ற பகுதிக்கு, 'வெண் குடைகள் அரசன் உயர் வெழுந்த படி யெழுந்தன' ' என்று அடியார்க்கு நல்லார் பொருள் கூறி யுள்ளார். அக் குடைகளைத் தூக்கிப் பிடிக்கும் பொழுது, அவை மே லெழுவது, அரசன் பெருமை உயர்வ தனை ஒக்கும் என்பது அவர் கருத்து. ஆகவே குடைகள் இருந்ததனை அவர் ஒப்பு கின்றார் என்பது தெரிகின்றது. ஊர் வலம் நிகழ வில்லை யேல், அக் குடைகள் எதற்கு? திரு மண வீட்டின் முன் அவற்றைத் தூக்கிப் பிடித் திருத்தலால் பெறும் பயன் என்ன? எனவே, ஊர்வலம் நிகழ்ந்ததனை யொப்பவே வேண்டும்; அதனை மறைத்த லியலாது.

அடிக ளுடைய செயல்கள் உரை யாசிரியரை நன்கு சோதித்து விட் டிருக்கின்றன, கதைத் தொடக்க மென்று அவர் முதல் ஊர்வலத்தை ஏற்றுக் கொண்டார். அதன் பின்னரும், அடிகள் மற்று மொரு வழக்கத்தி லில்லாத ஊர் வலத்தைக் கற்பித்தால், உரை யாசிரியர் என்ன செய்வார்? அவர் பொறுமையை யிழந்தார். எவ் வுரை யாசிரியர் தாம் இதனைப் பொறுக்கக் கூடும்? அடி யார்க்கு

நல்லார் தம் பொறுமையை யிழந்தாரே யல்லாமல் பண் பினை யிழக்க வில்லை. அவ் வேண்டத் தகாத ஊர் வலத்தை மர பன்று எனக் கூற வில்லை. நிகழாதது போல் காட்டி யுள்ளார்.

இவ் வூர் வலங்க ளிரண்டி னுள்ளும் பின்னதே பொரு ளுடையது. அதனை யமைதி யுடையது என நம்மை யேற்க வைக்கவே, அடிகள் முதல் ஊர் வலத்தை யனுப்பி வைத் துள்ளார். அதனை யேற்றுக் கொண்ட அடி யார்க்கு நல்லார், இரண்டாவதனை மட்டும் மறைத் திருக்கலாமா? அடிகளுக்கு வணக்கஞ் செலுத்தும் நோக்கத் தோடு அவர் முதல் ஊர் வலத்தை ஏற்றுக் கொண்டா ரெனினும், அச் செயலாலேயே, இரண்டாவதனை ஏற்க மறுக்கு முரிமையை உரை யாசிரியர் இழந்து விடுகின்றார். நமக்கு வேண்டிய தனைக் கொண்டு, வேண்டாததனைத் தள்ளுவது வாழ்க்கை யிலுங் கூட வில்லையே! அடியார்க்கு நல்லார் முயற்சி அடி கள் வெற்றியைப் பறை சாற்றுவ தாகவே முடிந் திருக் கின்றது.

அவருரைக்கு இங்கு நாம் கண்ட தடைகளை உரை யாசிரியர் உணர்ந் திருக்க மாட்டா ரெனக் கருதுவது, அவரை யறிந்து கொள்ளுவ தாகாது. அரும் பத வுரை காரர் 'மாங்கலிய சூத்திரம் வலஞ் செய்தது' என்று கூறி யிருப்பதனைக் கண்டும், தம் கருத்தை மாற்றிக் கொள்ளா மல், அப் பெரிய வூர் வலம் நிகழ வில்லை யெனக் காட்ட வந்த அடி யார்க்கு நல்லார் துணிவு வியக்கத் தக்கது. வழக்கி லில்லாத வூர் வலங்கள் இரண்டினை அடிகள் கற் பித்த தேன் என்று தம்மைக் கேட்டுக் கொண் டிருந்தால், அவர் அவற்றின் பொருளைக் கண்டு தெரிவித் திருப்பார்.

தம் முடைய பெருங் காப்பியத்தின் விதையை யடி கள் ஊன்றி விட்டார். அது நாம் இது வரை காணாத புதுமை யுடைய தாக விருக்கின்றது. ஆகவே, முளைக்கும் வரை பொறுத்துப் பார்த்தால் அது எவ் வகையைச் சேர்ந்

தது என்பது விளங்கும். நமக்கு நல்ல பயனை யளிக்கக் கூடியதனையே யடிகள் தேர்ந்து விதைத் திருப்பார்!

## 2. முனை

அடிகள் கற்பித் துள்ள ஊர் வலங்க ளிரண்டிலும், பின்னதே பெரிது; பொருளுடையது; கதையின் முத னிகழ்ச்சியில் பங்கு கொள்வது. முன்னது அத னுடைய அறிவிப்பே யாகும். எனவே, இவற்றின் பொருளைத் தெரிந்து கொள்ள, நாம் பின்னதனையே முதலி லாராய வேண்டும். அரசன் நகர் வலம் வருதலை வர வேற்பதனைப் போலவே, புகார் நகர மக்கள் அதனையும் விரும்பி வர வேற்றனர்; கண்டு மகிழ்ந்தனர்; கலந்து கொண்டு சிறப் பித்தனர். அது திரு மாங்கலியத்தை ஊர் வல மாக எடுத் துச் சென்றதனைக் காட்டுகின்றது. எனவே, பொருந்துவ தன்றென உரை யாசிரியராற் கருதப் பட்டது.

மாசாத்துவான், மாநாய்க னென்ற இருவரும் புகார் நகரத்தின் பெரு வள்ளல்க ளாக விளங்கினர். இருவரும் தம் அளப் பரிய செல்வத்தைப் பிறர்க் களிக்கப் பயன் படுத்தினர். ஆகவே, நகர மக்கள் அவர்க ளிடத்துப் பே ரன்பும், மதிப்புங் கொண்டவ ராக விருந்தனர். மாசாத்து வானுக் கோர் மகனும், மாநாய்கனுக் கோர் மகளும் பிறந்த பின், இக் குடும்பங்க ளிரண்டும் இணைந் திருக்க வாய்ப்பு நேரும் என்று ஊரார் எதிர் பார்த்தனர். அதனைப் பெரி தும் விரும்பி யிருந்தனர். பிறரை வாழ வைப்பதனைத் தம் வாழ்க்கையின் பய னாகக் கருதியவர்க ளிடத்து மக்கள் அத்துணை ஈடுபாடு கொண்டவ ராக விருந்ததனில் வியப் பில்லை.

கோவலனுக்கும், கண்ணகிக்கும் திரு மணம் நிகழ நாள் குறித்து விட்டதனைத் தெரிந்து கொண்ட பின், ஊரார் பரபரப்பு கொண்டனர். பல் லாண்டுக ளாக அவர்கள் விரும்பி எதிர் பார்த் திருந்த நிகழ்ச்சி நிகழப் போகின்ற தன்றோ? மாசாத்துவான், மாநாய்கன் என்ற

இருவருக்கும் கோவலனையும், கண்ணகியையு மல்லால், வேறு மக்க ளில்லை. எனவே, ஊரார் அவர்க ளிடத்துக் கொண் டிருந்த அன்பினை வெளிப்படுத்த, இத் திரு மணம் ஒன்றே வாய்ப் பாகும். அதனால், அவர்கள னைவரும் இம் மண நிகழ்ச்சியில் பங்கு பற்றிக் கொள்ளப் பே ராவ லுடையவ ராக விருந்தனர்.

இத் திரு மணம் அதனை எதிர் பார்த் திருந்த மண மக்களினும், ஊர் மக்களுக்குப் பெரு மகிழ்ச்சியைத் தந்தது என்பதனை நமக் குணர்த்தவே அடிகள் இவ் ஊர் வலத் தைக் கற்பித் துள்ளார். மண மக்கள் சில நாட்க ளாகத் தம் மணத்தை யெதிர் பார்த் திருந்தனர்; ஆனால் ஊரார், அவர்கள் பிறந்த நாள் தொட்டு இதனை எதிர் பார்த்தவ ராக விருந்தன ரன்றோ? மணஞ் செய்து கொள்ளும் நாளிற் காட்டிலும், தம் எண்ணம் ஈ டேறுவதனைக் காணும் மகிழ்ச்சி அளவில் மிக்கது என்பதனை அனைவரும் மறிவர். எனவே, மண மக்களினும், ஊரார் இத் திரு மண நாளை மிக்க ஆவலுடன் எதிர் நோக்கி யிருந்தன ரென்பது மிகை யாகாது; உண்மையே யாம்.

தம் எண்ணம் நிறை வேறுவதனை நேரிற் கண்டு மகிழ வேண்டு மென்ற துடிப்பு புகார் நகர மக்க ளனைவ ருக்கு மிருந்தது. மாசாத்துவான் மாளிகை, அரச னுடைய அரண்மனையைப் போலப் பெரி தாக விருந் திருக்கலாம். எனினும், அதன் கண் நகர மக்க ளனைவரும் திரண் டிருந்து மண நிகழ்ச்சியைக் கண்டு மனங் களிக்கக் கூடுமா? எனவே, அவர்க ளுடைய ஆவலை நிறை வேற்றி வைக்க, அடிகள் இப் புதிய ஊர்வலங்களைக் கற்பித் திருக்கின்றார். இப் புதுமையை அடிகள் ஊரார் விருப்பத்தை நிறை வேற்றி வைக்கவே சூழ்ந் துள்ளார்.

திரு மணம் நிகழுங் காலத்தில், அன்று போல் என்றும் மகிழ்ச்சி யுடையவ ராக மண மக்கள் வாழட்டும் என வாழ்த்துவதே, பிறர் அதனிற் கலந்து கொள்ளுவதன்

நோக்க மாகும். திரு மணச் சடங்குகளுள் தாலி கட்டுவது இன்றி யமையாத தொன்றாகும். பழைமையைப் போற்றும் சடங்கு அதுவே யாம். தீ வலம் வருதல் சடங்குகளை வகுத் தமைத்தவர் புகுத்திய தாம். எனவே, மாங்கலியத்தை மணத்தைக் காண வந்தவரை வாழ்த்தச் சொல்லிப் பின்ன ரணிவிக்கின்றனர். அடிகள், இவ் ஊர் வலத்தின் வாயிலாய், ஊரா ரனைவரையும், அவர்க ளிருந்த விடங்களி லிருந்தே, திரு மாங்கலியத்தை வாழ்த்தும் வாய்ப்பினைப் பெறச் செய் துள்ளார்.

புகார் நகரிற் பெருஞ் செல் வாக்குப் பெற்றவனே யெனினும், மா சாத்துவான் மரபி லில்லாத இவ் ஊர் வலங்களைத் துணிந்து நிறை வேற்றி யிருக்க மாட்டான். எனவே, இவை அடிகளாற் கற்பிக்கப் பெற்றவைகளே யாம். தம் கதையின் முத லிகழ்ச்சியிற் புகார் நகர மக்க ளனைவரும் பங்கு பெற்றன ரென்பதனைக் காட்டவே, அவர் புதியன வாகிய இவ் ஊர் வலங்களைக் கற்பித்துள்ளார். இப் பயனை வே றெவ் வுத்தியைக் கை யாண்டு, அவர் பெற்றிருக்கக் கூடும்? அடிகள் தம் விருப்பத்தை நிறை வேற்றிக் கொண்டா ரென்ப துண்மையே! ஆனல், அதற் காக மரபைப் புறக் கணித் திருக்கலாமா வென்பதே வழக் காம்.

மக்க ளுடைய வழக்கமே மரபு எனப் பெறும். அது விதி யாகா தெனினும், விதிகளைப் போன்றே பிறழாமற் காக்க வேண் டிய தாம். விதிக்கு மா றாக நடப்பது குற்ற மாகும். மரபினைப் புறக் கணிப்பது அவ்வாறு ஒறுக்கப் பெறும் குற்ற மாகாது. எனினும், மக்களை அவ மதிப்ப தாகக் கருதப் படும். எனவே, அதனைப் போற்றுவதே அறி வுடைமைக் கழ காம். உலகத்தோ டொட்ட வொழுகலைக் கல்லாதவ ரறிவிலிகளே என்று வள்ளுவரும் கூறி யுள்ளார். இவற்றை யடிக ளறியாரா? இவ் ஊர் வலங்களின் நிகழ்ச்சி மரபினைப் போற்றுவ தாகா தெனினும், அதனைப் புறக்கணித்துத் தூற்றுவது மாகா

தென்றே அவர் இவற்றைக் கற்பித்து நிகழ்த்திக் காட்டியுள்ளார்.

செயல்கள் பண்புடையன வல்ல; செய்பவர் நோக்கமும், அவற்றை ஏற்பவர் மன நிலையுமே, அவைகளுக்குப் பண்பினை ஏற்றுவன வாம். தலையில் தொப்பி யணிபவர், மதிப்புக் குரியவரைக் காணுங்கால், அதனைக் கழற்றிக் கையி லெடுத்துக் கொள்ளுகின்றனர்: இது வணக்கஞ் செலுத்தும் முறை யாகக் கருதப் படுகின்றது. ஆனல் போர் வீரன் இவ்வாறு செய்வது குற்றமெனக் கருதப் படுகின்றது பாகையை யணியும் வழக்க முடையவரும், அதனை யணியாது தோன்றுவது பிறரை அவ மதிப்ப தாகு மெனக் கருதுகின்றனர். எனவே, செயல்கள் பண்புடையன வல்ல என்பது தெளி வாகின்றது.

இவ் வூர் வலங்கள் புகார் நகர மக்களின் அவாவை நிறை விக்கக் கற்பிக்கப் பெற்றவையே யாம். அவர்கள் இவற்றைக் கண்டு மகிழ்ந்தனர்; கலந்து கொண்டு சிறப்பித்தனர். அவர் களால் இவை யிரண்டும் ஏற்றுக் கொள்ளப் பட் டிருக்கின்றன. எனவே, புதியன வேனும், வழக்கத்தி லில்லாதன வேனும், இவை குண மில எனக் கடியக் கூடியன வாகா; கொள்ளத் தக்கனவே யாம். எவ் வூர் வலமும் மக்களைப் பற்றும்; அமைதி யுடையதெனின் மகிழ்விக்கும். ஆகவே, புகார் மக்கள் விரும்பினர் என்பதனைக் கொண்டு, அவர்கள் இவற்றை ஏற்றுக் கொண்டன ரெனக் கொள்ளலாமா? அவர்கள் ஏற்றுக் கொண்டன ரெனக்காட்டின், இவை முற்றிலும் பொருந்துவன வாகிவிடும்.

திரு மாங்கலிய வூர் வலம் நிகழும் என்று புகார் மக்கள் எதிர் பார்த் திருக்க வில்லை. எனினும், தமக்கு இத் திரு மண நிகழ்ச்சியில் பங்கு பெற வாய்ப் பளிக்கப் பெறும் என்பதனை அவர்கள் அறிந்துகொண் டிருந்தனர். அவர்களுக்கு அவ் வுறுதியை அளித்தது முதல் ஊர்

வலமே யாம். இரண்டாம் ஊர் வலத்தை அவர்கள் தமக் களித்த வாய்ப் பாகத் தெரிந்து கொண்டனர். எனவே, அதனை மகிழ்ச்சி யுடன் வர வேற்றனர்; அதன் கண் கலந்து கொண்டு சிறப்பித்தனர். ஆகவே, இவ் வூர் வலம் பொருந்தும்; முற்றிலும் பொருந்தும்.

புகார் நகரத்தவர் விரும்பிக் கேட்டுக்கொண்ட கார ணத்தாலேயே, அவர்களுக்கு இத் திரு மண நிகழ்ச்சியில் பங்கு பெற வாய்ப் பளிக்கப் பட்டது என்பதனை அடிகள் தெளி வாகப் புலப் படுத்தியிருக்கின்றார். அவர்களுக்குப் பங்கு பெற வாய்ப் பளித்தது இரண்டாம் ஊர் வலம்; அத் தகைய வாய்ப்பினை எதிர் பார்க்க வைத் திருப்பது முதல் ஊர் வலம்.

மாநகர்க்கு ஈந்தார் மணம். அப் பெரிய நகரத்தி லிருந்தவர்களுக்கு மணச் செய்தியை ஈந்தார்கள்; தெரி விக்க வில்லை. ஈதல் என்பது கேட்டவர்களுக்குக் கொடுத்தலைப் புலப் படுத்தும் ஆற்றலுடையது.

ஈ தா கொடுவெனக் கிளக்கு மூன்றும்
இரவின் கிளவி ஆகிடன் உடைய.

இம் மூன்று சொற்களும் கேட்ட பின் கொடுத்தலை யுணர்த்தும் ஆற்றல் வாய்ந்தவை எனத் தொல் காப்பியர் கூறுகின்றார். இதனால், நகர மக்கள் கேட்டுக் கொண் டதற் கிணங்க, அவர்கள் வேண்டுகோளை ஏற்றுக் கொண் டதனை அறிவிக்க முதல் ஊர்வலம் அனுப்பி வைக்கப் பெற்றது. அதனைக் கண்ட ஊரார், தம் நோக்கம் நிறை வேற வாய்ப் பளிக்கப் படும் என்ற உறுதியைப் பெற்ற னர். அவர்களும், வியக்கும் வண்ணம், இரண்டாம் ஊர் வலம் நிகழ்ந்தது; திரு மாங்கலியத்தை வாழ்த்தி மண நிறைவினைப் பெற்றனர்.

அறிவித்தார் என்ற சொல்லைப் பயன் படுத்தி யிருக்க வேண்டிய அடிகள், அதனை விடுத்து ஈந்தார்

என்ற சொல்லைக் கை யாண் டிருக்கின்றார். அத னால், புகார் நகரத்தவர் வேண்டிக் கொண்டதனை நம்மை யுணர்ந்து கொள்ள வைத் திருக்கின்றார். இவ் வாறு வொரு சொல்லைப் பயன் படுத்த வேண்டிய விடத்தில், அதற்கு மாறாக வே றொரு சொல்லைப் பயன் படுத்திப் பொருட் சிறப்பினை யளிப்பது இலக்கியத்தி லோர் உத்தி யெனப் படும். இவ் வுத்தியை இலைழந்தல் (Commission) எனக் கூறு வர். இது விரும்பிச் செய்யப் பெறுவ தாகும்.

இவ்வாறே விரும்பிச் செய்யாம லொழிதலு மோர் உத்தி யாம். அது கூற வேண்டிய சொல்லினைக் கூறாமல் விட்டு விடுத லாகும். அதனைத் தவிர்தல் (Omission) எனக் கூறுவர். அடிகள் இவ் வுத்தியையும் இவ் விடத் திலேயே, இவ் வடியிலேயே கை யாண்டுள்ளார்.

மாநகர்க்கு ஈந்தார் மணம். மணச் செய்தியை யறி வித்தனர் என்றல்லவா கூறி யிருக்க வேண்டும்? செய்தி என்ற சொல் இடம் பெற வில்லையே? அடிகள் அதனை விரும்பியே விட்டு விட்டிருக்கின்றார். அதனாற் சிறந்த பயனைப் பெற் றிருக்கின்றார்.

நிகழ விருக்கும் திரு மணம் கண்ணகி கோவலருக்கே யன்றோ? ஆனால் முதல் ஊர்வலத்தால், இரு முது குரவர் ஊ ராருக்குத் திரு மணத்தை யளித்தன ரென் றல்லவா அடிகள் கூறி யுள்ளார்? இதனால், இத் திருமண நாளை, புகார் நகர மக்க ளனைவரும் தத்தம் திரு மண நாளை எதிர் பார்த் திருந்தது போலவே ஆவல் நிறைந்தவ ராக வெதிர் பார்த் திருந்தன ரென்பதனை யடிகள் நம்மை யுணர்ந்து கொள்ள வைத் துள்ளார்; மண மக்கள் தம் திரு மணத்தா லடைந்த மகிழ்ச்சியை ஊ ராரு மடைந் திருந் தனர் என்பதனையும் தெரிவித்துள்ளார்.

திரு மண வழைப்பு ஊர் வலத்தைக் கண்ட புகார் மக்கள், தாமே மணம் பெறுபவரைப் போல் கருதிக் கொண்

டனர். எனவே, திரு மாங்கலிய ஊர்வலத்தில் கலந்து கொண்டு அம் மணத்தைப் பெற்றவர் போலவே மகிழ்ச்சி யுற்றனர். இவ் வூர் வலங்களைக் கற்பித் திருப்பதன் வாயிலாய், அடிகள் தம் கதையின் முத னிகழ்ச்சி புகார் மக்களுக்கு எத்துணை மகிழ்ச்சி யளித்தது என்பதனை நம்மை நன் குணரச் செய் துள்ளார். வேறெவ் வகையில் கூறி யிருப்பினும், அவர் இப் பயனை யடைந் திருக்க முடியா தன்றோ? புகார் மக்கள் மன நிலையை அவர் தெரிவித் திருக்க வில்லை; எனினும், நாம் அதனை யவர் தெரிவிக்க விரும்பி யிருந்த அள வுடைய தாக அறிந்து கொண்டு விட்டோம்.

'அவரை யிரு பெருங் குரவரு மொரு பெரு நாளின் மண வணி காண மகிழ்ந்தனர்; மகிழ்ந்துழி மா நகர்க் கீந்தார் மணம்; தீ வலஞ் செய்வது காண்பார் கண் நோன் பென்னை?' இவற்று ளிரு முது குரவர், ஊரார், மண நிகழ்ச்சியைக் கண்டவர் என்பவ ருடைய மன நிலை யையும், அவர்கள் பெற்ற மகிழ்ச்சியையுமே அடிகள் நம்மை உணர்ந்து கொள்ளச் செய் துள்ளார். இவ் வனைவரையும் மகிழ்விக்க மணந்து கொண்ட மக்க ளிருவரும் எப்படி யிருந்தன ரென்பதனை, அவர் தெரிவிக்க வில்லை. மண மக்கள் மகிழ்ந்தன ரென்பதனையும் கூற வேண்டுமோ?

மண மக்கள் மன நிலையை யடிகள் கூறாமல் விட் டிருப்பது குறை யாகாது, இயல்பே யா மென்று நாம் கரு திக் கொள்ள வேண்டு மென்றே, அவர் விரும்பி யுள்ளார். ஆனால் அவ ரதனைக் குறிப் பிடாமற் சென் றிருப்பதற்குத் தக்க காரண முண்டு. நாம் கண்ணகி கோவலர் திரு மணத்தைப் பற்றியே தெரிந்து கொள்ள விரும்புகிறோம். ஆகவே, அவர்களைப் பற்றி யடிக ளேதேனும் கூறி யிருந் தால், ஊராரைப் பற்றிக் கருதிப் பார்க்க மாட்டோம். தம் கதையின் முத னிகழ்ச்சி எப்படி ஊரா ரனைவரையும் பற்று கொள்ளச் செய்தது என்று காட்டுவதே யடிகள்

நோக்க மாம், ஊரார் உட னிருந்தாலும், இல்லா விடினும் திரு மணம் நிகழு மன்றோ?

'மங்கல வணி ஊ ரெங்கு மெழுந்த தென்க' என்று அடி யார்க்கு நல்லார் கூறி யிருப்பதனை நாம் உண்மையின் மிகை யாகவே யிருக்கக் கூடு மென்று கருதினே மல்லவா? அவ்வாறே, அந் நகரத்து மக்க ளனைவரு மித் திரு மணத் திற் பங்கு பெற்றுப் பெரு மகிழ்ச்சி யுற்றன ரென்று அடிகள் கூறுவதும் மிகையாகவே யிருக்க வேண்டு மன்றோ? தம் கருத்தை நா மொப்பத் தயங்கு வோ மென்று, உரை யாசிரிய ரோர் விளக்கந் தந் திருப்பதனைப் போலவே, கவிஞரும் தம் கருத்தை வே றோ ரிடத்திலும் குறிப் பிட்டு வற் புறுத்தி யிருக்கின்றார்.

பெருமகன் ஏவல் அல்லது யங்கணும்
அரசே தஞ்சமென் றருங்கா னடைந்த
அருந்திறல் பிரிந்த அயோத்தி போலப்
பெரும் பெயர் மூதூர் பெரும்பே துற்றதும்.

கோவலனும், கண்ணகியும் புகார் நகரத்தை விட்டுச் சென்று விட்டதனை யுணர்ந்த ஊரார், இராமன் பிரிந்ததனைப் பொருது புலம்பிய அயோத்தி மக்களைப் போலவே, பெரிதும் வருந்தினர். முன்னர் நகர மக்க ளனைவரையும் குறிப் பிட மா நகருக்கு மண மீந்தன ரென்றவர், இங்கு மூ தூர் பெரும் பே துற்றது வெனக் கூறி யுள்ளார்; இரண் டிடங்களிலும் மக்க ளனை வரையும் குறிப் பிட அடிகள் ஊரின் பெயரையே கை யாண் டுள்ளார்.

தம் காப்பியக் கதையின் முத னிகழ்ச்சி புகார் நகர மக்கள் மனத்தைப் பெரிதும் பற்றிக் கொண் டிருந்தது என்பதனை வற் புறுத்துவதனி லடிகள் கவனஞ் செலுத்தி யிருக்கின்றார். மாசாத்துவான், மாநாய்கன் என்பாருடைய நிலைகளையும், தகுதியையும் நோக்க, ஊராருடைய மன நிலை வியக்கத் தக்க தன் றென நாம் கருதலாம். எனினும், அதனை நாம் புறக் கணிக்கக் கூடா

தென்பதற் காகவே, அடிகள் மண மக்கள் மன நிலையைப் பற்றி யெதுவும் கூறாமற் சென் றிருக்கின்றார். இதனால், தம் கதைத் தலைவரை விடக் கவிஞர் ஊரா ரிடத்துப் பற்று கொண் டிருந்தமை புலப் படுகின் றது.

கண்ணகியின் கதையைக் காப்பிய மாகப் புனைய அடிகள் முன் வந்ததற்குக் காரண மென்ன வென்பது இப் பொழுது நன்கு புலப் படுகின் றது. புகார் நகர மக்களனைவ ருடைய உள்ளங்களையும் அவள் கதை பிணித்துக் கொண் டிருந்ததனாலேயே யவ ரதனைக் கூற முன் வந்துள்ளார். அக் கதையின் முத னிகழ்ச்சியை ஊரா ரனைவரும் உடனிருந்து நிகழ்த்தி வைத் திருக்கின் றனர். எனவே, இக் காப்பியம் காதல ரிருவர் கதையைக் கூற வெழுந்த தன் று, புகார் மக்க ளுடைய மன வெழுச்சியைக் கூற வந்ததே யா மென்பது விளங்குகின் றது.

அடிகள் ஊன் றிய விதை முளைத்து விட்டது; அதனியல்பு புல னாகி விட்டது. அவர் சமுதாயக் காப்பிய மொன் றினை யுரு வாக்கித் தர முன் வந்துள்ளார். எனவே இக் கதையின் நிகழ்ச்சிகள் பிறர் மனத்தை யெப்படிப் பற்றின வெனக் காட்டுவதனையே, அவர் தம் நோக்கமாகக் கொண்டு இதனை விவரிப்பா ரென் று நாம் எதிர் பார்க்கலாம். அவ ருடைய நோக்கத்தை விளங்கிக் கொண்ட பின்னரும், செய்து முடிப்பதனைக் காணுங் காலத்தில் நாம் எப்படி முடியு மெனக் கனவில் கூடக் கருத வில்லையே யென் று கூறி வியப்போம்.

அடிகள் அமைக்கத் திட்ட மிட் டிருக்கும் மாளிகை அழகு, பெருமை, கவர்ச்சி முதலிய பல நற் பண்புகளைப் பெற் றதாய் நமக்குப் பெரும் பய னளித்து மகிழ்விக்கும் மாண் புடையதாய் விளங்கும். இப் பெரு மாளிகைக்குத் தக்க அடித் தளத்தையே யிக் கதையின் முத னிகழ்ச்சியை விவரித்ததன் வாயிலா யவர் அமைத்துக் கொண் டிருக்கின்றார். அவ ருடைய கற்பனைகள் புதுமை யுணர்ச்சி

யோடு, பெரு மகிழ்ச்சியையும் தோற்றுவித்தன வல்லவா? அவ்வாறே, அவர் முடிவும் நமக்கு மன நிறைவினையும் பெரு மிதத்தினையு மளிப்ப தாக விருக்கும்.

## 3. நாற்று

கண்ணகியும், கோவலனும் புகார் நகரிற் பிறந்து வளர்ந்தவர்கள். கோவலனைக் 'கண்ணுற் காணக் கூடிய செவ்வேள்' என்று மக்கள் கருதினர். கண்ணகிக்குத் 'திரு மகளும் அருந்ததியுமே யொப் பாவார்' எனப் பெண்டிர் கூறினர் இவர்க ளுடைய பெற்ருேர் பெரு வள்ளல்க ளாக விளங்கினர். எனவே, இவர்க ளிடத்தே புகார் நகர மக்க ளனைவரும் அன்பு மிக வுடையவ ராக விருந்ததனில் வியப் பில்லை. இயல் பென யெவரும் கொள்ளக் கூடிய இச் செய்தியை, நம்மை வியக்க வைக்கும் முறையில் அடிகள் விவரித் திருப்பது பாராட்டத் தக்கதே யாம்.

இக் காதல ரிருவரையும் மதுரை நகரத்தவ ரொருவரு மறியார். இவர்களை யடைக்கல மாகப் பெற்ற மாதரிக்குக் கூட இவர்க ளியல்பும், தகுதியும் தெரியாவே! பிறரைப் பற்றிக் கேட்பா னேன்! மாசாத்துவான் பெயரைக் கேட்டால், இவர்களை மதுரை வாணிகர் விருந் தேற்று வேண்டியன செய்வ ரென்று கவுந்தி யடிகள் கூறி யுள்ளார். ஆனல் அவர் தம் கருத்தைக் கூறி யிருக்கின்ருரா, அல்லது உண்மையைக் கூறினரா யென அறிய வாய்ப் பில்லாது போயிற்று; ஏ னெனில் இக் காதலர் வரவையும், இவர்கள் மாசாத்துவான் மக்க ளென்பதனையும் யாரும் வெளி யிட வில்லை.

மதுரை நகரி னுள் இக் காதலர் முதனாள் மாலை புகுந்தனர். அதற் கடுத்த நாட் பகலுக்குள் கோவலன் கொலை யுண் டிறந்து விட்டான். இன்ப மாக விருப்போ மென் றெண்ணி வந்த விடத்தில், இக் காதல ரோ ரிரவே யிருந்தனர். வாழ வந்த நகரி லிவர்கள் தம் வாழ்வை யிழக்க

நேர்ந்தது. இறைவன் திரு மணம்செய்து கொண்டதனைக் காணும் பேறு பெற்றது நான் மாடக் கூடல்; அதனால், அது மண மதுரை என்ற சிறப்பைப் பெற்றது. இப் பொழுது, அது கோவலன் கொலையைக் காண நேர்ந்தது; அதனால் எரியவும் நேர்ந்தது.

கொலை யுண்ட கோவலன் யா ரென்று மதுரையி லொருவருக்குந் தெரியாது. கண்ணகியை மட்டும் அவர் களுக்குத் தெரியுமா? எனினும், கணவன் கொலைப் பட்டதனைக் கேட்டு, எஞ்சி யிருந்த சிலம்பை யெடுத்துக் கொண்டு, அவ னுடலைக் காணச் சென்ற கண்ணகியைக் கண்டா ரனைவருங் கண் கலங்கினர். அவள் கூறியவற் றைக் கேட்டுக் கருத் தழிந்தனர். அவளுக்கு நேர்ந்த துன்பம் தமக்கு நேர்ந்து விட்டதனைப் போல் கருதினர்.

**அல்லலுற்று ஆற்றாது அழுவாளைக் கண்டேங்கி**
**மல்லன் மதுரையார் எல்லாருந் தா மயங்கி.**

மல்லன் மதுரை என்றது, அந் நகரத்தி லுள்ளார் எக் காலத்து மெக் குறையையுங் கண் டறியாதவ ரென்ப தனைக் குறிப் பிடும். ஆகவே, துயர மென்பது எத் தகைய தென அறியும் வாய்ப்பினைப் பெருமலேயே அந் நகர மக்கள் வாழ்ந் திருந்தன ரென் றறியலாம். அழத் தெரியாமல் வாழ்ந்தவர், கண்ணகியைக் கண்டு கலங்கி யழுதனர். அந் நகரை யடைந்து கண்ணகியும் வளம் பெற்றவ ளாகி விட்டாள். களையாத துன்பத்தை அவ ளுக்குத் தந்தது அந் நகரே யன்றோ? இல்லை; இல்லை. அவள் மதுரை மக்களின் அன் பாகிய வளமையைப் பெற்றுச் சிறந்தாள்.

அவள் பிறந்து வளர்ந்த புகார் நகரத்தவ ரவளுடைய மகிழ்ச்சியைக் கண்டு தாமும் மகிழ்ந்தனர். அது எளிது; எவரும் செய்யக் கூடியது. ஆனால், அவ ளல்லலைக் கண்டு, தம் மியல்பை யிழந்து, துன்பப் பட்ட மதுரை மக்க ளுடைய செயல் செயற் கரிது. அவர்கள் கண்ணகியி

ணிடத்துக் கொண்ட வன்பு, புகார் நகரத்தவர் கொண்டிருந்ததனை விடப் பன் மடங்கு பெரிது. ஏனெனில் புகார் நகரத்தவர்க்கு அவள் உடன் பிறந்தாள். ஆனல் அவள் மதுரை மக்களுக்கு முன் னறியாதவளே யன்றோ? எனவே, இவர்க ளன்பைப் பெற்றவள் வளமை மிக்கவளே யென்பதி லைய மில்லை.

கணவ னுடலைக் காணச் சென்ற கண்ணகியைக் கண்டவர், மதுரை மா நகரில் வாழ்ந்திருந்தார்களுள் ஒரு சில ராகவே இருத்தல் வேண்டு மன்றோ? இருந்தும், மதுரையா ரெல்லாரும் மயங்கின ரென அடிகள் கூறியிருக்கின்றாரே? அவர் கூற்று உண்மையின் மிகையேயா மென்று தோன்றுகின்ற தல்லவா? இவ் வெண்ணம் நமக் கெழுவ தியல்பே யென்பதை அடிக ளறிவார். ஆகவே, அவ ரிச் செய்தியை மீட்டு மொருமுறை குறிப்பிட் டிருக்கின்றார். மதுரை மக்கள் எல்லாருமே துன்பப் பட்டன ரென்பதனை நிலை நாட்டி யுள்ளார்.

புல்லென் மருள்மாலைப் பூங்கொடியாள் பூசலிட
ஒல்லென் ஒலி படைத்த(து) ஊர்.

கண்ணகியின் பூசலைக் கேட்டு, அவ் வூர் எதிரொலி செய்தது. ஊரார் மட்டு மேன், மதுரை நகரத்து மாளிகைகளும் அவள் பூசலை எதிரொலித்தன. புகார் நகர மக்களைக் குறிப் பிடவும் அடிகள் ஊர் என்றே கூறி யிருப்பதனை நாம் நினைவிற் கொள்ள வேண்டும். இரண்டு நகரங்களையும், முதன் முறை குறிப் பிடும் பொழுது மா நகரென்றும், மல்லன் மதுரை யென்றும் கூறியவர், இரண்டாம் முறை மூதூரென்றும், ஊரென்றும் குறிப் பிட்டிருக்கு மொப்புமையும் கருதத் தக்கது.

மதுரை நகரம் தமிழ் நாட்டின் மிகப் பெரிய நகரமாகவே விளங்கி வந் திருக்கின்றது. புகார் நக ரிருந்த காலத்தில் அது மதுரையினும் பெரி தாக விருந்தது என ஆராய்ச்சி யாளர் கருது கின்றனர். இப் பெரு நகரங்களி

விருந்தவ ரனைவரையும், ஒருவரையும் விடாமல் நம்மைக் கருதிக் கொள்ளச் செய்ய அடிக ளோர் உத்தியைக் கையாண் டுள்ளார். அவற்றின் பெருமை தோன்ற முதலிற் குறிப் பிட்ட பின்னர், அந் நகர்களி லிருந்தா ரனைவரும் ஒரே தன்மையான மன நிலையை யுடையவ ராக விருந்தன ரென்பதைக் கவிஞர் குறிப் பிடுகின்றார்.

நகரம் என்பது தெருவுக் கொரு புதுமை யுடையதாகத் தோன்றும்; எனவே, அது மக்கள் நடை, உடை, தோற்றம், நோக்கம் என்பவற்றுள் மிக்க வேறு பாடுகளைக் கொண்டு விளங்கும் எனத் தெளியலாம். ஊர் என்ற சொல் ஒரு சில குடி யிருப்புகளைக் கொண்ட சிற் றூரையும் குறிப் பிடும். அத் தகைய சிற் றூரில் வேறு பாடு எதனையும் காண முடியாது. புகாரும், மதுரையும் பெரியன வேனும், அவை துன்பத்தில் ஆழ்ந் திருந்த காலத்தில் ஒரு சிற் றூரினைப் போலவே, ஒரே தன்மையான தோற்றமுடையன வாகக் காட்சி யளித்தன.

மக்க ளாட்சி நடை பெறு மிடங்களில், அரசினரைப் பழிப்பது மக்க ளுடைய உரிமை யென்று கருதப் படுகின்றது; அங்குங் கூட இவ் வுரிமைக்கு வரம் புண்டு. ஆனல், தனியா ராட்சி நடக்கு மிடத்தில் மக்களுக் கிவ் வரம்புக் குட் பட்ட வுரிமையு மிருக்காது. இருந்தும், மதுரை மக்க ளனைவரும் தம் மரசனை, வேற்று நாட்டுப் பெண் ணொருத்தி கூறுவதனைக் கேட்டுப் பழி தூற்றினர்; ஆற்றவுந் தூற்றினர். வன் பழி கூறி யாற்றவுந் தூற்றினர். கண்ணகியி னவல நிலை மதுரை மக்களுக்குத் துன்பத்தோடு துணிவையுந் தந் திருக்கின்றது.

கண்ணகியின் மகிழ்ச்சி புகார் நகர மக்களின் மன வெழுச்சி யாக உருப் பெற்று வெளிப் பட்டது. அது அந் நகரத்தையே மகிழ்ச்சிக் கட லுள் மூழ் கடித்தது. அவளுடைய துயரம் மதுரை மக்க ளுடைய துன்ப மாக வுருப் பெற்று வெளிப் படுகின்றது. இது இந் நகரத்தையே

துன்பக் கடலுள் ஆழ்த்தி யிருக்கக் காண்கின்றோம். இந் நகரத்தவ ரனைவரும், கண்ணகியை யொத்த மன நிலையை யுடையவ ராக விருக்கின்றனர். இல்லையேல், அவள் தம் நகரத்தை எரித்ததனை அவர்கள் பொறுத்துக் கொண் டிருப்பார்களா? பொங் கெரி வானவனை வர வேற்றுப் பெரு மகிழ் வெய்தி யிருப்பார்களா?

புகார் நகர மக்க ளுடைய மன மகிழ்ச்சி யாக முகிழ்த்த காப்பியம், இப் பொழுது மதுரை மக்கள் மனத் தையும் முற்றிலும் பற்றிக் கொண் டிருக்கக் காண்கின் றோம். இதனால் கண்ணகியின் வாழ்க்கை மக்க ளுடைய மனத்தைப் பிணைக்கும் பான்மை மிக்கது என்பது தெரி கின்றது. அவ ளுடைய கதையை யறிவது அன்றைய மக்கள் மன நிலையை யறிவதற் கொப் பாகும். அடிகள் ஊன்றிய விதையின் முளை வீரியத் துடன் எழுகின்றது. அது மேலும் எப்படி மாறித் தோன்றுமோ?

புகார் நகரத்தவர்க்குக் கண்ணகி யுடன் பிறந்தவள்; எனவே, அவள் அவர்க ளுள் ஒருத்தி யாக விருந்தாள். மதுரை மக்களுக்குக் கண்ணகி விருந்தினள்; எனவே, அவள் அவர்க ளிடையே ஒருத்தி யாக விளங்கினாள். ஆனால் வஞ்சி வேந்தனுக்கு அவ ளெவ் வகையில் உற வின ளாவாள்? அவன் அவளைக் கண்டதே யில்லையே! அவ னல்லவோ அடிகளை இக் காப்பியத்தை இயற்றத் தூண் டும் வாய்ப்பினை அளித்தான்? கண்ணகியைக் கண்டவரே யல்லால், அவளைப் பற்றிக் கேட்டவரும் அவள் வயத்த ராகி விடுகின்றனரே!

கண்ணகியின் மகிழ்ச்சி புகார் மக்களை மகிழச் செய் தது. அவள் துயரம் மதுரை மக்களைத் துன்ப மடையச் செய்தது. அவள் மனத் திண்மையும், உறுதியும் வஞ்சி வேந்தனைப் பற்றிக் கொண்டன. அவனை இமயஞ் செல்லச் செய்தன; கங்கைக் கரையில் பெரு வெற்றி பெறச் செய் தன; மா நில மன்னருள் சிறந்தோ னாக மாற்றி விட்டன.

கருங்கக் கூறின், கண்ணகியே அவள் வாழ்ந்த நாட்களின் உருவாக விளங்குகின்றாள். அடிகள் கூற முன் வந்துள்ள கதையின் பெருமைக கோ செல்லை கற்பிககக் கூடுமோ?

கண்ணகியின் வாழ்க்கை மக்கள் மனத்தைப் பெரிதும் பற்றிக் கொண்டது. அவ ளடைந்த ஆன்மிக வளர்ச்சி யடிகளைப் பெரிதும் கவர்ந்து கொண்டது அவளுக்குப் பெருமையைத் தர முயன்ற செங் குட்டுவன், அவளைப் போலவே தானும் உயர்ந்தான். ஆகவே, அவ ளுடைய கதையைக் கேட்பவரும், அவ ளடைந்த நிலையை யடைய ஆவ லுறக் கூடும் என்பதனை யடிகள் உணர்ந்தார். அதனை உலகினர்க்குத் தெரிவிக்க, ஒரு காப்பிய மாய் மாற்றித் தந் திருக்கின்றார். அடிகளுடைய நோக்கத்தை நிறை வேற்றி வைப்பது நம் முடைய பொறுப் பாகும்.

செங்குட்டுவன் கோடை யின் வெப்பந் தாங்காமல், மனைவி யுடன் வஞ்சியை நீங்கி, மலை வளம் காண வந்தான். வந்த விடத்தில், நெடு வேள் குன்றத்தி லிருந்த குறவர் தம் மக்கள் நேரிற் கண்ட வியக்கத் தக்க நிகழ்ச்சியை விவரிக்கக் கேட்டான். அவர்கள் கூறியதனைக் கொள்ளுவதா, கூடாதா என்று தெளிய மாட்டாமல் தவித்த அரசனுக்குச் சாத்தனார் தாம் மதுரையிற் கண்டவற்றைத் தெரிவித்தார். குறவர் கூறியவை உண்மையாகவே யிருக்கும் என்ற உறுதியைத் தோற்றுவித்தார். இவ் விவரங்களைக் கேட்ட செங்குட்டுவன் விம்மித மெய்தினான்.

கண்ணகியைப் போலவே, பாண்டியன் தேவியும் செயற் கரிய செய்தவ ளாக விருந்ததனைச் சாத்தனார் விவரித்தார். சேரனுக்கு இவ் விரு மகளிரில் எவர் உயர்ந்தார் எனத் தெளியக் கூட வில்லை. குறவர் கூறியவற்றைக் கேட்டு மயங்கி யிருந்ததனைத் தெளிவித்த சாத்தனார், பாண்டி மா தேவியின் செய்தியையும் கூறி மீண்டும்

மயங்க வைத்து விட்டார். எனவே, அவன் மயக்கத்தைத் தீர்த்துக் கொள்ளத் தன் மனைவியி னுதவியை நாடினான்.

> உயிருடன் சென்ற வொருமகள் தன்னினும்
> செயிருடன் வந்தவிச் சேயிழை தன்னினும்
> நன்னுதல் வியக்கும் நலத்தோர் யாரென

கேட்டான்.

செங்குட்டுவன் நன்னுதல் என்றது விளி யன்று: அரும் பத வுரைகாரர் கொண் டுள்ளதனைப் போல் முன்னிலைப் பெய ரன்று. அது பெண்க ளனைவரையும் குறிப்பிட வந்த பொதுப் பெய ராம். ஏ னெனில் செங்குட்டுவன், இவ் விரு பெண்களுள், பெண் ணினம் வியக்கக் கூடியவள் யார் என் றறியவே விரும்பினான். அரசன் கேட்டதன் குறிப்பினை யுணர்ந்துகொண்டே அரசி விடையளித் திருக்கின்றாள். பெண்கள், இவ் விரு மகளிரையுமே வியப்பர். இதனைத் தெரிந்து கொள்ள அரசன் தன் மனைவியைக் கேட்பானேன்?

அரசன், 'நன்னுதல் வியக்கும் நலத்தோர் யார்' எனக் கேட்டா னெனினும், அவன் அறிய விரும்பியது மகளிர் யாரைப் போற்றுவார் என்பதே யாம். இளங்கோ வேண்மாள் பாண்டியன் தேவி வியத்தற் குரியவள், கண்ணகி தொழற் குரியவள் என்று தெரிவித்தாள். அவள் கருத்தை அரசனும், அவ னுட னிருந்த அமைச்சர், புலவ ரென்பாரும் ஏற்றுக் கொண்டனர். அவர்கள் கண்ணகிக்குக் கோயில் கட்ட வேண்டும் என்று செய்த முடிவு வஞ்சி மக்கள் சார் பாகவும் செய்யப் பெற்றதே யாம். இதனை நாமெளிதில் புலப் படுத்திக் கொள்ளலா மென்றே யடிகள் தனியே குறிப் பிட் டிருக்க வில்லை.

தமி ழகத்தின் முப் பெருந் தலை நகரங்களி லிருந்த மக்க ளனைவ ருடைய உள்ளங்களையும் கண்ணகியின் வாழ்க்கை பற்றிக் கொண் டிருந்தது என்பதனை யடிகள்

விவர மாகக் கூறி யுள்ளார். அது, அன்றைய தமிழ் மக்க ளனைவருடைய உள்ளங்களையும் பற்றிக் கொண் டிருந்தது என்பதனைக் குறிப் பாகப் புலப் படுத்தி யுள் ளார். எல்லா ஊர்களையும் அவர் தம் நூலில் விவரிக்கக் கூடுமா? கண்ணகியின் வாழ்க்கை தமிழ் மக்களையும், மா நில மன்னரையும் எவ்வாறு பற்றிக் கொண் டிருந்தது என் பதனை விளக்கிக் காட்டுவதே வஞ்சிக் காண்டத்தின் நோக்க மாகும்.

மதுரைக் காண்டத்தி னிறுதியில் வானவர் வந்து, கண்ணகியைத் தம் முலகுக்கு அழைத்துச் சென்றதனை அடிகள் கூறி முடித்து விட்டார். இதனோடு கண்ணகி யின் உலக வாழ்க்கை முடிகின்றது. அவ ளுடைய சரி தையை இயற்ற முன் வந்ததே யெனின், இந் நூலும் இக் காண்டத் தோடு முடிவு பெற்று விட் டிருக்கும். ஆனால், அடிகள் காப்பிய மொன்றினை யியற்றித் தர வல்லவா திட்ட மிட்டிருக்கின்றார்! எனவே, மேலு மொரு காண் டத்தை யவர் யருளி யிருக்கின்றார். ஆகவே, சிலப் பதி காரம் வஞ்சிக் காண்டத்தாலேயே காப்பியம் என்ற பெய ருக் குரிமை யுடைய தாகின்றது.

கண்ணகி விண் ணுலகு சென்ற தனைக் குன்றக் குரவை மீண்டும் கூறுகின்றது என்று நாம் கருதக் கூடாது. கட்டுரை காதை அதனைக் கூறிற்று; குன்றக் குரவை யதனைக் காட்டுகின்றது. மதுரைக் காண்ட முடி விற் கூறப் படுவது கதை முடிவாம். வஞ்சிக் காண்டத் தொடக்கத்தில் கூறப் படுவது அதன் விளைவாம். எனவே, இது கூறியது கூற லாகாது. மதுரைக் காண்ட முடிவில் விவரிப்பது செய்தி யறிவிப் பாகும். வஞ்சிக் காண்ட முதலிற் சித்திரிக்கப் பெறுவது நிகழ்ச்சிச் சித்திர மாம். ஆகவே, அமைப்பு, பயன் என்ற இரு துறைகளாலும் மதுரைக் காண்ட முடிவும், வஞ்சிக் காண்டத் தொடக்க மும் வேறுபட் டிருக்கின்றன.

'இனி யனைத்தும் அமைதியே' என்ற சொற்களோடு ஹாம்லத்தின் வாழ்க்கை முடிவு பெற்றது. கண்ணகியின் இறுதி வார்த்தைகளும் அத் தகையனவே. அது வரை தான் நடத்திய வாழ்க்கை யனைத்தும் வினையின் விளை யாட்டே யாகும் என்று குறப் பெண்களுக்குக் கூறி விட்டு, அவள் வான ஊர்தியி லேறிச் சென்றாள். ஆயின் அவ ளுடைய வாழ்க்கை யென்ப தெதுவும் இல்லையா? உண்டு; அதனை விவரிக்கவே அடிகள் சிலப் பதிகாரத்தை அருளி யிருக்கின்றார். அவ ளுடைய வாழ்க்கை—உண்மை வாழ்க்கை—வஞ்சிக் காண்ட முதலில் தொடங்குகின்றது.

'இள வரசே, சென்று வருக! நின்னைச் சாந்தி யடையச் செய்யக் கூட்டங் கூட்டமாக தேவதைகள் கீத மிசைக் கட்டும்' என்ற சொற்களோடு ஹாம்லத் நாட கத்தை ஷேக்ஸ்பியர் முடித்துள்ளார். அடிகள் இயற்றி யிருப்பது காப்பிய மன்றோ? தேவதைகள் கண்ணகியின் ஆவியை அழைத்துச் சென்றதனைக் காட்டுவதனோடு அவர் தம் நூலை முடிக்க வில்லை. அதனைப் பார்த் திருந்தவர் பல ருண்டே! அவர்கள் என்ன செய்தனர்? அவர்கள் தாம் கண்டதனைக் கூறக் கேட்டவரு முண்டே! அவர்கள் என்ன செய்தனர்? இவ் விவரங்களைக் கூறுவதே வஞ்சிக் காண்டத்தின் நோக்க மாகும்.

ஷேக்ஸ்பியரின், நான்கு அவல நாடகங்களின் தலை வர்க ளுள், ஹாம்லத் ஒருவனே கடமையைச் செய்ய வாழ்ந்தவ னவான்; அதனைச் செய்து முடிக்கத் தன் உடலைக் கொடுத்தவனும் அவ னொருவனே யாம். பிற மூன்று தலைவரும், வாழ்க்கையை மகிழ்ச்சி யுடைய தாகக் கழிக்க விரும்பித் துன்பத்தைத் தேடிக் கொண்டு மாண்ட னர். வாழ்க்கை துய்த்து மகிழ்வதற் காகத் தோன்றிய தன்று எனக் கருதி யிருந்தவன் ஹாம்லத் ஒருவனே யாத லால், ஷேக்ஸ்பியர் அவன் ஆவியைத் தேவ ருலகுக்குச் செல்லுந் தகுதி யுடைய தாகக் கருதி யிருக்கின்றார்.

கண்ணகியும் வாழ்க்கை மகிழ்ச்சி யுடைய தாகக் கழிப பதற்குத் தோன்றிய தன்று எனக் கண்டு கொண்டவள். கோவலன் அதற்கு மாறாக மகிழ்ச்சி யுடையவனாக விருக் கவே விருப்பங் கொண்டவன். இவ் வேறு பாடு காரண மாகக் கண்ணகி துன்பப் பட நேர்ந்தது, களையாத துன் பத்தை யுற்றா ளெனினும், அதனைத் தாளாது மடிந்து விடாமல், அவள் தன் கடமையை நிறை வேற்றுதலில் கவனத்தைச் செலுத்தினாள். எனவே ஷேக்ஸ்பியர் கருத் திற் கேற்பவும், இவள் தேவ ருலகுக்குச் செல்லுந் தகுதி மிக்கவளே யாம். இவள் கதையை மதுரைக் காண்டத் தோடு முடிப்பது, அதனைக் கண்டும் நாம் எப் பயனையும் பெற வில்லை எனப் பறை சாற்றுவ தாகும்.

நெடு வேள் குன்றத்துக் குறவர் நம்மைப் போல் படித்து அறிவு பெற்றவ ரல்லர். எனினும் அவர்களும் மக்களே யன்றோ? கண்ணகியின் நிலையை யவர்கள் நன் குணர்ந்து கொண்டனர். அப்பொழுதே அவள் நின்றிருந்த மரத் தடியிலேயே, அவளைத் தெய்வ மாகக் கொண்டு வழிபா டியற்றினர். பூசை செய்து குரவை யாடினர். படிப்போ, நாகரிக முதிர்ச்சியோ யில்லாத குறவர் கண் ணகியின் பெருமையை யுணர்ந்து கொண்டு பாராட்டின ரெனின், ஏனை மக்க ளனைவரும் அவளைப் போற்றி யிருப்ப ரென்பதனை நாமே புலப் படுத்திக் கொள்ளலா மன்றோ? தமிழ் மக்க ளனைவரும் அவளைப் போற்றினர் என்பதனை நமக் குணர்த்தத் தீட்டிய சித்திரமே குன்றக் குரவை யாம்.

அடிகள் ஊன்றிய விதை முளை யாக முகிழ்த்த காலத்தில் சமுதாயக் காப்பிய மாகக் காணப் பட்டது. அது நாற் றாக வளர்ந்த காலத்துத் தமிழ் மக்களின் தேசீயக் காப்பிய மாக (The national life of the Tamil people) விளங்கக் காண்கின்றோம். கருத் தரித்து விளையுங் காலங் களில் அது மேலும் பெருகித் தோன்றும் என்று எதிர் பார்க்கலா மன்றோ?

## 4. கரு

செங்குட்டுவன் பத்தினித் தேவிக்குக் கட்டிய கோயி லின் திறப்பு விழா வன்று, இப் பரத கண்டத்தின் பல நாடுகளி லிருந்தும் அரசர்கள் வந் திருந்தனர். இலங்கையி லிருந்து கயவாகுவும் வந் திருந்தான்.

அருஞ்சிறை நீங்கிய ஆரிய மன்னரும்,
பெருஞ்சிறைக் கோட்டம் பிரிந்த மன்னரும்,
குடகக் கொங்கரும், மாளுவ வேந்தரும்,
கடல் சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும்

அத் திரு விழாவில் சேர னுடைய அழைப்பிற் கிணங்கிக் கலந்து கொண்டவ ராவர். இவர்க ளல்லாமல் நூற்றுவர் கன்னர், சோழன், பாண்டியன் என்ற மூவரும் செங்குட்டுவனுக்குத் துணை யாக உட னிருந்து அவ் விழாவினை முன் னின்று நடத்தித் தந்தனர். ஆகவே, இம் மூவ ருடைய பெயர்களை அடிகள் குறிப் பிடாமற் சென் றுள்ளார்.

அருஞ் சிறை நீங்கிய ஆரிய மன்னர் என்பார் கனக விசயர் என்ற இருவரு மாவார். இவர்கள் புதி தாகச் சிறைப் படுத்தப் பெற்றவர். எனவே, சிறை யிருத்தல் பொறுத்தற் கரியது என்பதனை இவர்கள் துய்த்துணர்ந்தவ ராவார்கள். ஆதலால், இவர்களை அருஞ் சிறை நீங்கியவர் என்று அடிகள் குறிப் பிட்டுள்ளார். பெருஞ் சிறைக் கோட்டம் பிரிந்த மன்னர் என்பார், வஞ்சியில் நெடுங் கால மாகச் சிறை யிருந்த அரச ராவார். இவர்கள் சிறையைக் கோட்ட மாகவே கருதத் தலைப் பட்டு விட் டனர். எனவே இவர்களைப் பெருஞ் சிறைக் கோட்டம் பிரிந்தவர் என்று அடிகள் குறிப் பிட் டுள்ளார்.

குடகக் கொங்கர், மாளுவ வேந்தர், கயவாகு என் பவர் செங்குட்டுவ னுடைய அழைப் பினைப் பெற்று இவ் விழாவிற் பங்கு கொள்வதற் கென்றே வஞ்சிக்கு வந்த னர். இவர்க ளுள் குடகக் கொங்கர் மாளுவ வேந்தர்

என்ற இரு திறத்தாரையும் அடிகள் அர் விகுதி தந்து குறிப் பிட் டிருப்பது கவனிக்கத் தக்கது. அது இவர்கள் பலர் என்றோ, அல்லது பலர் சார் பாக வந்தவர் என்றோ குறிப் பிடும் ஆற்ற லுடையது. அடிகள் காலத்தில் அர் விகுதி மரியாதைப் பன்மையைக் (Honor ific plural) குறிப் பிடப் பயன் பட வில்லை. பலர் பால் விகுதி யாகவே வழங்கி வந்தது.

அக் காலத்தில் சின்னஞ் சிறு நாடுகளின் தலைவர் களும் தம்மை யரசர்க ளாக மதித்துக் கொண் டிருந்தனர். பிறரை அவ்வாறு மதித்துப் போற்றும் வண்ணமும் செய்து வந்தனர். எனவே, அரசரின் எண்ணிக்கை பெருகி யிருந்தது. இல்லையேல், கங்கையில் தன் தாயை நீ ராட்டச் சென்ற செங்குட்டுவன் ஆரிய வரசர் ஈ ரைஞ் ஞூற்றுவ ருடன் போர் செய்தா னென்பது யெப்படிப் பொருந்தும். வில்லவன் கோதையும், அழும்பில் வேளும் செங்குட்டுவ னுடைய அமைச்சர்களே யெனினும், தம் முரிமையில் அவர்களும் அரச ராவார். அவர்க ளுடைய பெயர்களே அவர் நிலையைக் காட்டுகின்றன.

அரசரைக் குறிப் பிடுங் காலத்தில் அடிகள் அன் விகுதியையே எங்கும் பயன் படுத்தி யிருக்கின்றார். தம் மூத்தோனையும், கயவாகுவையும் அவர் அன் விகுதி தந்தே அழைக்கின்றார். கனகனும், விசயனும் எனக் கூறுபவர், அருஞ் சிறை நீங்கிய ஆரிய மன்னர் என்ற தனைக் கொண்டே, அவர் அர் விகுதியைப் பலர் பால் விகுதியாகவே பயன் படுத்துகின்றார் என்பதனைத் தெரிந்து கொள்ளலாம். ஒருவனைக் குறிப் பிட அவர் அர் விகுதியைக் கை யாண்டால், அப் பொழுது அவனைப் பலர் சார் பாக விருப்பவன் என்பதனை அறிந்து கொள்ள லாம்.

செங்கோல் தென்னவர் காக்கும் நா டென
எங்கணும் போகிய இசையோ பெரிதே!

இங்குத் தென்னவர் என்பது எல்லாப் பாண்டிய அரசர்களையும் குறிப் பிடப் பயன் பட் டிருக்கின்றது.

தென்னவன் கொற்றம் சிதைந்தது இதுவென் கொல். இது அன்று ஆட்சியி லிருந்த பாண்டியனை மட்டுமே குறிப் பிடும். 'செங் கோல் வளைய, உயிர் வாழார் பாண்டியர்' என்பதும் இவ் வழக்கை வற் புறுத்தும். சேரன் இவ் வோ ரரசன் செயலைப் பாண்டியர் பண்பாகக் கருதிக் கூறிய சொற்கள் இவை யாகும்.

செங்குட்டுவன் அழைப்பிற் கிணங்கி வஞ்சிக்கு வந்த வேந்தர்க ளுள் கயவாகு ஒருவனே அவ் விருதி பெறுஞ் சிறப் புடையவ னாகவிருக்கின்றான். எனவே அவன் தனக் காக மட்டும் வந்தவனே என்பது தெரி கின்றது. பிற அரசர் அனைவரும் அவ் விருதி பெறுவதால் அவர்கள் பிற அரசர் சார் பாகவும் இவ் விழாவிற் பங்கு பெற வந்தவ ராவார் எனத் துணியலாம். இவ்வாறு கொள்ளா விடின், ஒரு புதிய நெறியை வகுத்து, அதனை அசோகனைப் போலப் பரப்பிய சேரன், மூன்று வேந்த ருக்கு மட்டுமே அழைப்பு அனுப்பின னென்றோ, பிற ரெவரும் அவ னழைப்பை ஏற்றுக் கொள்ள வில்லை யென்றோ கருத வேண்டி நேரும்.

கனக விசயரைத் தலைவ ராகக் கொண்டு சேரனை எதிர்த்த அரசர் பதின்ம ராவார். ஆகவே, அவர்களை மற்ற எண்மர் சார் பாகவும் இவ் விழாவில் கலந்து கொண்டவ ராக ஏற்றுக் கொள்ளலாம். இப் பதின் மரும், கங்கைக் கரைக்கும் இமய மலைக்கும் இடையே யுள்ள நாடுகளின் தலைவ ராவார். எனவே, இவர்க ளாட்சி மேற்கே பஞ்சாலத்தி லிருந்து கிழக்கே அஸ்ஸாம் வரை பரவி யிருந்தது எனக் கொள்ளலாம். கனக விசய ரைக் குறிப் பிட் டிருப்பதனால், அடிகள் கங்கை நதிக்கு வடக் கே யுள்ள நாடுக ளனைத்தையும் குறிப் பிட் டிருக் கின்றார்.

மாளுவ வேந்தர் என்பார் இக்காலத்து கூர்ஜஜரம். இரசபுதனம் என்ற பகுதிகளை யாண்ட அரசர் அல்லது அவர்கள் சார்பாக வந்தவ ராவார். குடகக் கொங்கர் என்பார் சேர நாட்டுக்கு வடக்கே யுள்ள கன்னட மாராட்டிய நாடுகளை யாண்ட அரச ராவார். இவ்விரு திறத்தாரைக் குறிப் பிட் டிருப்பதனால், அடிகள் இக் கண்டத்தின் மேற்குக் கடற்கரை யோரமாக உள்ள நாடுக ளனைத்தையும் குறிப் பிட் டிருக்கின்றார். சேர நாட்டி லிருந்து வடக்கே பாஞ்சாலம் வரை மேற்குப் பகுதி நாடுகளின் அரசர் சார் பாக வந்தவர் மாளுவ வேந்தரும், கொங்கரு மாவார்.

இனி, இக் கண்டத்தி லெஞ்சி யுள்ள பகுதி தமிழகமும், அதற்கும் கங்கைக்கும் இடையே யிருக்கும் பெரும் பரப்பு மாகும். இப் பெரும் பரப்பின் தலைவர் நூற்றுவர் கன்ன ராவார். தமி ழகத்தின் வேந்தர் மூவரும், இவரும், இவ் விழாவினை முன் னின்று நடத்தியவர்க ளாம். கண்ணகி கோயிலின் திறப்பு விழாவிற்கு வந் திருந்த அரசரை, அவ ரவர் நாட்டு மக்கள் சார் பாக வந்தவ ரெனக் கொள்ளின், இக் கண்டத்தின் அனைத்து மக்களும், பத்தினித் தேவிக்கு அஞ்சலி செய்தமை தெரிகின்றது. இதனை யடுத் துள்ள இலங்கை மக்கள் சார் பாகக் கயவாகு வந் திருந்தான்.

முடிமன்னர் மூவருங் காத்தோம்பும் தெய்வம்
வடபேர் இமய மலையிற் பிறந்து
கடுவரல் கங்கைப் புனலாடிப் போந்த
தொடிவளைத் தோளிக்குத் தோழிநான் கண்டீர்!

கண்ணகிக்குக் கோயில் கட்டச் செங்குட்டுவன் முடிவு செய்த வுடன், வில்லவன் கோதை இத்திருப்பணியைப் பிற தமி ழரசர் சார் பாகவுமே நடத்த வேண்டும் எனத் தெரிவித் துள்ளான். செங்குட்டுவன் இமயம் நோக்கிப் புறப் பட்ட பின், சோழ, பாண் டிய ருடைய திறைப் பொருள் நீல கிரியி லிருக் குங் காலத்தில் வந்து

சேர்ந்தது என்று குறிப் பிட் டிருப்பதால், அவன் வட புலப் பயணத்துக்கு ஆக்க மளிக்கும் நோக்கத் துடன் இரு அரசரும் அவற்றை யனுப்பி வைத்தனர் எனக் கொள்ள லாம். அவர்க ளிருவரும் சேர னிடம் தோற்றவ ராகை யால், அடிகள் அவர்க ளனுப்பிய பரிசுப் பொருளைத் திறை யெனக் கூறி யுள்ளார்.

நீல கிரியி லரசன் இருக்குங் காலத்திலேயே, நூற்று வர் கன்ன ரனுப்பி வைத்த தூதுவன் வந்து, அவனைக் கண்டான். பத்தினியின் படிமஞ் செய்யத் தம் மரசரே இமயத்தி லிருந்து கல் லெடுத்து வந்து, கங்கையில் நீ ராட்டி, வஞ்சியிற் கொண்டு சேர்க்க விரும்புகின்றன ரென்று அவன் தெரிவித்தான். இதனால் நூற்றுவர் கன் னர் இத் திருப் பணியில் விரும்பிப் பங்கு பெற்றனர் என் பது தெரிகின்றது. அவர்கள் சேரன் கங்கையைக் கடக்க வும், வடவரை வெற்றி கொள்ளவும் வேண்டிய உதவி களைப் புரிந்தனர். ஆகவே, சோழ, பாண்டியரைப் போலவே, அவர்களும் சேர னோடு சேர்ந்து இத் திரு விழா வினை முன் னின்று நடத்தியவ ராகக் கருதத் தக்கவ ராவார்.

பத்தினிக் கோயிலில் வழிபாடு முடிந்ததும், வந் திருந்த மன்னர் தத்தம் நாட்டில் நங்கைக்குக் கோயில் கட்டுவ தாகக் கூறினர். அங்கும் தேவி வந்து அருளுமாறு வேண்டிக் கொண்டனர். அவ் வாறே தெய்வம் வர மளித்த தாகத் தெரிகின்றது. இவர்க ளுள் மாளுவ வேந் தர் கட்டிய கோயி லொன்று இன்று மிருப்பதாகத் தெரி கின்றது. அது இப் பொழுது அருகப் பள்ளி யாக மாறி யிருக்கின்ற தேனும், பதை்தினி கோயில் என்ற பெய ருடன் விளங்கி வருகின்ற தாம். இவ் விவரத்தைத் தெரிந்து கூறி யிருப்பவர் திரு. ஆரா வமுத னவார். (The Cauvery, the Mukhari and the Sangam Age)

பால குமர னுடைய மக்க ளாகிய கனக விசயர் நூற்றுவர் கன்னருக்கு மருக ராவார் என்ற விவரம் மச்ச

புராணத்தால் தெரிகின்றதென திரு. இராமச் சந்திர தீக்ஷதர் தம் சிலப் பதிகார ஆங்கில மொழி பெயர்ப்பின் முன்னுரையில் தெரிவித்துள்ளார். இவற்றால் அடிகள் வஞ்சிக் காண்டத்தில் கூறி யிருப்பவைகள் சரித்திரச் செய்திக ளாகவு மிருத்தலை யறியலாம். இலங்கையில் தொழப் பட்டு வந்த பத்தினிச் சிலை யொன்று, இன்றும் இலண்டன் மா நகரப் பொருட் காட்சிச் சாலையி லிருக்கின்றதாம்.

அடிகள் ஊன்றிய விதை சமுதாயக் காப்பிய மாக முளைத்து, தமிழ் மக்களின் தேசீயக் காப்பிய மாக வளர்ந்து, கருத் தரிக்குங் காலத்தில் பரத கண்டத்தின் தேசீயக் காப்பியம் என்று கூறத் தக்க தகுதியினைப் பெறு கின்றது. விளைவுக் காலத்தில் இது உல களாவிய பெருங் காப்பிய மாக விளங்கும் என்பதனை இனி உறுதி யுடன் எதிர் பார்க்கலா மன்றோ?

## 5 விளைவு

நாம் எங் கிருந்து வந்தோம்? ஏன் வந்தோம்? எங்குச் செல்கின்றோம்? இவை எளிதில் விடை காண வியலாத கேள்விக ளாம். எனினும், இவற்றுக்கு விடை கண்ட வரும் பல ருண்டே! ஒவ்வொருவரும் தமக்குத் தாமே இக் கேள்விகளுக்கு விடையைக் காண்பதே மெய் யறிவு பெறுத லாகும். கண்டவர் கூறுவன, காணாதவரை ஊக்க உதவுமே யல்லால், அவர்களுடைய அறி வாகாது. எளிதில் விடை காண முடியாதன வெனின், இவைகளை ஆராய்வானேன்? அவை விடை காண மாட்டாதவை போல் தோன்றுவதே காரண மாம்.

இக் கேள்விகளுக்கு விடை காண வேண்டும் என்ற ஆவல் எல்லாருக்கு முண்டு. காலம், தேயம், சமயம் முதலிய வேறுபாடுகளைக் கருதாமல், எல்லா மக்களாலும் அறிந்து கொள்ளப் படத் தக்க பே ருண்மையையே இச்

கேள்விகள் விடை யாகக் கொண் டுள்ளன எனத் தத்துவ
நூல்கள் கூறுகின்றன. இவற்றுக்கு விடை காண மக்
களைத் தூண்டுவன அவை. இத் தத்துவ நூல்கள் கூறு
வனவற்றை நாம் புறக் கணிப்பதற் கில்லை. ஏ னெனில்
உலகத்துப் பெரு நூல்கள் இவற்றுள் ஏதேனு மொன்
றுக்கு விடை கூறுவன வாகவே அமைந் திருக்கக் காண்
கின்றோம்.

ஜான் மில்தன் (John Milton) என்பார் ஆங்கிலக்
கவிஞருள் சிறப்பு மிக்கவர். அவர் இயற்றியுள்ள துறக்க
நீக்கம் (Paradise Lost) என்ற பெரு நூல், உலகத்துப்
பெருங் காப்பியங்களுள் ஒன்றாய் விளங்குகின்றது. அத
னுடைய அமைப்பு முறையையும், பொருளின் பெருமையை
யும் காண, அது உலகத்துக் கலைக் காப்பியங்களுள் சிறந்
தது என்று கருதத் தக்க தாகவும் இருக்கின்றது. நம் சிலப்
பதிகாரத்தை உலகத்துப் பே ரறிஞரை உணர்ந்து
கொள்ள வைத்தோமெனில், இதுவே உலகத்தின் மிகச்
சிறந்த கலைக் காப்பியம் என்று அவர்கள் அனைவரும் ஒப்
புவர், போற்றுவர்.

நாம் எங் கிருந்து வந்தோம், ஏன் வந்தோம் என்ற
கேள்விகளுக்கு மில்தன் தம் நூலில் விடை யளித் துள்
ளார். ஆனால் அவர் விடை பௌராணிக முறையில்
காணப் படுகின்றது. எனினும், அவர் தெரிவித் திருப்பன
வற்றை எந் நாட்டினரும், எச் சமயத்தவரும் ஏற்றுக்
கொள்ளலாம். மனிதனைக் கடவுள் பிறப்பித்தா ரென்றும்,
அவனைத் துன்பங் கலவாத இன்பத்தைத் துய்த் திருக்கவே
பிறப்பித்தா ரென்றும், தன் னுடைய நிலையின் இயல்பினை
யுணராமல், தன் செயலாலேயே மனிதன் அதனை நழுவ
விட்டு விட்டா னென்றும், தன் னிலையி லிருப்பதனை
விட்டு, அறிவைத் தேடிக் கொள்ள விரும்பி அழிவினைத்
தேடிக் கொண்டு விட்டா னென்றும், அதனால் துறக்க
வாழ்வினை இழக்க நேர்ந்தா னென்றும், பாவமும், சாக்

காடும் பற்றிக் கொள்ளும் நிலையினை யடைந்தா னென்றும் மில்தன் விளக்கிக் காட்டி யிருக்கின்றார்.

துறக்க நீக்கத்திற் காணப் படும் அடிப் படைக் கருத்துக்களைத் தெரிந்து கொண்டோம். அவை எச் சமயத்தவராலும் ஏற்றுக் கொள்ளத் தக்கனவே யாம். அவற்றைத் தத்துவக் கருத் தாக மாற்றிக் கண்டோ மெனின், துறக்க வாழ்வினைப் பெற் றிருத்தலே மனித னியல்பு என்பதும், அவா வினுக்கு இடமளித்த காரணத் தாலேயே அதனை மனிதன் இழக்க நேர்ந்தது என்பதும் விளங்குகின்றன. துறக்க வாழ்வினை இழந்த மனிதன் இவ் வுலகில் சாவினால் பீடிக்கப் பெற்றவனாய்த் துன் புறு கின்றான். ஆகவே, அவாவே துன்பத்துக்கு மூல காரண மாம் என்பது விளங்குகின்றது. அவ் வவாவே உலக வாழ்க்கை யாம் என்பது நம் நாட்டு நல்லறிஞர் கண்ட உண்மை யாகும்.

மனிதன் தான் இழந்துவிட்ட நிலையினை மீண்டும் ஏற்கக் கூடுமா? கூடும் என்பதனை நிலைநாட்டவே மில்தன் துறக்க மீட்சி (Paradise Regained) என்ற நூலையும் அருளி யுள்ளார். துறக்க வாழ்வினை மீண்டும் பெற்று இறவா நிலையை எய்த மனிதன் கடவுளின் அருளை வேண்டிப் பெற வேண்டும். தன் பாவத்தை மன்னித்துப் போக்கி யருளுமாறு பரமனை வேண்டிக் கொள்ள வேண்டும். மில்தன் காட்டி யுள்ள வழிகளும் நமக்குப் புதியவை யல்ல. அவனருளாலே, அவன் தாள் வணங்கி, அழியாப் பதம் பெறுதலை நம்மவரிற் பலர் போற்றி யுள்ளனர்.

மில்தனுடைய நூல் ஓர் உலகளாவிய காப்பியம் (A Universal Epic) என்பதனை நாம் தயங்காமல் ஏற்றுக் கொள்ளலாம், அவர் கூறி யிருப்பன வனைத்தும் நமக்கும் நல்ல வழி காட்டியே யாம். ஆனால் முதன் முதலாக இக் காப்பியத்தை உலகளாவிய நூல் என்று கூறி யிருக்கும் டாக்டர் ஜான்சன், அவருடைய நூலின் அமைப்பையோ,

பொருளையோ கருதி அக் கருத்தைக் கூறியிருக்கவில்லை. மில்தன் விடை யளிக்க எடுத்துக்கொண்ட கேள்விகளுக்கு விடை காண வேண்டுமென்ற விருப்பம் அனைவருக்கும் இயல் பாக விருக்கும் என்பதனை ஆதார மாகக் கொண்டே டாக்டர் ஜான்சன் தம் கருத்தைத் தெரிவித் திருக்கின்றார்.

டாக்டர் ஜான்சன் காட்டி யுள்ள வாதத்தின் நிலையி லேயே நின்று ஆராய்ந்தோ மெனின், துறக்க நீக்கத்தினும் சிலப் பதிகாரம் சிறப்பு கூடியதாக விருப்பதனைக் காண லாம். நாம் இப்பொழுது இந் நில உலகில் உள்ளோம். எங் கிருந்து வந்தோம் என்பதனைக் காட்டிலும் எங்குச் செல்கின்றோம் என்பதனைத் தெரிந்து கொள்ளுவது பய னுடைத் தன்றோ? அடிகள் நாம் செல்லுமிடத்தையும், அதற்கு வழியையுங் காட்டி யுள்ளார். ஆகவே, அவ ருடைய நூல் அனைவ ருடைய உள்ளங்களையும் பெரிதும் கவரும் என்பதனில் ஐயமிருக்க யிடமே யில்லை.

நாம் எங் கிருந்து வந்தோ மென்ற ஆராய்ச்சி யெழக் காரண மென்ன? நாம் இப் பொழுது இருக்குமிடமும் நிலையும் நமக்குப் பிடிக்கா திருப்பதே அவ்வாராய்ச்சி தோன்றக் காரணமாம். நா மிருப்பதனை விட, இருந்தது நல்ல இடமெனில் அதனை மீண்டு மடைய முயலலா மன்றோ? ஆகவே, எங்கிருந்து வந்தோ மென்ற ஆராய்ச்சி நம்மை உயர்த்திக் கொள்ள உதவுவதே யாம். நாம் எங் கிருந்து வந்தோமோ, அவ் விடத்துக்கே மீண்டும் செல்ல முயல வேண்டும் என்பது மில்தன் கருத்து. துறக்கத்தி லிருந்து வந்தோம் என்று அவர் கருதுவதால், அதனை யடையக் கடவுளைத் தொழ வேண்டும் என்று அவர் வற் புறுத்துகின்றார்.

அடிகள் செல்லும் தேஎம் என்பது இறை நிலையாம். அதனை எளிய மக்களுக்குக் கூறுங் காலத்தில், நாம் கடவு ளிட மிருந்து வந்தோம், அவ ரிடமே திரும்பச் செல்கின் றோம் எனக் கூறலாம். ஆகவே எங்கிருந்து வந்தோம்

என்பதற்கும் எங்குச் செல்கின்றேம் என்பதற்கும் விடை யொன்றே யாம். ஆகவே, துறக்க நீக்கமும், சிலப் பதிகாரமும் ஒருண்மையையே புலப் படுத்துகின்றன என்பது தெளிவாகும். அவை வெவ் வேறு நாடுகளிலும், வெவ்வேறு சமயங்களைப் போற்று பவராலும் தோன்றியவை யாகையால் வெளிப் பார்வைக்கு வேறு பட்டனபோல் தோன்றுகின்றன. பொருளளவில் இரு நூல்களும் ஒரு தன்மையன வாம்.

தத்துவக் கருத்தைத் தெளிவித்து உய்யக் கொள்ளும் தகுதியை நோக்க இவ்விரு பெரு நூல்களும் ஒப்புமை யுடையனவே; எனினும், இவற்றைக் கலைக் காப்பியங்க ளாகக் கருதும் காலத்தில் இவை வேறு பட்டனவாய்க் காணப் படுகின்றன. நாம் எங்கிருந்து வந்தோம் என்ற கேள்விக்கு விடை கூறும் துறக்க நீக்கம் நிகழ்ந்ததனை விவரிக்க முன் வருகின்றது. எனவே, அது சரித்திர உண்மையைக் கற்பனையைக் கூட்டி விளக்கிக் காட்டும் நூலாகவே நின்று விடுகின்றது.

கவிதை நிகழப் போவதனைக் கூற வேண்டும். ஆனல் கவிஞனை ஜோதிடம் வல்லவன் எனக் கருதக் கூடாது. என்ன நிகழும் என எதிர்பார்த்துக் கூறுபவனே கவிஞ னுவான். கவிஞனுக்கு உரிமை யுடைய இக் கடமையை அடிகள் நன்கு நிறைவேற்றி யிருக்கின்ருர். அவர் 'நாம் மனித ராக இருக்கின்றேம்; இறைவனுக ஆவோம்' என்று உறுதி தோன்ற எடுத்துக் காட்டுகின்ருர். மில்தன் தம் முடைய துறக்க நீக்கத்தில் தெரிவித்திருப்பன வற்றையும் துறக்க மீட்சியிலேயே கூறி யிருந்தால், அப்பொழுது அவர் நூல் சிலப் பதிகாரத்தை எல்லா வகைகளிலும் ஒத்து நடப்பதாக இருந்திருக்கும்.

நம்மைப்போல் மக்களுள் ஒருத்தியாய் வாழ்க்கையை மகிழ்ச்சியுடன் கழிக்க விரும்பிய கண்ணகி, மகிழ்ச்சி மாறி யதும், மன வுறுதி கொண்டவளாகித் தன் உண்மையை

யுணர்ந்து மக்கள் நிலேயினேக் கடந்து இறை நிலையை எய்திளுள் என்பதனே அடிகள் விளக்கிக் காட்டியுள்ளார். இதளுல் இவர் மக்கட் பரிணும ஆக்கத்தின் முடிவைக் (The end of human evolution) கண்டு கூறியுள்ளார். விஞ் ஞான ஆராய்ச்சியால் எட்டிப் பிடிக்க வியலாத பரிணும நிலேயை அடிகள் புலப் படுத்தி யுள்ளார்.

அடிகள் காட்டி யிருக்கும் பரிணும முடிவினே, இக் காலத்து விஞ்ஞானிகளுள் பேரறிஞரா யிருப்பவர் தயக் கங் காட்டாமல் ஏற்றுக் கொள்ளுவர். முதலில், ஓரறி வுயிர் தோன்றிற்றென்றும், அது படிப் படியாய்ப் பரிணும ஆக்கம் பெற்று வளர்ந்து மனிதனுக முற்றுப் பெற்றிருக்கின்றது என்றும் விஞ்ஞானிகள் கூறுகின் றனர். இதற்கு மேலும், பரிணுமப்படி யொன்றுளதா என்ற ஆராய்ச்சி விஞ்ஞானத்தின் எல்லேக் குட்பட்ட தன்று.

விஞ்ஞான ஆராய்ச்சி மேலும் எதனேயும் அறியக் கூடாத நிலேயை எட்டி விட்டது என்றும், அது முத லிது முடி விது என்று காணக் கூடாத வட்டப் பாதையில் சுற்றிச் சுற்றிச் சுழன்று. அலேந்து கொண்டிருக்கின்றது என்றும் டாக்டர் எட்டிங்க்டன் அவர்கள் (The Nature of the Physical World) கூறியிருக்கின்ருர். ஆகவே, அடிகள் மனித நிலேயைக் கடந்த நிலே யொன்றுண்டு எனக் காட்டி யிருப்பது, விஞ்ஞானக் கண் கொண்டு பார்ப்பவர்களுக் கும் பொருளுடைய தாகவும், பொருந்துவ தாகவும் தோன்றும்.

அடிகள் ஊன்றிய வித்து சமுதாயக் காப்பியமாய் முளேத்து, தமிழ் மக்களின் தேசியக் காப்பியமாய் வளர்ந்து பரத கண்டத்தின் தேசியக் காப்பியமாய்த் தோன்றி, விளேயினேப் பயக்குங் காலத்தில் உலகளாவிய பெருங் காப்பியமாய் விளங்கக் காண்கின்ருேம். தம் நூலின் இவ் வளர்ச்சியை அடிகள் அறிவாரா? ஐயமேன்? அவரே

இதனை வளர்த் திருப்பதனோடு, நம்மை இவ்வாறு அறிந்து கொள்ளவும் தூண்டி யிருக்கின்றாரே!

## 6. துய்த்தல்

சிலப்பதிகாரம் திட்ட மிட்டுத் தீட்டப் பெற்ற, ஒப்புயர் வற்ற வோர் பெருஞ் சித்திர மாகும். எல்லாப் பொருள்களினு மிருந் திலங்குகின்ற உண்மையி னியலைப் புலப் படுத்தும் நோக்கத் துடன் கலையையும், கதையையும் கொண்டு எழுப்பப் பெற்ற எழில் மிக்க திருக்கோயிலே இப் பெருங் காப்பிய மாகும். இத னுடைய தோற்றம் நம்மைத் தடுத்து நிறுத்துகின்றது; அமைப்பு சிந்தனையைத் தூண்டி மகிழ்விக்கின்றது; பொருள் நம்மை ஆட் கொண்டு விடுகின்றது. இத்துணைச் சிறப் பியல்புகளையும் எஞ்சாமற் பெற்று, என்றும் ஒளி குன்றாமல் விளங்கித் தோன்றும் வண்ணம் இதனைச் சமைக்க அடிகள் ஐந் தாண்டுகளுக்கு மேல் சிந்தித் திருக்கின்றார்.

சங்க காலத் திருந்த பெருங் கலைஞர்களைப் போலவே, அடிகளும் கலை வளமும், கருத்துப் பொலிவுஞ் சிறந்து தோன்றும் உயர்ந்த நூலை இயற்றித் தர விருப்பங் கொண்டார். தொல்காப்பியர் இவ்வாறு திட்ட மிட்டுத் தீட்டும் கவிஞர் செயலைப் பாராட்டி யுள்ளார் என்பது மிகை யாகாது. ஏ னெனில் அவர் கவிஞன் நன்கு சிந்தித்த பின்னரே, தான் கூற விரும்புவதனைத் தன் மனத்திற்குள் முதன் முதலில் பொருத்திப் பார்த்துக் கொண்டு, தான் கருதிய வண்ணமே பிறரும் பொருள் கண்டு கொள்ளும் முறையில் கவிதையை யியற்ற வேண்டு மெனத் தெரிவித் துள்ளார்.

**உள்ளுறுத் திதனோடு ஒத்துப் பொருள் முடிகென**
**உள்ளுறுத் திறுவதை உள்ளுறை யுவமம்.**

தொல்காப்பியர் காலத்துத் தோன்றியவை யனைத்தும் சின்னஞ் சிறு பாடல்களே யாம். எனவே, அவர்

உள்ளுறை உவமத்தை நன்கு சிந்தித்துப் பார்த்துப் பொருந்தக் கூற வேண்டும் என்ற அளவோடு நின்றிருக்கின்றார். சிறு பாடல்களுக்கு எழுந்த இவ் விதியையே, அடிகள் தம் பெரு நூலுக்கும் பொருந்துவதாய்க் கொண்டுள்ளார். அதனால், எத் தகைய குறையுங் காண முடியாத முறையில் இக் காப்பியம் இன்றுள்ளது. எனவே, அடிகள் திட்ட மிட்டுத் தீட்டிய சித்திர மிது வெனக் கூறுவது, அவருடைய ஆற்றலையும், பெருமையையும் வியந்து கூறுவதே யாகும்.

அடிகள் பாண்டியன் பெருந்தேவி யிறந்து பட்டதனைக் குறிப் பிடாமலேயே மதுரைக்காண்டத்தை முதன் முதலில் முடித் திருந்தார். அவள் இறந்தது கதைக்கு இன்றி யமையாத செய்தி யல்லவே! ஆனால், காட்சிக் காதை யுள் சாத்தனர் வாயால், 'பெருங் கோப் பெண்டும் ஒருங் குடன் மாய்ந்தனள்' எனக் கூறியது, அவளுக்குப் பெருமையை யளிப்பதனோடு, கண்ணகியின் சிறப்பை எடுத்துக் காட்டுவ தாகவும் அமைந்து விட்டது. இப் பொழுது தேவி துஞ்சியது கதைக் குரிய பொரு ளாக மாறி விட்டது. எனவே, இதனை அதன் நிகழ்ச்சிக் காலத்தும், இடத்தும் குறிப் பிட வேண்டு மென்ற எண்ணம் அவருக்குத் தோன்றிற்று.

அரசர் பெருமான் அடுபோர்ச் செழியன்
வளைகோல் இழுக்கத்(து), உயிராணி கொடுத்தாங்கு
இருநில மடந்தைக்குச் செங்கோல் காட்ட
அரசு கட்டிலில் துஞ்சிய தறியாது,

பாண்டியன் இறந்ததனை அடிகள் குறிப் பிடும் இட மிதுவே யாம். வழக் குரை காதை யிறுதியில் அவன் 'கெடுக என் ஆயுள்' என்று கூறி வீழ்ந்தான்; ஆனால் இறக்க வில்லை. துன்ப மாலையின் தொடக்கத்தில் அவன் உயிர் பிரிந்ததனைக் கண்ணகி குறிப் பிடுகின்றாள். அதற் கடுத்த காதையில் அடிகள் அதனை யவன் பெருமை தோன்ற விவரிக்கின்றார். எனவே, தேவி துஞ்சியதனை எங்குப் புகுத்தக் கூடும்.

அரசன் இறந்த வுடன் தேவியும் பிறந்து விட வில்லை. கண்ணகி கற் பரசிகளின் விவரங்களைக் கூறி விட்டுச் செல்லும் வரையில் அவள் இறக்க வில்லை. எனவே வஞ்சின முரைத்த காதையில், தேவி துஞ்சிய தனைக் குறிப்பிடுவதற் கில்லை. ஆனால் அரசன் இறந்த தனைக் கேட்டு அமைச்சர் முதலியோர் அரண்மனைக்கு வந்த காலத்தில், தேவியும் இறந்து விட் டிருப்பதனைக் கண்டனர். என்வே, அழற் படு காதைத் தொடக்கத் திலேயே அவள் இறந்ததனையும் குறிப் பிட்டு விட வேண் டும். இரு நில மடந்தைக்குச் செங் கோல் காட்ட அரசன் இறந்த தாக வல்லவோ அடிகள் குறிப் பிட் டிருக்கின்றார்!

செங் கோல் காட்ட அரச னிறப்பது மட்டும் போதும். தேவியும் உட னிறக்கத் தேவை யில்லை. எனினும், தேவி யிறந்ததனையும் இவ் வாறு வியக்கத் தக்க முறையில் விவரித்தமை யால், இவ் விரு வியத் தகு செயல்களையும் ஒன்றாய் இணைப்பதும் விரும்பத் தக்க தாகுமன்றோ? ஆகவே அடிகள் அரசன் இறந்ததனைக் குறிப் பிட்ட பகுதியை இடைப் பிளந்து 'புரைதீர் கற்பின் தேவி தன் னுடன்' என்ற அடியைப் புகுத்தி யிருக்கின்றார். காரண காரியங்களாக அமைதியும் இரண் டடிகளை ஊ டுருவிச் சென்று, பிரித்துக் காட்டுவதனைக் கொண்டே, தேவி துஞ் சியதனைக் கூறும் அடி பின்னர்ப் புகுத்தப் பெற்றது என்பதனை விளங்கிக் கொள்ளலாம்.

அடிகள் புகுத்திய அடி காரண காரியங்களைப் பிரித்து விட்டமையால், அமைப்பு முறையில் ஒரு குறை யைத் தோற்றுவிக்கின்றது. எனினும், இக் குறையை ஈடு செய்யும் முறையில் அது நற் பயனையும் தருகின்றது. தேவி உட னிறந்தாள் போலும் என்ற எண்ணத்தை யிவ் விடைப் பிறவரல் தோற்று விக்கின்றது. இது உண்மை யின் மிகையே யெனினும், பின்னர் வியப்புச் சுவை தோன்ற உரைத்திருப்பதும், அரசியின் பெருமையைச் சிறப்பிப்பதும், அடிகளை அச் செய்தியை இக் காண்டத்

னும் குறிப் பிடத் தூண்டியது மாகிய பகுதியோடு இது இணைந்து நடக்கின்றது.

தம் பெரு நூல் உல களாவிய பெருங் காப்பிய மாக விளங்க வேண்டு மென்ற நோக்கத்தை யுடையவ ராகவே, அடிகள் இதனை இயற்றி யுள்ளார். எங்குத் தாம் முயன் றமைத்த சிறப்பினை நாம் கண்டு கொள்ளாமல் நழுவ விட்டு விடுகின்றோமோ யென் றஞ்சியே, அவர் அத னுடைய உல களாவிய வியல்பினைக் குறிப் பிட்டுங் காட்டி யிருக் கின்றார். திட்ட மிட்டுத் திட்டப் பெற்ற தாகையால், இது என்ன பயனை யெப்படிப் பயக்க வேண்டு மென்று அடிகள் எண்ணி யிருந்தாரோ, அவ் வண்ணமே செய்யும் முறையில் அமைந் திருக்கக் காண்கின்றோம்.

இவளோ, கொங்கச் செல்விகுடமலை யாட்டி
தென் தமிழ்ப் பாவை செய்ததவக் கொழுந்து
ஒருமா மணியாய் உலகிற் கோங்கிய
திரு மா மணி யெனத் தெய்வமுற் றுரைப்ப.

கணவனோ டிருந்த மண மலிகூந்தலாளைக் கண்டு, தெய்வ முற்று, சாலினி கூறிய சொற்க ளிவை. கண்ணகி உலகத்தவரால் ஒப் பற்ற முழு மாணிக்க மாகக் கருதிப் போற்றப் படுவாள் என்று அவள் கூறி யிருக் கின்றாள். இம் மதிப்பு காப்பியத் தலைவி யாகிய கண்ணகியைப் பற்றியதே யாம். எனவே, அவள் கதையை விவரிக்கும் நூலும் உலகினரால் உயர்ந்த தெனப் போற்றப் படும் தன்மை யுடைய தாக விருக்கும் என்று நாம் எதிர் பார்க்கலாம்.

சாலினி கூறிய சொற்களைக் கண்ணகி ஏற்றுக் கொள்ள வில்லை. அவளைப் 'பேதுறவு மொழிந்தனள்' எனக் குறிப் பிடுகின்றாள்; எனினும் அவள் 'மூ தறி வாட்டி' என்பதனையு மொப்பு கின்றாள். அன்று

கண்ணகி கருதியதனைப் போலவே, சாலினி கூற்றினை இக் காப்பியத்தின் உலகளாவிய தன்மையைக் குறிப் பிடுவ தாகக் கொள்ளுவது பொரு ளுடைய தாகாது எனக் கருது பவரு மிருக்கலாம். சாலினியின் சொற்கள் இக் காப்பி யத்தின் இயல்பைப் புலப் படுத்த வந்தவை யல்ல. அத னியல்பைப் புலப் படுத்தி யிருப்பதனை நினை வூட்ட வந்த வையே யாம்.

அடிகள் தம் கதையின் தொடக்கத்திலேயே, அத னுடைய முத னிகழ்ச்சியை விவரிப்பதற்கும் முன்ன ரேயே, அம் முத னிகழ்ச்சியின் அறிவிப் பாக அமை யும் ஊர் வலத்தை விவரிக்கும் சொற்களால் தம் நூலி னியல் பையும் புலப் படுத்தி விட் டிருக்கின்றார்.

மாநகர்க்கு ஈந்தார் மணம்.

புகார் நகரம் பெரிது; மிகப் பெரிது; அது மதுரை யினும் மாணப் பெரிது எனவும் கூறுகின்றனர். இப் பெருமையை – பரப் பளவை — க் குறிப் பிடுவதற் காகவா அடிகள் மா என்ற அடை மொழியைப் பயன் படுத்தி யுள் ளார்?

காவிரிப் பூம் பட்டினம் இரு பாக்கங்க ளாக அமைந் திருந்தது. பட்டினப் பாக்கம் என்பது அரச னும், அவனை யடுத்தோரும், உயர்ந்தோரும் உறைந் திருந்த பகுதி யாம். இப் 'பெரியோர் மல்கிய பட்டினப் பாக்கமே' காவிரிப் பூம் பட்டினம் என்ற பெய ருடன் விளங்கியது. இதுவே முதற் கண் தோன்றிய ஊராகும். இதனை யடிகள் பெரும் பெயர் மூ தூர் எனக் குறிப் பிட் டிருக்கின்றார். கோவலனும், கண்ணகியும் பிரிந்ததற்கு இம் மூ தூரி லிருந்தா ரனை வரும் துன்ப முற்றனர் எனத் தெரிவித் திருக்கின்றார்.

இப் பட்டினத்தை யடுத்துப் புதி தாகத் தோன்றியது மரு வூர்ப் பாக்க மென்ப தாம்; பட்டினத்தில் வாழ்ப வர்க்குப் பணிபுரிவார் தா மிருக்க அமைத்துக் கொண்ட

குடி யிருப்புகளைக் கொண்டது; இந்நகரில் வாணிகஞ் செய்ய வந்து தங்கிய புலம்பெயர் மாக்கள் இப் பகுதியிலேயே தம் மாளிகைகளை யமைத்துக் கொண் டிருந்தனர்.

சிறுகுறுங் கைவினைப் பிறர்வினை யாளரொடு
மறு வின்றி விளங்கும் மருவூர்ப் பாக்கம்.

பாடல் சால் சிறப்பினைப் பெருத தெனினும், மறு வின்றி விளங்கும் இதன் தகுதி நோக்கி, இதனையும் சேர்த்துக் குறிப் பிட எண்ணிய வடிகள், காவிரிப் பூம் பட்டினம் என்ற பெயரை விடுத்து, புகார் என்ற புதுப் பெயரையே இந் நூலி லெங்கும் வழங்கி யுள்ளார்.

இப் பட்டினப் பாக்கத்தில் உறையும் பேறு பெற்ற பெரு மக்கள் மருவூர்ப் பாக்கத்தை மதிப்பவ ராக விருப் பரா?

'அணிவிழா அறைந்தனன் அகநகர் மருங்கென்'

என்று மணி மேகலை கூறி யிருக்கின்றது. இந்திர விழாவின் தொடக்க விறுதிகளைப் பறை யறைவித்துத் தெரிவித்தவன் பட்டினப் பாக்கத்தின் எல்லையோடு தன் தொழிலை நிறுத்திவிட் டிருக்கின்ருன். மருவூர்ப் பாக்கத்தி லுறை பவர்களை, பட்டினப் பாக்கத்தார் மக்களாகக் கருதி யிருக்க வில்லை போலும்! அடிகளும் அவர்கள் மன நிலையைப் புலப் படுத்துவார் போலவே, மருவூர்ப் பாக்கத்தி லிருந்தவரை மாக்கள் எனக் குறிப் பிட் டுள்ளார்.

காவிரிப் பூம் பட்டினத்தில் ஒரு மாத காலம் நிகழும் பெரு விழா இந்திர விழா எனப் படும். அது நிகழுங் காலத்தில், தேவர்களும் தம் உலகை விட்டு, இந்நகரத்தில் வந்து தங்கி யிருப்ப ரென்று மணி மேகலை, சிலப் பதிகாரம் என்ற இரு நூல்களும் கூறி யுள்ளன. திரு விழாவின் சிறப்பும், பெருமையும் அதனைக் காணக் கூடும் மக்கட் பெருக்கால் மிகும். எனினும், அவ் விழாவின்

8.

தொடக்க விறுதிகளை மருவூர்ப் பாக்கத்து வீதிகளில் பறை யறைந்து தெரிவிக்கும் வழக்க மில்லை. தேவர்களுக்கே அழைப்பு அனுப்பவ தில்லை என்று பட்டினப் பாக்கத் தார் தம் பெருமிதம் தோன்றக் கூறுவார் போலும்!

சிலப் பதிகாரம் மக்களைப் போற்றும் மாண்பு மிக்க நூல். ஆகவே அதன் முதனிகழ்ச்சியின் அறிவிப்பும், அதன் கண் கலந்து கொள்ள வேண்டு மென்ற அழைப்பும் மருவூர்ப் பாக்கத்தவருக்கும் விடப் பெற் றிருக்கின்றது. மாசாத்துவான் நிகழ்த்திய ஊர் வல மாக விருப்பின், அது பட்டினப் பாக்கத்தைச் சுற்றி வருவதனோடு நின்று விட் டிருக்கும். அடிகள் கற்பித் திருப்ப தாகையால், அது மா நகர் முற்றிலும் வலம் வந்தது. அடிகள் மா என்ற அடை மொழியால் மருவூர்ப் பாக்கத்தையே குறிப் பிட் டிருக்கின்றார்.

அக் காலத்தே காவிரிப் பூம் பட்டினம் ஒன்றினில் மட்டுமே, வெளி நாட்டவர் வந்து, தங்கி, வாணிகஞ் செய் தனர். இவர்க ளுடைய குடி யிருப்புகளை

கயவாய் மருங்கிற் காண்போர் தடுக்கும்
பயனறவு அறியா யவனர் இருக்கையும்,
கலம்தரு திருவின் புலம்பெயர் மாக்கள்
கலந்திருந் துறையும் இலங்குநீர் வரைப்பும்

எனச் சிலப் பதிகாரம் விவரித் திருக்கின்றது. பட் டினப் பாலையும், வேற்று நாட்டவர், நகர மக்களோடு கலந் துறைந்தனர் என்பதனைக் கூறுகின்றது. அவ்வாறு தங்கி யிருந்தவர் 'மொழி பல பெருகிய பழிதீர் தேஎத்துப் புலம் பெயர் மாக்கள்' என்பதனைப் பட்டினப் பாலை கூறு கின்றது. அவர்கள் தங்கி யிருந்த குடி யிருப்புகள் 'சாறயர் மூதூர் சென்று தொக்காங்கு'க் காணப் பெறும். சீனர், அராபியர், ரோமர், கிரேக்கர் என்ற பல மொழி பேசுவார் உறை விடம் வேறு எப்படித் தோன்றும்?

கண்ணகி கோவலரின் திரு மணத்தில் வேற்று நாட்டு மக்கள் பலரும் கலந்து கொண்டனர். எனவே, இக் காப்பியக் கதையின் முத னிகழ்ச்சியைப் பல தேய மக்கள் உடனிருந்து நிகழ்த்தி வைத்தனர். ஆகவே, இக் கதையின் பொருளும், முடிவும் உல களாவிய தாக உருப் பெற்றதனில் வியப் பில்லை யன்றோ? கண்ணகியின் வாழ்க்கை நிகழ்ச்சிகள் துன்ப மூட்டலாம், எனவே அவள் புகார் நகரை விட்டு நீங்கியதனைக் குறித்து மூதூர், மக்கள் மட்டும் வருந்திய தாக அடிகள் குறிப் பிட் டுள்ளார். ஆனல் காப்பியக் கதை அனைவருக்கும் மகிழ்வூட் டும். எனவே, திரு மணத்தில் மருவூர்ப் பாக்கத்து மாக் களும் கலந்து கொண்டு மகிழ்ந்தனர் என்று அடிகள் குறிப் பிட் டிருக்கின்றார்.

தம் காப்பியத்தி னியல்பையும், பொருளையும் அடிகள் அதன் தொடக்க நிகழ்ச்சியை விவரிக்கு முன் உணர்த்தி விட் டிருக்கின்றார். மூன்று தமிழ் நாடுகளி லும் நிகழ்வ தாகவும், மூன்று காண்டங்களை யுடைய தாகவும் விரியும் இப் பெரு நூலின் போக்கும், பெருமை யும் மூன்று சொற்களில் அடங்கி யிருக்கும் வண் ணம் அமைத் திருக்கும் அடிகளின் திறன் அள விட் டறிய மாட்டாததே யாம்.

மாநகர்க்கு ஈந்தார் மணம்.

புகார் நகரக் கடைத்தெரு 'விருந்தின் தேஎம் ஒருங்கு தொக்கன்ன' காட்சியைத் தோற்றுவிக்கும் தகுதி சிறந்தது. எனவே மா நகர் உலகினரைக் குறிப் பிடுவ தாகக் கொள்ளத் தக்கது. இவர் இந் நூலின் தன் மையை உணரின் இதனை விரும்பி ஏற்றுக் கொள்வர் இதனை எதிர் பார்த்தவராய் அடிகள் இந் நூலை யருளி யிருக்கின்றார் என்பதனை ஈந்தார் என்பது உணர்த் தும். இந் நூலின் பயனைக் குறிப் பிடுவது மணம் என்ற இறுதிச் சொல் லாகும்.

அடிக ளுடைய கலைத் திறனையும், அவர் நூலின் அமைப் பழகையும் அறிந்து மகிழ்ந்தோம். அவர் வெளிப் படுத்தும் பொருள் மாட்சியை அவர் படைத் துள்ள ஓவி யங்களின் உட் பொருளை அறியத் தெரிந்துகொள்ளலாம். இந் நூ லுக்கு இணை யாகக் காட்டக் கூடிய பெருங் கலைக் காப்பியம் இவ்வுலகினில் இது வொன்றே யாம்.

CT0020562
T 821.081 414
MAR

தொல்காப்பியர் நூலகம்